# நமது செட்டிநாடு

மலர் 8 ✿ மணம் 10 ✿ ஸ்ரீசுபகிருது ஆண்டு ✿ மாசி ✿ பிப்ரவரி 2023 ✿ ரூ.25
Namadhu Chettinad ✿ Volume 8 ✿ Issue 10 ✿ February 2023 ✿ Rs.25

## கோவிலூர் மடாதிபதி சீர்வளர்சீர் நாராயண ஞானதேசிக சுவாமிகள் நேர்காணல்

(பக்கம் - 8)

மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச நகரத்தார் வர்த்தக மாநாடு IBCN 2023 கலந்துரையாடல் நிகழ்வில் செட்டிநாடு குழும மேலாண் இயக்குனர் டாக்டர் எம்.ஏ.எம்.ஆர்.முத்தையா அவர்கள் லெட்சுமி செராமிக்ஸ் நிறுவனர் - மேலாண் இயக்குனர் திரு.எஸ்.முத்துராமன் அவர்களுடன் கலந்துரையாடும் காட்சி. விவரம் பக்கம் - 6

## ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம் மேலாண்மைக் கழகம் 2023 - 2026 நிர்வாகிகள்

இடம் இருந்து வலம்: திரு.S.அண்ணாமலை (உதவிச் செயலாளர்) - காரைக்குடி, திரு.PL. ராமநாதன் (உதவிச் செயலாளர்) - செவ்வூர், திரு.KR. வீரப்பன் (உப தலைவர்) - நற்சாந்துபட்டி, திரு.லேணா. நாராயணன் (தலைவர்) -உலகம்பட்டி, திரு.PLM. முத்தையா (உப தலைவர்) - வலையபட்டி, திரு.S.கதிரேசன் (செயலாளர்) - தேவகோட்டை, திரு.M.செந்தில்நாதன் (பொருளாளர்) - சண்முகநாதபுரம்.

UI GreenMetric
World University Rankings

Chettinad Academy of Research and Education
(Deemed to be University)

# 2022 UI GREENMETRIC
## World University Rankings

## RANKED 4TH IN INDIA

### Ranked 180th Globally

www.care.edu.in

நமது
செட்டிநாடு

மலர் 8 மணம் 10 பிப்ரவரி 2023
ஸ்ரீசுபகிருது ஆண்டு மாசி மாதம்

ஆசிரியர்: ந.ஆவுடையப்பன்
ஆசிரியர் குழு:
புதுவயல் செல்லப்பன்
குழ.கதிரேசன்
ஆறாவயல் ஆர்எம்.சண்முகம்
முனைவர் எம்.எஸ்.ஸ்ரீலக்ஷ்மி
விசாலாட்சி சுப்பிரமணியம்
புதிய சந்தா, சந்தா புதுப்பித்தல்,
தட்டச்சு: முரு.மலர்விழி
தொலைபேசி: 044-42951888
வடிவமைப்பு: செ.ஜீவானந்தகுமார்
விளம்பரம் தொடர்புக்கு:
99622 43750

இணைய இதழ் முகவரி: www.namadhuchettinad.com
செய்திகள், கட்டுரைகள், கதைகள், கவிதைகள் மற்றும் கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

நமது செட்டிநாடு மாத இதழ்
ராணி சீதை அரங்கம், 3-வது தளம்,
603, அண்ணா சாலை, சென்னை - 600 006
தொலைபேசி: 044-42951888

கட்டுரைகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

இதழ் சந்தா விவரம்

| | |
|---|---|
| ஓராண்டு | ரூ.300 |
| இரண்டாண்டு | ரூ.500 |
| ஐந்தாண்டு | ரூ.1250 |

(சந்தா செலுத்த, புதுப்பிக்க, விளம்பரம் செய்ய)

1) கரு.மணிகண்டன்,
மக்கள் தொடர்பு அலுவலர்
காரைக்குடி 86818 28284
2) திரு.ஆர்எம்.வி.ராமசாமி
கோட்டையூர் : 94891 77006
3) திரு.MR.பழம் நாச்சியப்பன்
சென்னை : 97899 55526
4) திருமதி அரு.வள்ளிக்கண்ணு
திருச்சி : 75982 15797 / 99654 24996
5) திரு. ஆர்எம்.அழகப்பன்
கண்டரமாணிக்கம் : 98401 23931
6) திரு.விஆர்.பாலமுருகன்
கோவை : 97916 32421, 83000 51512
7) திருமதி வி.வள்ளியம்மை
கோவை : 88706 52054
8) திரு. A.R.முத்தழகப்பன்
சேலம் : 98421 82273
9) திரு. AL.தண்டாயுதபாணி
பெங்களூரு : 090368 62231

மின்னஞ்சல்
namadhuchettinad@gmail.com



# முத்தான மூன்று முக்கிய நிகழ்வுகள்

சமீபத்தில் நமது வரலாற்றில் இடம் பெறும் முக்கியத்துவம் வாய்ந்த மூன்று நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

நமது கோவிலூர் மடத்தின் 14 ஆவது பட்டமாக சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்கள். கோவிலூர் மடத்தோடு 25 ஆண்டுகளுக்கு மேலாக தன்னை இணைத்துக் கொண்டு அதன் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியவர் மடாதிபதியாக பொறுப்பேற்று இருப்பது மடத்தின் வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருக்கும். சர்வதேச அளவில் பங்கேற்று செயல்பட்டு வரும் நம்மவர்கள் வர்த்தகம், வாழ்க்கை முறை, கல்வி மற்றும் கலாச்சாரம், வேலைவாய்ப்பு என பல்வேறு துறைகளில் பல சவால்களைச் சந்தித்து வருகின்றனர். இவற்றிற்கெல்லாம் சரியான முறையில் தீர்வு கண்டு சமுதாயத்தின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்ல ஆக்கப்பூர்வமான ஆலோசனைகள் தேவைப்படும் காலகட்டத்தில் புதிய மடாதிபதி பொறுப்பேற்றுள்ளார்கள். இவற்றை எல்லாம் நேர்மறை கண்ணோட்டத்தில் அணுகி நல்வழிப்படுத்த புதிய மடாதிபதி அவர்களின் ஆலோசனை, அறிவுரை மற்றும் வழிகாட்டுதல் நமக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திர மேலாண்மைக் கழகத்தின் 2023 - 2026 ஆம் ஆண்டிற்கான நிர்வாகப் பொறுப்பை கவனிக்க ஈரோடு திரு.லேணா.நாராயணன் (உலகம்பட்டி) அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்றுள்ளது. ஸ்ரீகாசி விசுவநாதர் கோவில் சர்வதேச தரத்தில் மேம்படுத்தப்பட்டுள்ளது. அயோத்தியில் ஸ்ரீராமர் கோவில் பிரமாண்டமாக உருவாகி வருகிறது. இந்நிலையில் காசியிலும், அயோத்தியிலும் அமைந்துள்ள நகர சத்திரங்களை அதற்கு ஏற்ப மேம்படுத்த வேண்டும் என்பது நகரத்தார் அனைவரின் எதிர்பார்ப்பாகும். இந்த எதிர்பார்ப்பை புதிய நிர்வாகக் குழு நிறைவேற்றும் என நம்பலாம்.

மலேசிய நாட்டில் IBCN-2023 என்ற சர்வதேச நகரத்தார் வர்த்தக 6-வது மாநாடு சிறப்பாக நடந்து முடிந்துள்ளது. இந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளில் வர்த்தகம், தொழில் புரியும் நகரத்தார் பிரதிநிதிகள் பங்கேற்று தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். மேலும் வர்த்தகம், தொழில் துறையில் சிறப்பாக செயல்படுவதற்கு நிபுணர்களின் கருத்துக்களையும் பெற்றனர். நகரத்தார் சமூகம், பொருளாதார ரீதியாக உயர, தொழில் சார்ந்த சமூகமாக தொடர்ந்து முன்னேறிச் செல்ல வேண்டிய அவசியத்தின் வெளிப்பாடாக IBCN- 2023 அமைந்தது சிறப்பாகும்.

கோவிலூர் மடாதிபதி அவர்களை வணங்கியும், ஸ்ரீகாசி நாட்டுக்கோட்டை நகர சத்திர மேலாண்மைக்கழக புதிய நிர்வாகிகளை வாழ்த்தியும், IBCN-2023 அமைப்பாளர்களை பாராட்டியும் நமது செட்டிநாடு மகிழ்கிறது.

# Chettinad TV

செட்டிநாடு குழுமத்தின் ஒரு அங்கமான CHETTINAD TV என்னும் யூடியூப் சேனல் தொடங்கப்பட்டுதொடங்கப்பட்டுள்ளது. உலகமெங்கும் வசிக்கும் நகரத்தார்களை ஒன்றிணைக்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்ட இந்த சேனலில் ஆன்மிகம், இலக்கியம், கலை, பண்பாடு, மருத்துவ குறிப்புகள், செட்டிநாட்டில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகள், நகரத்தார்களின் மாநாடு என அனைத்து வகையான நிகழ்ச்சிகளையும் தொகுத்து வழங்கக் கூடிய பணியை முன்னெடுத்து செயல்படுத்தி வருகின்றது இதுவரை 80க்கும் மேற்பட்ட வீடியோக்கள் பதிவேற்றம் செய்யப்பட்டு பல்லாயிரக்கணக்கான நேயர்கள் பார்த்து பயன் அடைந்துள்ளார்கள்.

இந்த Chettinad Tv youtube சேனல் நிகழ்ச்சிகளை நகர்த்தார்கள் அனைவரும் கீழ்க்கண்ட இணைப்பில் காணமுடியும்.

https://www.youtube.com/@chettinadtv

நிகழ்ச்சிகளை Chettinad Tv youtube சேனலில் தடையின்றி காண சப்ஸ்கிரை செய்யக் கேட்டுக் கொள்கிறோம். மேலும் தங்கள் குடும்பத்தினர், உறவினர்களையும் 'செட்டிநாடு டிவி' சேனலுக்கு சப்ஸ்கிரைப் செய்ய கேட்டுக்கொள்ள வேண்டுகோள் விடுக்கிறோம். கீழே கொடுக்கப்பட்டுள்ள QR code ஐ Google scan செய்து செட்டிநாடு டிவி யுடியூப் சேனலுக்குள் நுழைந்து சப்ஸ்கிரைப் பட்டனை அழுத்தி செட்டிநாடு டிவியின் வாடிக்கையாளர் ஆக அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். சப்ஸ்கிரைப் செய்ய கட்டணம் ஏதும் இல்லை. Chettinad Tv Youtube சேனல் பற்றிய தங்கள் கருத்துக்களை கீழ்க்கண்ட முகவரிக்கு தபால் மூலம் தெரிவிக்க கேட்டுக் கொள்கிறோம்.

முகவரி:
"நமது செட்டிநாடு"
ராணி சீதை அரங்கம்,
3வது மாடி,
603, அண்ணாசாலை
சென்னை - 600006

## உள்ளே...


சென்னை செட்டிநாடு மருத்துவமனை வளாகத்தில் ரூபாய் 50 கோடியில் டாக்டர் எம்.ஏ.எம்.ராமசாமி கேன்சர் இன்ஸ்டிடியூட்..... 06

கோவிலூர் மடாதிபதி சீர்வளர்சீர் நாராயண ஞானதேசிக சுவாமிகள் நேர்காணல்.....08

பார்த்தேன் ... படித்தேன் ... பகிர்கிறேன்.....12

பழமையும் புதுமையும் போற்றிய கோவிலூர் ஆதீனம் மெய்யப்ப ஞான தேசிக சுவாமிகள்.....15

தொழில் தொடங்கலாம் வாங்க .....20

திட்டமிடப்பட்ட நிதி நிர்வாகம்.....26

நாட்டரசன்கோட்டையில் 'ஆயா அப்பத்தா' வீட்டில் 70 பேரப்பிள்ளைகள் கோலாகலம்.....28

மனம் பணம் மந்திரம் .....32

செட்டிநாட்டுப் பெயர்கள்! தெய்வ பக்தியின் வெளிப்பாடு!!.....33

வெற்றிக்கு உதவும் உத்திகள்!.....35

நகரத்தார் சிகரத்தார் .....37

நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு.....39

பறவைகள் பலவிதம்.....42

வரலாறு சொல்லும் மடல்கள்.....44

சந்தா படிவம்!.....45



S. விஜயகுமார்

V. விசாலாட்சி

பள்ளத்தூர்

*Manufacturers, Wholesalers & Retailers*

**CHENNAI:** W-182, NORTH MAIN ROAD
ANNA NAGAR WEST EXTN., TN-600 101.

**SURAT:** SDB DREAM CITY
KHAJOD, GUJARAT - 395007.

044 4553 6003 | 9383007477

www.vstardiamonds.com

## சென்னை செட்டிநாடு மருத்துவமனை வளாகத்தில்

# ரூபாய் 50 கோடியில் டாக்டர் எம்.ஏ.எம்.ராமசாமி கேன்சர் இன்ஸ்டீடியூட்

### மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச நகரத்தார் வர்த்தக மாநாட்டில் செட்டிநாடு குழும மேலாண் இயக்குனர் டாக்டர் எம்.ஏ.எம்.ஆர்.முத்தையா அவர்கள் அறிவிப்பு

மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூர் நகரில் ஆறாவது IBCN-2023 (International Business Conference of Nagarathars) மாநாடு கோலகலமாக நடந்து முடிந்துள்ளது. இந்த மாநாட்டில் செட்டிநாடு குழும மேலாண் இயக்குனர் டாக்டர் எம்.ஏ.எம்.ஆர்.முத்தையா அவர்கள் பங்கேற்று உரை நிகழ்த்தியதோடு, லெட்சுமி செராமிக்ஸ் நிறுவனர் மற்றும் மேலாண் இயக்குனர் திரு. எஸ்.முத்துராமன் அவர்களுடன் நடந்த நேருக்கு நேர் கலந்துரையாடல் நிகழ்ச்சியிலும் (Interactive Session) பங்கேற்று திரு.எஸ்.முத்துராமன் அவர்கள் எழுப்பிய வினாக்களுக்கு பதில் அளித்தது மாநாட்டின் முத்தாய்ப்பாக அமைந்தது.

இந்த கலந்துரையாடல் நிகழ்வில் டாக்டர் எம்.ஏ.எம். ஆர்.முத்தையா அவர்கள்தான் செட்டிநாடு அரசர் குடும்பத்திற்கு பிள்ளை கூட்டப்பட்டு வந்த நிகழ்வுகளை விவரித்து கூறினார். தனக்கும் தன் தந்தை டாக்டர் எம்.ஏ.எம்.ராமசாமி செட்டியார் மற்றும் தாயார் சிகப்பி ஆச்சி அவர்களுக்கும் இருந்த புரிதல் பற்றியும் எடுத்துக் கூறினார். தன்னுடைய தொழில் ஆர்வத்தை அறிந்த டாக்டர் எம்.ஏ.எம். அவர்கள் தன்னை எவ்வாறெல்லாம் ஊக்குவித்தார் என்பது பற்றியும் கூறி, தன்னுடைய தொழில் முயற்சியில் தான் தடுமாறிய சமயங்களில் தனக்கு தகுந்த ஆலோசனைகள் வழங்கி தன்னை தாங்கிப்பிடித்து ஒரு தொழில் சாம்ராஜ்யம் கட்டமைப்பதற்கு உதவியதை நெகிழ்ச்சியுடன் விவரித்தார். மனவலிமையும், கொடையுள்ளமும், எதையும் எதிர் கொள்ளும் துணிவும் கொண்ட டாக்டர் எம்.ஏ.எம். அவர்கள் உடனிருந்து என் முயற்சிகளுக்கு மறுப்பேதும்

தெரிவிக்காமல் வழிகாட்டியதால் தான், மென்பொருள் பொறியாளரான என்னால் புகழ்பெற்ற செட்டிநாடு குழுமத்தை மென்மேலும் முன்னெடுத்துச் செல்லும் வலிமைபெற்ற தொழில் அதிபராக உயர முடிந்தது என நெகிழ்வுடன் குறிப்பிட்டார். மேலும் அரச குடும்பத்தினர் பல்வேறு அறக்கட்டளைகளை நிறுவியுள்ளார்கள். அதன் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள் உதவி வழங்கி வருவதை நினைவு கூர்ந்து,தானும் அதுபோல் தனது தாயார் சிகப்பி ஆச்சி அவர்கள் நினைவாக அவரது பெயரில் அறக்கட்டளை தொடங்கி முதியோர் இல்லம், தொடக்கப்பள்ளி, சிகப்பி ஆச்சி கட்டிடம், கன்வென்சன் மையம் உண்டாக்கியதைக் குறிப்பிட்டார்.

மேலும் குறிப்பிடுகையில் இந்தியாவில் புற்றுநோய்க்கு சிகிச்சை பெற அதிக செலவு செய்ய வேண்டியுள்ளது. இதனால் இந்த நோய்க்கான சிகிச்சையை வசதி படைத்தவர்களால் மட்டுமே எளிதாக பெற முடியும் என்ற நிலை உள்ளது. ஏழை எளியவர்களும் புற்றுநோய்க்கான சிகிச்சையை எளிதாக பெறுகின்ற வகையில் தனது தந்தை டாக்டர் எம்.ஏ.எம். அவர்கள் நினைவாக சென்னை கேளம்பாக்கத்தில் அமைந்துள்ள செட்டி நாடு மருத்துவமனை வளாகத்தில் ரூபாய் 50 கோடி செலவில் “டாக்டர் எம். ஏ.எம். ராமசாமி கேன்சர் இன்ஸ்டிடியூட்” அவரது பிறந்த நாளாக செப்டம்பர் 30 ஆம் தேதி தொடங்கப்படும் என்ற அறிவிப்பை இந்நிகழ்ச்சியில் வெளியிட்டார். இந்த அறிவிப்பை மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் பலத்த கரவொலி எழுப்பி வரவேற்றார்கள்.

மேலும் இந்த கலந்துரையாடலில் Trader, Business man,Entrepreneur, Industrialist பற்றிய தனது கருத்துக்களை வெளியிட்டு வெற்றிகரமான தொழில் அதிபராக திகழ என்னென்ன அடிப்படை தேவைகள் என்பது பற்றி எடுத்துக் கூறினார். நிகழ்ச்சியின் இறுதியில் பார்வையாளர்கள் எழுப்பிய வினாக்களுக்கு உரிய பதிலளித்தது நிகழ்ச்சிக்கு சிறப்பு சேர்த்தது.

சென்னை ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியில் 4-2-2023 அன்று மைய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு துறை ராஜாங்க அமைச்சர் திரு. எல்.முருகன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற “Mega Entrepreneurship Progrmme” நிகழ்ச்சியில், செட்டிநாடு குழும மேலாண் இயக்குனர் டாக்டர் **எம்.ஏ.எம்.ஆர்.முத்தையா** அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு விழாவின் முக்கிய உரை (Key note address) நிகழ்த்தினார்.

# கோவிலூர் மடாதிபதி சீர்வளர்சீர்

## நாராயண ஞானதேசிக சுவாமிகள் நேர்காணல்

சைவமும் தமிழும் உயர்ந்து விளங்கிய செட்டிநாட்டில் வேதாந்தத்தை தமிழில் பயிற்றுவிக்க ஒரு வேதாந்த மடத்தை கி.பி 1818--ல் கோவிலூரில் உருவாக்கியவர் சீர்வளர்சீர் முத்துராமலிங்க ஞானதேசிக சுவாமிகள். அவர்களே கோவிலூர் மடாலய முதல் மடாதிபதியும் ஆவார்கள். நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபில் உதித்த இவர், ஞானமார்க்கத்தில் ஈடுபட மனப்பக்குவமே தகுதி எனவும், வேதாந்தத்தில் நிறைவு பெற சாதி, மதம், குலம் சம்பிரதாயங்கள் தடையில்லை என்றும், பக்தியே முக்திக்கு வழி என்றும் உபதேசித்தார். இவர் மூலம் பல அன்பர்கள் வேதாந்தம் கற்றுத் தேர்ந்தனர். இவர் அனைவராலும் ஆண்டவர் என்று அன்புடன் அழைக்கப் பெற்றார். வேதாந்த வடமொழி நூல்களை எல்லோரும் எளிதாகப் படித்துப் பக்குவம் பெற வேண்டும் என விரும்பினார், எனவே, அவரே வடமொழி நூல்களையெல்லாம் தமிழில் மொழி மாற்றம் செய்து எளிய தமிழில் பாடம் சொல்லும் முறையை ஏற்படுத்தினார்.

மேலும் இயல்பாகவே ஆலயத் திருப்பணியில் ஈடுபாடுடைய நகரத்தாரை, ஆண்டவர் தம் அருளாணை-யினால் நெறிப்படுத்தி அவர்கள் வாழும் ஊர்கள் மற்றும் வணிகம் செய்யும் ஊர்களெங்கும் சிவன் கோயில் கட்டி வழிபடுமாறு தூண்டினார். ஆண்டவர் காலத்தில் செட்டிநாடெங்கும் பற்பல சிவன் கோயில்களும், மடங்களும் தோற்றுவிக்கப்பட்டன. இதனை சேந்தனி பழநியப்ப ஐயா இவ்வாறு குறிப்பிடுகிறார்.

"மடம் உண்டோ? சிவாலயங்கள் மிகுதி உண்டோ?
வடகயிலைக்கு இறைவனெனும் முத்துராம
வள்ளல் திருக் கழநிநகர் வாராமுன்னம்"

ஆண்டவரால் நிறுவப் பெற்ற கோவிலூர் மடத்தின் தலைமைப் பொறுப்பை, நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபில் பிறந்தவர்களே ஏற்று நடத்துவது மரபா-யிருக்கிறது. ஆண்டவருக்கு பிறகு வந்த மடாதிபதிகளும் அவர் வழி நடந்து வேதாந்த நூல்களை பயிற்றுவிற்றும், இறைவன் திருப்பணியில் ஈடுபட்டும், மற்றவர்களையும் ஈடுபட செய்தும் வரலாயினர்.

இன்று ஆந்திரா மாநிலம் திருக்காளத்தியில் உள்ள காளகத்தீசுவரர் கோயில் ஒரு காலத்தில் மிகுந்த சிதிலமடைந்த நிலையில் இருந்தது. அதுசமயம் கோவிலூர் ஐந்தாவது பட்டம் திருக்களர் ஆண்டவர் என்னும் சீர்வளர்சீர் வீரசேகர ஞானதேசிக சுவாமிகளின் அறிவுரைப்படி தேவகோட்டை மைனர் குடும்பத்தினரால் சீர்திருத்தப்பட்டு, குடமுழுக்கு செய்யப் பெற்றது. இது போல் எண்ணிலடங்கா கோயில் திருப்பணிகள் கோவிலூர் மடாதிபதிகள் அறிவுரைப்படி செய்யப்பட்டுள்ளன. நகரத்தார்களை அதிக அளவில் கோயில் திருப்பணிகளில்

ஈடுபடுத்தியவர்கள் கோவிலூர் மடாதிபதிகளே என்றால் அது மிகையாகாது.

இந்த வகையில் கோவிலூர் மடாலய 12-வது பட்டம் சீர்வளர் நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள், மடத்தை

நிறுவிய கோவிலூர் ஆண்டவரின் 6-ஆம் தலைமுறைப் பேரன். பல திருப்பணிகளுக்குச் சொந்தக்காரர். கையில்தான் ஈட்டிய பெரும் பொருளுடன் வந்தவர். அத்தனையும் கல்விக்கும் கோயில் திருப்பணிகளுக்கும் செலவழித்தவர். பலகல்வி நிறுவனங்களை நிறுவியவர். கோவிலூரைச் சார்ந்த கிளைமடங்கள் அத்தனையும் புதுப்பித்து அனைத்து வசதிகளோடு அம்மடங்களை தம் சொந்தக்காலிலே நிற்கச் செய்தவர். அவற்றின் வருமானத்திற்குப் பல கடைகளையும், கல்யாண மண்டபங்களையும் கட்டியவர். கோவிலூர் ஆண்டவர், திருக்களர் ஆண்டவர், நாச்சியப்ப சுவாமிகள் ஆகிய மூவரின் காலமும் வரலாற்று சிறப்புமிக்கவை.

13-வது பட்டம் சீர்வளர்சீர் மெய்யப்ப ஞானதேசிக சுவாமிகள் காலமும் பொற்காலம் எனலாம் இவர் நாச்சியப்ப சுவாமிகளின் கனவு நனவாக அயராது உழைத்தவர். பல இலக்கியங்களையும், வேதாந்தப் புத்தகங்களையும் அச்சிட்டவர். கோவிலூரில் கலைக் கல்லூரியை தொடங்கியவர். திங்கள்தோறும் திருக்குறள், முற்றோதல், இலக்கியப் பூங்கா ஆகியவற்றை நடத்தியவர். கடந்த

தை 3-ஆம் தேதி (17/01/2023) அன்று முக்தியடைந்தார்.

அவரைத் தொடார்ந்து சீர்வளர்சீர் நாராயண ஞானதேசிக சுவாமிகள் தை 12-ஆம் தேதி (26/01/2023) அன்று கோவிலூர் வேதாந்த மடத்தின் 14-வது மடாதிபதியாக பொறுப்பேற்றுக் கொண்டார். நாராயணன் என்னும் இயற்பெயர் கொண்ட இவர், காரைக்குடியில் இளையத்தக்குடி கோவில் - பட்டினசாமி பிரிவு "ஈப்போ நாவன்னா" வீட்டில் நாராயணன் செட்டியார் - பாலாம்பாள் ஆச்சி இணையரின் மகனாக பிறந்து, B.Com., பட்டம் பெற்று, பங்குச்சந்தை ஆலோசகராக இருந்து, "ஐயர் அண்டு கோ" என்னும் பட்டயக் கணக்கர் நிறுவனத்தை நடத்தி வந்தார். நிதி நிர்வாகத்தில் சிறந்து விளங்கிய இவர், அன்னலெட்சுமி கமர்ஷியல் கிச்சன் என்னும் பெயரில் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் உணவகம் நடத்தி வந்தார். இவரின் மனைவி

பெயர் லெட்சுமி ஆச்சி, இவர்களுக்கு ஹரிநாராயணன் என்ற ஒரு மகனும், வள்ளியம்மை, பாலாம்பிகை என்ற இரண்டு மகள்களும், பேரன் பேத்திகளும் உள்ளனர்.

## புதிய மடாதிபதி சீர்வளர்சீர் நாராயண ஞானதேசிக சுவாமிகளுடனான நேர்க்காணல்

**வணங்குகிறேன் சுவாமி, தங்களுக்கும் கோவிலூர் மடாலயத்திற்குமான தொடர்பு ஏற்பட்டது எப்படி? துறவறம் பூணும் எண்ணம் ஏற்பட்டது எதனால்?**

1995-ல் கோவிலூர் மடாலயத்தின் 12-வது மடாதிபதியாக நாச்சியப்ப சுவாமிகள் பொறுப்பேற்றார். அப்போது கிளைமடங்களின் கணக்குகள் தனித்தனியாக அந்தந்த மடங்களில் இருந்தன. அதனை ஒன்றிணைக்க சுவாமிகள் எண்ணினார். காரைக்குடி ஆடிட்டர் SP.ST. பழனியப்பன் அவர்கள், சுவாமிகளுக்கு நெருங்கிய உறவினர், அவர் என்னை சுவாமிகளிடம் அறிமுகப்படுத்தி வைத்தார். நான் கம்ப்யூட்டர் மூலம் அனைத்து மடங்களின் கணக்குகளையும் ஒன்றிணைத்தேன். இப்படித் தான் எனக்கும் கோவிலூருக்குமான தொடர்பு உண்டானது. அதன் பிறகு சுவாமிகள் என்னிடம் மடங்கள் அனைத்தையும் எப்படி ஓரிடத்தில் இருந்து நிர்வாகம் செய்வது என்றும், எப்படி நிதி நிர்வாகம் செய்வது என்றும், தான் சமுகத்திற்கு செய்ய நினைக்கும் சேவைகள் குறித்தும் தொடர்ந்து ஆலோசிக்க ஆரம்பித்தார். நானும் எனக்கு இருந்த அனுபவத்தில் சில ஆலோசனைகள் கூறி வந்தேன். பின்னர் சுவாமிகள் என்னை கோவிலூர் மடாலயத்தின் ஒரு அறங்காவலராக நியமித்தார். தொடர்ந்து 25 ஆண்டுகளுக்கு மேலாக நான் அறங்காவலராக இருந்து வருகிறேன். ஆகையால் எனக்கு கோவிலூர் தொடர்பான அனைத்து மடங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் நிர்வாகம் பற்றி முழுமையாக தெரியும் என்ற அடிப்படையிலும் நாச்சியப்ப சுவாமிகளின் நம்பிக்கையைப் பெற்றிருந்ததின் அடிப்படையிலும்

13-வது மடாதிபதியான மெய்யப்ப சுவாமிகள் சிறிது உடல்நலம் சரியில்லாத காலத்தில் என்னை அழைத்து "நீங்க துறவறம் ஏற்று அடுத்த மடாதிபதியாக இருக்க முடியுமா?" என்று கேட்டார். பொதுவாக துறவு பூண வேண்டும் என்ற எண்ணம் எனக்கு எப்போதும் இருந்ததில்லை. அதே நேரம் சுவாமிகள் யாரிடமும் இப்படி நேரடியாக கேட்பதில்லை. யார் வேண்டுமானாலும் மடாதிபதி ஆகிவிட முடியாது! இதற்கு முந்தைய காலகட்டங்களில் சிலருக்கு அந்த வாய்ப்பு கிடைத்து, பின்னர் அது மாற்றப்பட்டு இருக்கின்றன. சுவாமிகள் என்னிடம் கேட்டதை நான், கடவுள் அனுக்கிரகமாக கருதி "உங்கள் விருப்பப்படி நான் ஏற்றுக்கொள்கிறேன் சுவாமி. பின்னர் நீங்க வேறொருவருக்கு மாற்ற நினைத்தாலும் எனக்கு முழு சம்மதம்" என்று கூறினேன். ஆனால் சுவாமிகளுக்கு இறுதி வரை வேறொருவரை கொண்டுவர வேண்டும் என்ற எண்ணம் வரவில்லை. சுவாமிகள் முக்தி அடைந்த பின் அவர்களின் எண்ணப்படி நான் துறவறம் ஏற்று, அவர்களின் உயில் படி அடுத்த மடாதிபதியாக பொறுப்பேற்றுக் கொண்டேன்.

**கோவிலூர் மடாலயத்தின் மரபுப்படி அடுத்த "மடாதிபதி" எப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார்?**

நடப்பில் இருக்கும் மடாதிபதியால் தமது இறுதி காலத்தில் அடுத்த மடாதிபதியாக ஒருவரை தேர்வு செய்து உயில் எழுதி வைக்கப்படும். அடுத்த மடாதிபதி குறித்த செய்திகள் எதுவும் வெளியில் சொல்லப்படாது, ரகசியம் காக்கப்படும். முக்தி அடைந்த பின் உயில் வெளிக்காட்டப்படும். மெய்யப்ப சுவாமிகள் என் பெயரில் எழுதிய உயில் நாச்சியப்ப சுவாமிகளின் நெருங்கிய நண்பரும் கோவிலூர் மடாலய அறங்காவலருள் ஒருவருமான ஆடிட்டர் சிவசுப்பிரமணியன் அவர்களிடம் இருந்து வந்தது. சுவாமிகள் முக்தியடைந்த பின் அந்த உயில் சிவசுப்பிரமணியன் அவர்களால் வெளிக்காட்டப்பட்டது.

**மெய்யப்ப சுவாமிகளுக்கும் தங்களுக்குமான உறவு எத்தகையது?**

மெய்யப்ப சுவாமிகளுக்கும் எனக்குமான தொடர்பு நாச்சியப்ப சுவாமிகள் காலத்திலிருந்தே உள்ளது. அப்போது அவர்கள் புதிய கட்டிடங்கள் கட்டும் பொறுப்புகளை கவனித்து வந்தார். நான் நிதி நிர்வாக பொறுப்புகளை கவனித்து வந்தேன். அவர் மடாதிபதியாக பொறுப்பேற்ற பின்னும் நான் நிதி நிர்வாக பொறுப்புகளை தொடர்ந்து கவனித்து வந்தேன். ஆகையால் எங்களுக்குள் நல்ல நெருங்கிய உறவு இருந்தது, அவர் முக்தி அடைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு உடல்நிலை சரியில்லாத நேரத்தில் மீண்டும் ஒரு முறை என்னிடம் கேட்டார் "தங்களுக்கு அடுத்த மடாதிபதியாக முழு சம்மதமா ஏதும் எண்ண மாற்றம் இருக்கா?" என்று, நான் "தங்கள் விருப்பப்படி எனக்கு முழு சம்மதம்" என்றேன்.

**தமிழ் வேதாந்த மடமாக அறியப்படும் கோவிலூரில் தற்போது வேதாந்தப் பாடம் கற்பிக்கப்படுகிறதா?**

எட்டாவது பட்டம் சோமசுந்தர சுவாமிகள் காலம் வரை இங்கு வேதாந்த பாடம் எடுக்கப்பட்டது, அது வரை வேதாந்தம் கற்ற சீடர்களே அடுத்த மடாதிபதியாக வந்தார்கள். அதன் பிறகு யாரும் வேதாந்தம் கற்று மடாதிபதியாக வரவில்லை. மட நிர்வாகத்தை மட்டும் கவனித்து வர தொடங்கினார்கள். நாச்சியப்ப சுவாமிகள் சிற்பம், நாதஸ்வரம், தவில், திருமுறை, வேத ஆகம பாடசாலை என பல்வேறு புதிய வகுப்புகளை தொடங்கினார்கள். மாணவர்கள் வருகை குறைவால் பின்னர் அவை நிறுத்தபட்டன. அதில் நாதஸ்வரம், தவில் வகுப்புகள் தற்போதும் நடந்து வருகின்றன. திருமுறை வகுப்புகள் திரும்பி எடுக்க முடிவு செய்துள்ளோம். வேத ஆகமம் இங்கு கற்பிக்கப்படவில்லை என்றாலும் கற்பிப்பவர்களுக்கு நிதி உதவி செய்து வருகிறோம்.

**கோவிலூரில் நாச்சியப்ப சுவாமிகளால் தொடங்கப்பெற்று நீண்ட காலமாக நடந்துவரும் நடராஜர் கோயில் திருப்பணி எப்போது நிறைவு பெறும்?**

நாச்சியப்ப சுவாமிகள் சிதம்பரம் நடராஜர் கோயில் போல் அமெரிக்காவில் ஒரு கோயில் கட்ட எண்ணினார். சில காரணங்களால் அது நடைபெறவில்லை. ஆகையால் கோவிலூரில் அதே நடராஜர் கோயில் திருப்பணியை தொடங்கினார். தற்போது திருப்பணி நிறைவு நிலையை

எட்டியுள்ளது. மூன்று, நான்கு மாதங்களில் திருக்குட நன்னீராட்டு விழா நடைபெறும்.

**மீண்டும் அமெரிக்காவில் அல்லது வேறு வெளிதேசங்களில் கிளைமடம் நிறுவும் எண்ணம் உள்ளதா?**

இல்லை! தற்போது அப்படி ஏதும் எண்ணங்கள் இல்லை.

**காசியில் உள்ள கோவிலூர் கிளைமடத்தில் புதிய கட்டிடம் - அறைகள் கட்டப்படுமா? நகரத்தார்கள் தங்குவதற்கு ஏதுவாக அமையுமா?**

காசியில் சொந்த இடம் உள்ளது. அதில் தற்காலிக கட்டுமானத்தில் மடம் செயல்படுகிறது. நாம் வாங்கிய இடம் கங்கையிலிருந்து 200-மீட்டர் தொலைவுக்குள் உள்ளபடியால் அதில் கட்டிடம் கட்ட தற்போதைய சட்டப்படி அனுமதி கிடையாது. ஆகையால் புதிய கட்டிடம் கட்ட முடியாத சூழல் உள்ளது. தற்போது உள்ள தற்காலிக கட்டுமானம் நகரத்தார்கள் தங்குவதற்கு ஏற்றதாக இருக்காது.

**கோவிலூர் மடாலயம் நகரத்தார்களுக்கு செய்து வரும் உதவிகள் குறித்து..**

நகரத்தார் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கி வருகிறோம். இது வட்டியில்லாதது திருப்பிச் செலுத்த வேண்டியது. இதில் சிலர் சரியாக திருப்பிச் செலுத்துகிறார்கள், சிலர் திரும்பிச் செலுத்துவதில் தாமதம் ஏற்படுகிறது, அனைவரும் சரியான நேரத்தில் திருப்பிச் செலுத்தினால் நாம் இன்னும் பலருக்கு உதவலாம். இது சுமார் 20 ஆண்டுகளாக நடந்து வருகிறது. மாதத்திற்கு 25-வரை பெண்களின் திருமணங்களுக்கு தலா ரூ.7000 கொடுக்கிறோம். மேலும் வயதான முதியோர்களுக்கு மாதாமாதம் உதவித் தொகை கொடுக்கிறோம், நாச்சியப்ப சுவாமிகள் காலத்தில் 60 பேர்களுக்கு கொடுத்து வந்தோம் தற்போது அது வளர்ந்து சுமார் 900 பேர்களுக்கு கொடுத்து வருகிறோம். இதை மேலும் விரிவுபடுத்த எண்ணுகிறோம். இவை அனைத்துமே நம்மில் வசதி குறைந்தவர்களுக்கானது.

**தங்களின் வருங்கால திட்டங்கள் என்னென்ன? புதிய கிளை மடங்கள், கல்வி நிறுவனங்கள் தொடங்கப் பெறுமா?**

புதிய மடங்கள், கல்வி நிறுவனங்கள் தொடங்கும் எண்ணம் தற்போது இல்லை. வருங்கால திட்டங்கள் குறித்து பின்னர் அறிவிக்கப்படும். தற்போது செயல்பட்டு வரும் கல்வி நிறுவனங்களை மேலும் மெருகேற்ற என்னென்ன செய்ய வேண்டுமோ அதனை அனைவரின் ஒத்துழைப்போடும் செய்ய உள்ளோம்.

**தங்களின் பொன்னான நேரத்தை பகிர்ந்து கொண்டதில் மிக்க நன்றி சுவாமி. நிறைவாக தாங்கள் நகரத்தார் இளைஞர்களுக்கு சொல்ல விரும்புவது?**

இளைஞர்கள் தொழில் செய்ய முன்வர வேண்டும். அதற்கான படிப்புகளை படிக்க வேண்டும். ஏனென்றால் நாம் வேலை பார்க்கும் சமூகம் இல்லை, வேலை கொடுக்கும் சமூகம். ஆரம்பத்தில் வேலைக்கு போகலாம், தவறில்லை. ஆனால் இரண்டு மூன்று ஆண்டுகளில் வேலையை நன்றாக கற்றுக்கொண்டு தொழிலில் ஈடுபட வேண்டும். அந்த காலத்தில் இப்படித் தானே இருந்தது, பெட்டியடி பையனாக சேர்ந்து, அடுத்த ஆளாக வளர்ந்து, பின்னர் தனித் தொழில் செய்ய தொடங்குவார்கள். இன்றும் அதை பின் தொடரலாம். கல்வி மிக முக்கியமானது. கல்வி சார்ந்த தொழிலில் ஈடுபடுவதே சிறந்தது. உதாரணமாக Google அல்லது Microsoft-ல் வேலை பார்த்தால் அதிலேயே கடைசி வரை இருந்துவிடக் கூடாது, அது போல் ஒரு தனி நிறுவனத்தை தொடங்க முயற்சிக்க வேண்டும். அப்போது தான் நகரத்தார் சமூகம் இன்னும் உன்னத நிலைக்கு வரும்.

கோவிலூர் ஆண்டவரின் உயர்ந்த நோக்கத்தோடு தோன்றிய கோவிலூர்த் திருமடம், வாழையடி வாழையாக வந்த நகரத்தார் மரபைச் சேர்ந்த மடாதிபதிகளின் திறமையாலும், இறைவனின் திருவருளாலும் சிறந்து, செழித்து, ஆன்மிக, இலக்கிய, சமுதாயப் பணிகளைத் திறம்பட நிகழ்த்தி வருகிறது. இப்பணிகள் சீர்வளர்சீர் நாராயண ஞானதேசிக சுவாமிகள் காலத்தில் மேலும் சிறக்க திருநெல்லை உடனாய கொற்றவாளீசுவரர் அருளை வேண்டி துணை நிற்போம்.

பழ.கைலாஷ்.

– நேர்காணல்: பழ.கைலாஷ்.

பார்த்தேன் ... படித்தேன் ... பகிர்கிறேன்

அரியக்குடி “ ஸ்ரீ” – சபாரத்தினம்

# நடையில் நின்றுயர் நாயகன்...

1964, டிசம்பர் மாதம், சென்னை வாஹினியை ஒட்டியிருந்த விஜயாவில் ஒரு படப்பிடிப்பு. கதாநாயகனைப் பார்க்க ஒப்பனையறைக்குள் ஒரு பாடலாசிரியர் செல்கிறார். அறையினுள், பி.ஆர். பந்துலு எனும் அன்று புகழ் உச்சத்திலிருந்த இயக்குநர் மிகப் பிரபலமான கதாநாயகனோடு பேசிக் கொண்டிருக்கிறார். பாடலாசிரயரைப் பார்த்த கதாநாயகன், சுழல் நாற்காலியில் இருந்து இறங்கி, “ஆண்டவரே ஒரு பெரிய சந்தேகம். கம்ப இராமாயணம் ஸ்ரீ ரெங்கத்திலே அரங்கேற்றம் ஆகலியாமே? இப்போதான் காரைக்குடி கம்பன் அடிப்பொடி சா. கணேசன் வந்திருந்தார். கம்பர் விழா பற்றி கேட்ட போது சொன்னார்” என்று முடித்தார்.

அந்தக் கதாநாயகன் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். பாடலாசிரியர் கவிஞர் வாலி. இந்தக் கேள்வியை வாலி அவர்களிடம் கேட்டதற்குக் காரணம் அவர் அடிப்படையில் வைணவர், ஸ்ரீ ரெங்கத்துக்காரர் அப்புறம் தமிழ் ஞானம் நிரம்பப் பெற்றவர் என்பதால்.

“இல்ல அண்ணே, எங்க ஊர்ல தான் அரங்கேற்றம் ஆச்சு. அரங்கேற்றம் செய்த மண்டபம் இப்பவும் இருக்கு. நிறைய அதுக்கு ஆதாரமும் இருக்கு. இருந்தாலும் சா.க. அவர்கள் அது சடையப்ப வள்ளல் வீட்டு வாசல்லே திருவெண்ணெய் நல்லூர்ல அரங்கேற்றினதா சொல்லுவாங்க. அவர், வயதால் பெரியவர், கம்ப இராமாயணத்தில் மிகப் புலமை வாய்ந்தவர். அவர் சொல்லும் எதையும் நான் மறுத்துப் பேசலே.

ஒரு வரலாறு கல்வெட்டிலேயே இருந்து மாலிக் கபூர் படையெடுப்பிலே அது சிதிலமடைஞ்சு போச்சுன்னு சொல்லுவாங்க. அந்தக் கல்வெட்டுல. ‘கம்பன், அவரது இராமாயணத்தில் நூறு பாட்டுக்கு ஒரு பாடலில் தன்னை ஆதரிச்ச சடையப்ப வள்ளலுக்குத் தன் நன்றியைக் காட்ட அவர் பெயரைப் பதிவு செய்திருந்ததை அவையிலிருந்த வைணவர்கள் ஆட்சேபம் தெரிவித்து, ஆயிரம் பாட்டுக்கு ஒரு முறை வருமாறு மாற்றியமைக்க சொல்லியிருக்கிறார்கள். ‘அடடா! நான் சடையப்ப வள்ளலை, நூற்றில் ஒருவன் என எண்ணிப் பாடினேன். நீங்கள் சொல்லிய பிறகுதான் உணர்ந்தேன், அவர் ஆயிரத்தில் ஒருவன் என்று” என வாலி சொல்லி முடித்திருக்கிறார். அந்த இடத்தில் இருந்த இயக்குனர் பி.ஆர். பந்துலு அவர்கள் “நம்ம படத்துக்கு டைட்டில் கிடைச்சாச்சு “ஆயிரத்தில் ஒருவன்” என உரத்த குரலில் சொல்லி, “அபாரம்” என்று குதூகலித்தாராம்.

இயக்குனர் பி.ஆர். பந்துலு சாருக்கு டைட்டில் கிடைச்சுருச்சு. அவருக்கு கிடைச்ச மாதிரி நமக்கு இதை ஒட்டித் தேடினா ஏதாவது கிடைக்காதா என்னும் முயற்சிதான் இந்தக் கட்டுரை.

கம்ப இராமாயணம் ஆறு காண்டங்கள், பத்தாயிரத்து ஐநூறு பாடல்கள், தொண்ணூற்று ஆறு வகை விருத்தங்கள் என மிகப் பிரமாண்டப் படைப்பு இலக்கியம். இதைப் படைத்த கம்பர், அரங்கேற்றம் செய்த கதைதான் என்ன எனச் சற்று தேடினேன். நான் சொல்லப் போகும் கருத்துக்களுக்கு ஆதாரம் இருக்கிறதா எனக் கேட்டு விடாதீர்கள். இது கர்ண பரம்பரைக் கதையாகக் கூட இருக்கலாம். படைப்பாளிகள் படைப்புகளை வெளிக்கொணரப் பெற்ற அனுபவங்கள் எனக் கூட எடுத்துக் கொள்ளலாம். நான் தேடியதில் பெற்ற சிற்றனுபவத்தை உங்களோடு பகிர்கிறேன்.

திருவரங்கத்தில் வைணவ ஆச்சாரியாளைச் சந்தித்து, கம்பர் தான் இயற்றிய இராமாயணத்தை அரங்கேற்றம் செய்ய விண்ணப்பம் செய்கிறார். “இதில் “நரஸ்துதி” (மனிதர்களை வணங்கிப் பாடுவது) இருப்பதாலும், ‘நீச பாஷையான’ தென் மொழியில் (தமிழில்) இருப்பதாலும், இந்நூல் எத்தகையது எனத் தீர்மானம் செய்ய முடியவில்லை. ஆகையினாலே, தமிழ் மொழியில் சிறந்த தில்லை மூவாயிரவரைச் சந்தித்து அவர்களின் ஒப்புதலைப் பெற்றுவாரும்” என முதல் நிபந்தனை விதித்தார்கள் வைணவப் பெரியவர்கள்.

வைணவப் பெரியவர்கள் சொன்ன ‘தில்லை மூவாயிரவரைச் சந்தித்து’ என்பதைத் தில்லைவாழ் சிவபூசை செய்யும் அந்தணர் மூவாயிரம் பெயரைச் சந்தித்து ஒப்புதல் வாங்கி வா என்று பொருள் கொள்ள வேண்டும். சைவ, வைணவ மோதல் உச்சத்தில் இருந்த காலத்தில், வைணவக் கடவுள் குறித்து எழுதிய நூலுக்கு சிவாச்சியாரியர்களிடம் ஒப்புதல் வாங்கிவா என்று சொல்லுவது ஒப்புதலுக்காகவா அல்லது ஒப்புக்காகவா ... என்பது சிந்தனை செய்ய வேண்டிய ஒன்று.

மூவாயிரவரில் ஓரிருவரை தில்லைக்குச் சென்று கம்பர் சந்திக்கிறார். “நாங்கள் மூவாயிரம் பேரும் சேர்ந்து செய்ய வேண்டிய காரியமிது, அந்த நாளில் வாரும்” என்ற பதில் மட்டும் கம்பருக்கு கிடைக்கிறது. திரும்பிச் செல்ல மனமில்லாத கம்பர், கோவிந்தராஜப் பெருமாளைத் தியானித்து தில்லையிலேயே தங்கி விடுகிறார். கம்பரது கனவில் பெருமாள் தோன்றி “நாளைத் தில்லை மூவா–

# லியோ டிராவல்ஸ் கம்பெனி

நெ.5.இராயல்ரோடு, கன்டோன்மெண்ட், திருச்சி-620001
தொலைபேசி எண்: (0431) 2411444, 4000498
E.Mail: leotrvl@yahoo.com. 98424 54314, 96000 07454, 98940 14166

## நன்றி அறிவிப்பு மற்றும் இலங்கை பயணம் (சுற்றுலா)

ஜனவரி 30ஆம் தேதி புறப்பட்டு மலேசியா, பினாங்கு, லங்காவி, ஈப்போ மற்றும் கோலாலம்பூர், சிங்கப்பூர் இவை அனைத்தும் 10 நாட்கள் சுற்றுலாவாக அழைத்துச் சென்று நல்லபடியாக இறைவன் அருளால் சிறப்பாக நடந்து முடிந்தது. சின்ன தடங்கல் கூட இல்லாமல் போய்வந்தது, நகரத்தார்களுடைய பாங்கான அனுசரிப்பு எல்லாமே அருமை. பயணத்தில் வந்திருந்த அனைத்து நகரத்தார் பெருமக்களுக்கும் எங்கள் கம்பெனி சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பவும் மார்ச் 30ந்தேதி சென்னையிலிருந்து புறப்பட்டு, ஏப்ரல் 6ந் தேதி சென்னை வந்தடைகிறோம் 7 இரவு 8 பகல் என கண்டி, கதிர்காமம், அனுராதபுரம், மன்னார், திரிகோணமலை, யாழ்பாணம், நுவரேலியா, கொழும்பு என அனைத்து பகுதிகளையும் மிக சிறப்பாக சுற்றிபார்க்கவும் மற்றும் உயர்தர ஸ்டார் ஹோட்டல்களில் தங்குதல், தென்னிந்திய உணவு வகை என ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட இடங்கள் மட்டும் உள்ளதால் வரவிருப்பம் தெரிவித்தவர்கள் போக மற்றும் வரவிரும்புபவர்கள் உடனே எங்களை தொடர்பு கொள்ளவும். இந்த நல்ல சந்தர்ப்பதை பயன்படுத்தி கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

எங்கள் கம்பெனியின் மூலம் ஒருமுறை வந்து பாருங்கள் பிறகு சுற்றுலா என்பதனை எங்கள் மூலம் தான் போய் வர வேண்டும் என்று விரும்புவீர்கள். இது உண்மை. சொன்னதை சொன்னபடி செய்யும் ஒரே நிறுவனம்.

இந்த சுற்றுலாவில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் மேலே குறிப்பிட்டுள்ள தொலைபேசி எண்களை தொடர்புக் கொண்டால் இந்த சுற்றுலா விவரம் அனுப்பி வைக்கப்படும். என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். நன்றி.

குறைவான இடங்களே இருப்பதால். முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். வரும் மாதங்களில் மற்ற நாடுகளுக்குரிய பயண ஏற்பாடுகள் நடந்து கொண்டு உள்ளன. இது பற்றிய விபரம் பின்னர் தெரிவிக்கப்படும்.

தங்கள் அன்புள்ள
புதுவயல் V.சுப்பு
மேலாண் இயக்குநர்


யிரவரின் தலைமகன் பாம்பு கடித்து இறந்து கிடப்பான். அங்கு மூவாயிரவரும் ஒன்றுசேருவர். நீர் அங்கு சென்று உனது இராமாயணத்தில் உள்ள 'நாகபாசப் படலத்தில்' உள்ள இரண்டு விருத்தப் பாடல்களைப் பாடும், அதோடு அங்கேயே உனது தெய்வீகப் பண்புகள் அவர்களுக்கு தெரியும் பொருட்டு, சில செய்யுதன்களையும் புனைந்து காட்டும்" என்று சொல்லி மறைந்தார்.

பெருமாள் கம்பரின் கனவில் சொன்னது எல்லாம் பொழுது விடிந்ததும் நடந்தது. கம்பரும் துக்கம் நிகழ்ந்த வீட்டிற்குச் சென்றார். தான் தில்லை வந்த காரியத்தை அங்கு கூடியிருந்த சிலரிடம் சிறிதாகச் சொல்ல ஆரம்பித்தார். "எங்கு என்ன பேசுகிறீர்" என்று அந்தணர்கள் கம்பர் மேல் வெகுண்டு எழுந்தனர். அவர்களைச் சமாதானம் செய்து, "இறந்த குழந்தையைக் காட்டுங்கள், நான் உயிர்ப்பிக்கிறேன்" என்கிறார் கம்பர்.

வியந்த அந்தணர்கள் கூட்டம், கம்பரை முயற்சிக்க அனுமதிக்கிறது. பெருமாளை மனத்தில் கொண்டு 'நாகபாசப் படலத்தில்' உள்ள இரண்டு விருத்தங்களோடு அப்போதே மூன்று வெண்பாக்களையும் புனைந்து பாடி முடிக்கிறார். முடித்ததும் ஒரு பாம்பு வந்தது. பாம்பு ஏற்கனவே தீண்டியிருந்த கடிவாயில் வாய் வைத்து விஷத்தை உறிஞ்சி எடுத்துத் தான் இறந்தது.

இப்போது, அதிசயித்துப் போன தில்லை மூவா-யிரவர்கள் கம்பனின் காப்பியத்தைக் கேட்க ஒன்று கூடுகின்றனர். தற்கால "வைவா" போல பாடல்களின் நிறை, குறைகள் அலசி ஆராயும் முறைமை நடக்கிறது. நிறைவாக மூவாயிரவர்களின் ஒப்புதல் பெறுகிறார் கம்பர். ஒப்புதல் சீட்டோடு திருவரங்கம் வந்த கம்பருக்கு அடுத்த நிபந்தனை காத்திருந்தது. "கம்பரே, திருநருங்குன்றம் என்ற ஊரில் அங்குள்ள சமணப் புலவரின் ஒப்புகை பெற்று வரவும்" என்றது. அங்கும் ஒப்புகை பெற்றா-யிற்று. வைணவப் பெரியார்களின் அடுத்த கட்டளை". மாமண்டூரில் மெத்தப் படித்த ஒரு கொல்லன் இருக்கிறான். அவனது இசைவையும் பெற்றுவா". அந்தச் சான்றிதழோடு வந்த கம்பனுக்கு ஆலயப் பெரியவர்கள் அடுத்துச் சொன்னார்கள் "தஞ்சையில், கவிதை இசை கலைகளில் தேர்ச்சி பெற்ற 'அஞ்சனாட்சி' என்னும் ஒரு தாசி இருக்கிறாள். அவளது ஒப்பமும் பெற்று வா".

'அஞ்சனாட்சி' அகத்திற்கும் அடியெடுத்து வைத்த கம்பரைப் பணிவோடு வரவேற்றாள் அஞ்சனாட்சி. கம்பரை நோக்கி "வேசியர் குறித்து காப்பியத்தில் ஏதும் உள்ளதா?" எனக் கேட்கிறாள். "மிதிலைக் காட்சிப் படலத்திலும், கார்காலப் படலத்திலும் தாசியராய் வாழும் கணிகையர் குறித்த தகவல்கள் உள்ளதை எடுத்துரைக்கிறார் கம்பர். "கம்பராம் புலவரைக் கருதிருத்தவாம்" என ஈற்றடி கொண்ட வெண்பாவைத் தனது ஒப்புகையாகக் கொடுத்து உயர்ந்து நிற்கிறாள் அஞ்சனாட்சி.

இன்னும் சிலரின் ஒப்புதல் பெறச் சொன்னார்கள். கம்பன் சளைக்காது பெற்று வருகிறார். இன்று தன் எண்ணம் ஈடேறப் போகிறது என்ற சிந்தையோடு நிறைவாக வந்த கம்பனை, "அம்பிகாபதி என்னும் அறிவிற் சிறந்த புலவன் இருக்கிறான் அவனின் ஒப்புதலும் பெற்றுவிட்டால் சிறப்பாக இருக்கும்" என்று பணிக்கிறார்கள்.

அம்பிகாபதி தன் மகன் என்றும் பாராமல் கம்பர் அவரின் ஒப்புகைப் பெறப் போகிறார். காப்பியம் முழுவதையும் பாடக் கேட்டு

"நனி ராமப் போர் பம்ப நாடழைக்குங் கதை பாச்செய்த கம்ப நாடன் கழறலைறிற் கொள்வோம்"

எனும் நிறைவு வரியாகத் தாங்கிய வெண்பாவைச் சமர்பிக்கின்றான், அம்பிகாபதி.

அரங்கேற்றம் செய்வதில் இனித் தடைகள் இல்லை என்னும் தீர்மானத்திற்குக் கம்பர் வரும் போது திருவரங்கம் கோவிலுக்கு ஒரு மண்டபம் கட்டித் தருமாறு பணிக்கிறார்கள். அதன்படி கோவிலில் ஒரு மண்டபமும் கட்டிக்கொடுத்தார் என்றும் சொல்லப்படுகிறது. பின்னர் சடகோபரந்தாதி இயற்றி நிறைவு செய்து, நாதமுனிகள் முன்னிலையில் திருவரங்கத்தில் அரங்கேற்றம் நடந்தது என்று நிறைவாகிறது அரங்கேற்றம் குறித்த செய்திகள்.

திருவரங்கன் ஆலயத்தில் கம்ப இராமாயண அரங்கேற்றம் நடைபெறவே இல்லை எனும் வாதங்களும் இன்றும் தொடர்கின்றது.

இரண்டு முரண்பாடான செய்திகளையும் ஒன்று இணைத்து, கம்பநாடன் வெண்ணைநல்லூரில் நெய்த இராமாயணம் திருவரங்கன் முன்னே அரங்கேறியது என ஒரு தனிப் பாடல் சாட்சியம் அளிக்கிறது.

எண்ணிய சகாப்தம் எண்ணூற்று

ஏழின்மேல் சடையன் வாழ்வு

நண்ணிய வெண்ணெய் நல்லூர்

தன்னிலே கம்பநாடன்

பண்ணிய இராம காதை

பங்குனி அத்த நாளில்

கன்னிய அரங்கர் முன்னே

கவயிரங் கேற்றி னானே !

மேலும், கம்பரின் இராமாயண அரங்கேற்றம், திருவரங்கம் அரங்கநாதர் கோவிலுக்குள் ரெங்கநாயகித் தாயார் சந்நிதிக்கு எதிரில் உள்ள நாலுகால் மண்டபத்தில், யுத்த காண்டத்தில் உள்ள இரணிய வதைப் படலத்தை வாசிக்க நடந்தேறியது எனவும், இதை மண்டபத்தில் அருகில் தென்திசையில் அமர்ந்திருந்த வர்ண கலா ரூபமான அழகிய சிங்கர் அழகிய புன்னகையுடன் ரசித்து பிரதட்சணமாகக் காட்சியும் தந்திருக்கிறார் என்னும் செய்தியும் நிலவுகிறது.

அழகிய சிங்கரே 'சிரக்கம்பம்' செய்து பாராட்டிய பிறகு கம்பனின் புகழ் வானளாவப் பரவிப் பேசப்பட்டது என்றும் சொல்பவர்கள் இருந்திருக்கிறார்கள். இதனைக் கதையென்றோ, புனையப்பெற்றது என்றோ, கர்ண பரம்பரைக் கற்பனை என்றோ, வாய் மொழி வரலாறு என்றோ எப்படி வேண்டுமானாலும் வகைப்படுத்தலாம்.

அரங்கேறியது எங்கு வேண்டுமானாலும் இருக்கட்டும். நம் கம்பன் நமக்களித்த பெரும் கொடையை, நம் வருங்காலத் தலைமுறை தமிழ் படிப்பதையே தவிர்த்து தெரிந்து கொள்ளாமேலேயே போய் விடுமோ என்பது கற்றுணந்தவர்களின் கவலையாக மாறியிருக்கிறது.

"உலகைத் தமிழுக்கும், தமிழை உலகுக்கும் தன் ஒரே நூலால் அறிமுகம் செய்தவன் கம்பன். மூல நூலான வான்மீகி இராமாயணத்தின் மொழி பெயர்ப்பாக இல்லாமல் கம்பன் செய்தது வழி நூல், முதன் நூலிலும் வலிமை பெற்றது" என்பது இலங்கை ஜெயராஜ் அவர்களின் ஆணித்தரமான சொல்லாடல்.

நம் கவியரசர் முன்மொழிந்த வரிகள்.

"காலமெனும் ஆழியிலும்

காற்றுமழை ஊழியிலும்

சாகாது கம்பனவன் பாட்டு

தலைமுறைக்கு எழுதிவைத்த சீட்டு"..

ஐயா சொ.சொ.மீ. அவர்கள் சொல்லுவது போல, வான்மீகி இராமன் மனிதன். துளசிதாஸரின் இராமன் தெய்வம். கம்ப ராமன் மனிதத் தெய்வம். இது கம்பனின் கை வண்ணம்.

ஐயா கம்பன் அடிப்பொடி சொல்வது போல நமக்கு ஒன்று கிடைத்தற்கரியது கிடைத்ததே. நாம் தமிழராக பெருமையுடன் சொல்லிக்கொள்ள கம்பன் என்னும் தச்சன் கட்டித் தந்த காவியக் கோவில் கம்ப இராமாயணம்.

'கல்வியிற் சிறந்த தமிழ் நாடு புகழ்க் கம்பன் பிறந்த தமிழ் நாடு' ... 'கம்பன் என்று ஒரு மானுடன் வாழ்ந்ததும்' ... 'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவர் போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை' என்பது பாரதியின் பிரகடனங்கள்.

இவையாவும், கவிச் சக்கரவர்த்தி கம்பன் தமிழ் இனத்திற்கெல்லாம் "அலகிலா விளையாட்டு உடையான்" என்பதை எந்நாளும் ஓங்கி ஒலித்துக் கொண்டேயிருக்கும். ஒலித்துக் கொண்டே இருக்கவும் வேண்டும்.

(ஆதார சுருதி காவியக் கவிஞர் வாலி எழுதிய "எனக்குள் எம்.ஜி.ஆர்.", பாரதி கிருஷ்ண குமார் எழுதிய "கவிச்சக்ரவர்தியின் பணிவு" ஆகிய நூல்கள்)

நமது செட்டிநாடு

# பழமையும் புதுமையும் போற்றிய கோவிலூர் ஆதீனம் மெய்யப்ப ஞான தேசிக சுவாமிகள்

கோவிலூர் ஆதீனம் மெய்யப்ப சுவாமிகள் 1941ல் காரைக்குடியில் பிறந்தவர். பிள்ளையார்பட்டி கோயிலைச் சார்ந்த அவர்கள் பள்ளிக் கல்வியை காரைக்குடி எஸ்.எம்.எஸ். மேல்நிலைப் பள்ளியிலும், இளம் அறிவியல் பட்டப் படிப்பை காரைக்குடி அழகப்பா கலைக் கல்லூரியிலும், முது அறிவியல் பட்ட மேற்படிப்பினை சென்னை மாநிலக் கல்லூரியிலும் படித்தவர். மூன்று ஆண்டுகள் தூத்துக்குடி வ.உ.சி கல்லூரியில் புவியியல் துறையில் பேராசிரியராக பணியாற்றி பின்னர் கல்லூரி பணியில் இருந்து விலகி ஆசியன் பேரிங்க்ஸ் கம்பெனியில் பல்லாண்டுகள் பணி செய்தவர்கள். பின்னர் கோவிலூர் ஆதீனமாக நாச்சியப்ப சுவாமிகள் இருந்த பொழுது அவருடன் தொடர்பு ஏற்பட்டு அவரது தனி உதவியாளராக ஊதியம் இல்லாமல் பணியாற்றியவர். இலக்கிய ஆர்வம் மிக்க சுவாமிகள். கம்பன் கழகத்திலும் திருக்குறள் கழகத்திலும் இணைந்து பணியாற்றியவர். சிறந்த கவிஞர். பழனிக்கு பாதயாத்திரை ஆகவும், காவடி எடுத்தும் சென்றிருக்கிறார்கள். ஆடுக ஊஞ்சல் ஆடுகவே என்ற பாடலை எழுதியவர் அவர்கள்தான். கோவிலூர் ஆதீனம் மெய்யப்ப சுவாமிகள் பல துறைகளிலும் சிறப்பாக செயல்பட்டு மடாலயத்தை வளர்ச்சியடையச் செய்தார்கள்.

### ஆன்மிகப் பணி:

கோவிலூர் தொடக்க காலத்தில் வேதங்களைச் சொல்லிக் கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும். அதனால் கோவிலூர் மடாலயம் வேதாந்த மடாலயம் என்று அழைக்கப்பட்டது. கோவிலூர் மடாலயம் வெளியிட்ட 14 வேதாந்த நூல்களை மெய்யப்ப சுவாமிகள் மறுபதிப்பாக வெளியிட்டதுடன். வேதாந்த வகுப்புகளும் எடுத்தார்கள்.

ஞானவாசிட்டம், கைவல்ய நவநீதம் மாநாடு போன்றவற்றை கோவிலூரில் நடத்தினார்கள். சிறந்த முருக பக்தர். கோவிலூர் மடாலயத்தின் சார்பில் சத்திரப்பட்டியில் இடம் வாங்கி ஆழ்குழாய் கிணறு அமைத்து தண்ணீர் வசதி, பழனி காவடி சாமிகளுக்கும், பாதயாத்திரை வரும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியே கழிப்பறை வசதிகளும் குளியல் அறை வசதிகளும் செய்து, அன்னதானமும் வழங்க ஏற்பாடு செய்துள்ளார்கள். பாதரக்குடியில் பால், ரொட்டி வழங்கப்படுகிறது. திருநெல்லை எனும் ஆன்மிக இதழைத் தொடங்கி ஆன்மிக கட்டுரைகள், தமிழ் கட்டுரைகள், மடாலய நிகழ்வுகளை மாதந்தோறும் வெளியிட்டு வந்தார்கள். பிள்ளையார்பட்டி, பாதரக்குடி மற்றும் பல்வேறு இடங்களில் நடைபெறும் வேத பாடசாலைகளுக்கு நிதி உதவியை தொடர்ந்து வழங்கினார்கள். திருப்புவனம், மானாமதுரை, வளவனூர், புரவாச்சேரி ஆகிய மடாலய கிளைகளின் செலவுகளை சரிகட்டும் வகையில் புதிய கட்டிடங்கள் கட்டி வங்கிகளுக்கு வாடகைக்கு விட்டார்கள். நின்று போன தவில், நாதஸ்வரம் பயிற்சி வகுப்புகளை மீண்டும் தொடங்கினார்கள். முத்துராமலிங்க ஆண்டவர், நாச்சியப்ப சுவாமிகள் குருபூஜை மற்றும் விழாக்களை சிறப்பாக நடத்தினார்கள்.

### தமிழ்ப் பணி:

மெய்யப்ப சுவாமிகள் தமிழ் ஆர்வலர். தமிழ் புலமை உடையவர். சிறந்த கவிஞர். நாச்சியப்ப சுவாமிகள் பற்றி கவிதைகள் எழுதி அதை ஒரு நூலாக வெளியிட்டுள்ளார்கள். பழனி முருகன் மேல் பல பாடல்கள் இயற்றியுள்ளார்கள்.

மாணவர்களுக்கான திருக்குறள், திருக்குறள் உரை, பாரதியார் பாடல்கள், கொன்றை வேந்தன், மூதுரை, ஆத்திச்சூடி, நல்வழி, திருமூலரின் திருமந்திரம், அறிவியல் நூல்கள், ஓலைச்சுவடி பாதுகாப்பு பற்றிய நூல் என்று பல நூல்களை வெளியிட்டார்கள். வ.சு.ப. மாணிக்கனார் எழுதிய கோடி கொடுத்த கொடைஞன், ஏழிளம் தமிழ் நூலையும், நெற்குப்பை கும.சுப குடும்பத்தார் வெளியிட்ட பழனி காவடிகள் தொடர்பான அறப்பட்டய நூலையும், அறப்பட்டய ஓலைச் சுவடிகளையும் நூலாக வெளியிட்டார்கள்.

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி ஆகிய காப்பியங்களுக்கும் நாலடியார், திரிகடுகம், முதுமொழி நானூறு, பழமொழி நானூறு, கார் நாற்பது, களவழி நாற்பது, இனியவை நாற்பது, இன்னா நாற்பது ஆகிய நூல்களுக்கும் உரை எழுதச் செய்து வெளியிட்டார்.

# கம்பன் கழகம் புகழ் அஞ்சலி

ஆடுக ஊஞ்சல் ஆடுகவே முருகப்பெருமான் ஒய்யாரமாய் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருக்கிறான். ஆட்டிய கரங்களும் பாடிய நாவும் விதேக முக்தி பெற்றுவிட்டன. கோயில் பணிகளையும், ஆதீனப் பணிகளையும், கல்விப் பணிகளையும், சமுதாயப் பணிகளையும், நூல் பதிப்பு பணிகளையும் எண்ணி எண்ணி செய்த செயலாற்றல் இன்று இறை கருணையில் தஞ்சம் புகுந்திருக்கிறது. காரைக்குடி கம்பன் கழகம் நிலைபெறவும் உயர்வு பெறவும் நாளும் உழைத்த குறள் நெறிப் பெரியோர் இன்று இறை நீழல் அடைந்திருக்கிறார்.

வேதாந்தம் கற்றவர். கற்பித்தவர். ஆசீர்வதிக்கும் கரங்களுக்குச் சொந்தக்காரர். இனி இலக்கிய பூங்காவில் சோகக்காற்று உலவும். கோவிலூர் மடத்து நிறுவனங்களை உங்களின் ஆன்மக் காற்று அரவணைக்கும். சீர் வளர் சீர் மெய்யப்ப ஞான தேசிக சுவாமிகள் இறைவனிடத்தில் மெய்ப்பதம் பெறுகிறார். பொற்பதம் பணிந்து போற்றுகிறோம்.

கோவிலூர் மடாலயத்தின் இருநூறாவது ஆண்டு விழா கொண்டாடப்பட்ட போது கோவிலூர் மடாலயம் தொடர்பான பல்வேறு தகவல்கள், பலர் எழுதிய கட்டுரைகள் ஆகியவற்றைத் தொகுத்து இரு தொகுதிகளாக வெளியிட்டார்.

மாதந்தோறும் கடைசி சனிக்கிழமை இலக்கிய பூங்கா எனும் நிகழ்ச்சியை நடத்தி அதில் தமிழ் அறிஞர்களை உரையாற்ற செய்தார்கள். பல்வேறு விழாக்களில் கவியரங்கம், பட்டிமன்றம், சொற்பொழிவு என நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தார்.

### சமூகப் பணிகள்:

மக்கள் நலனுக்காக பல்வேறு சமூக நலப் பணிகளை செய்தார். முக்கியமாக காணல் கண் மருத்துவமனை அமைய கோவிலூர் மடாலயத்தின் இடத்தை கொடுத்து அந்த இடத்தில் மருத்துவமனை கட்டப்பட்டு, சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மடாலய வளாகத்தில் பல் மருத்துவமனையும் பொது மருத்துவமனையும் செயல்பட்டு வருகிறது. குழந்தைகளின் கண் பார்வை குறைபாட்டை போக்குவதற்காக புனர்வாழ்வு மையம் தொடங்கப்பட்டு. செயல்படுத்தப்பட்டு வருகிறது. காணல் மருத்துவமனை சார்பாக ஒருங்கிணைந்த பெரிய மருத்துவமனை அமைய மடாலயத்தின் இரண்டு ஏக்கர் நிலத்தினை வழங்கி உள்ளார். காரைக்குடி கம்பன் கழகத்திற்கு கட்டிடம் கட்ட 5 சென்ட் நிலம் வழங்கியுள்ளார். பள்ளி, கல்லூரி மாணவர்களும், பொது மக்களும் பயன்பெறும் வகையில் கோவிலூரில் சாலை ஓரம் உள்ள விலை மதிப்புமிக்க இடத்தை பேருந்து நிறுத்தத்திற்கு வழங்கியுள்ளார். தமிழ்நாடு கெமிக்கல்ஸ் ஆலையிலிருந்து நச்சு வாயு கசிந்து விபத்து ஏற்பட்டபோது போராட்டத்தை முன்னின்று நடத்தினார். பெண்களுக்கு பனை ஓலைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சிக்கு ஏற்பாடு செய்தார்.

### கல்விப்பணி:

ஏற்கனவே செய்யப்பட்டு வரும் தொடக்கப் பள்ளி மற்றும் பாலிடெக்னிக் கல்லூரியுடன் உடற்பயிற்சி கல்லூரி, மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, கலை அறிவியல் கல்லூரி, ஐடிஐ ஆகியவற்றை கோவிலூரில் தொடங்கினார். இவை தவிர திருவாரூர் மாவட்டம் திருக்களரில் ஒரு பள்ளியும், திருவண்ணாமலையில் ஒரு பள்ளியும் தொடங்கினார்.

### நகரத்தார்களுக்கான பணிகள்:

நாச்சியப்ப சுவாமிகள் தொடங்கிய முதியோர் உதவித்தொகை, திருமண உதவித்தொகை, கல்வி உதவித்தொகை அனைத்தும் தொடர்ந்து வழங்கியதோடு, நகரத்தார் பெண்கள் திருமணத்திற்கு வழங்கும் உதவித் தொகையை அதிகரிக்க செய்தார். நகரத்தார் திருமண சேவை மையம் நடைபெற கோவிலூரிலும், சென்னை மேற்கு மாம்பலத்தில் உள்ள மடாலய வளாகத்திலும் இலவசமாக இடம் வழங்கினார்.

பழனி பாதயாத்திரை, பட்டினத்தார் விழா 9 நகர கோவில்கள் பற்றிய குறுந்தகடுகள் வெளியிடப்பட்டன. மேலும் பழனி காவடி தொடர்பான அறப்பட்டயங்கள் அடங்கிய ஓலைச்சுவடிகள் மைக்ரோ பிலிம் செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது. பல ஊர்களில் வசிக்கும் ஆச்சிமார்களை அணுகி தாலாட்டு பாடல்களை பாடச் செய்து, அதனை குறுந்தகடுகளாக வெளியிடச் செய்தார்கள். நகரத்தார்கள் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் போற்றும் வகையில் கோவிலூர் மடாலயத்தில் சிறப்பான செட்டிநாட்டு அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்பட்டது.

இத்தகைய சிறப்புமிக்க பணிகளைச் செய்த கோவிலூர் ஆதீனம் மெய்யப்ப சுவாமிகள் 17.01.2023 அன்று முக்தி அடைந்தார்கள். அவரது மறைவு பொது மக்களுக்கும் நகரத்தார் சமூகத்திற்கும் மிகப்பெரிய இழப்பாகும். அவரது பணியை தொடர்வதும் அவரைப் போற்றுவதும் நாம் அவருக்கு செலுத்தும் அஞ்சலியாகும். ■

– தமிழ்ச் செம்மல் முனைவர் சே.குமரப்பன்

(கட்டுரையாளர் கோவிலூர் மடாலயக் கலைக் கல்லூரியின் முதல்வராகவும், மக்கள் தொடர்பு அலுவலராகவும் பணியாற்றியவர்)

# நெற்குப்பையில் முப்பெரும் விழா

நெற்குப்பை, 'உலகம் சுற்றிய தமிழர்' சோமலெ நினைவு கிளை நூலகத்தில் - 11-02-2023 அன்று குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா நூற்றாண்டு, சோமலெ 102 -வது பிறந்தநாள், மாவட்ட அளவிலான 'உங்கள் மாவட்டத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்' போட்டிகளில் வென்ற மாணவர்களுக்குப் பரிசளிப்பு ஆகிய "முப்பெரும் விழா" சிறப்பாக நடைபெற்றது.

பள்ளிக் கல்வித் துறையும், உலகம் சுற்றிய தமிழர் சோமலெ அறக்கட்டளையும் இணைந்து, சிவகங்கை மற்றும் காரைக்குடியில் 'உங்கள் மாவட்டத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்' என்ற தலைப் பில் போட்டிகளை நடத்தினர். பேச்சு, ஓவியம், நாட்டுப்புறப் பாடல், வினாடி வினா ஆகிய போட்டிகளுக்கான இறுதிச் சுற்று நெற்குப்பையில் நடை பெற்றன. மாலை நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் திரு. ப.மதுசூதனரெட்டி தலைமை உரையாற்றி, மாணவர்களுக்குப் பரிசும், நூலகத்தைச் சிறப்பாகப் பயன்படுத்தியோருக்கு 'நல் வாசகர்' விருதும் வழங்கிச் சிறப்பித்தார். முனைவர் சோமலெ சோமசுந்தரம் விழாவின் நோக்கம் குறித்துச் சிறப்பாக எடுத்துரைத்தார்.

ஹலோ எப்.எம். ஜெயராம் சிறப்புரை ஆற்றினார். சிவகங்கை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் முனைவர் இரா.சுவாமிநாதன் வாழ்த்துரை வழங்கினார். பங்கேற்ற அனைவருக்கும் சோமலெ நூல்கள் பரிசாக வழங்கப்பட்டது. குழந்தைக் கவிஞரின் படைப்புகளை ஒன்பது கிராமப் பள்ளிகளைச் சேர்ந்த குழந்தைகள் கலை நிகழ்ச்சியாக வழங்கினர். குழந்தைகளைப் பலரும் பாராட்டினர். குழந்தைக் கவிஞரின் குடும்பத்தார் நிகழ்ச்சியில் பங்கேற்று மகிழ்ந்தனர். திருமதி சௌந்தரம் சோமசுந்தரம், சோமலெயின் உறவினர்கள், உலகம் சுற்றிய தமிழர் சோமலெ நினைவு நூலகத்தின் நூலகர், அலுவலர்கள் விழாவினை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். தமிழறிஞர்களும், ஊர் மக்களும், பள்ளி மாணவர்களும், ஆசிரியர்களும் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முன்னதாக நெற்குப்பை பேரூராட்சித் தலைவர் திரு.அ.புசலான் வரவேற்புரை நிகழ்த்த, நூலகர் திருமதி விஜயா நன்றி கூறினார்.


VALATHI Since 2005

திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.
ஸ்ரீ முத்துமீனா சிட்பண்ட்ஸ் (பி)லிட்.

இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.

எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு ரூ.50,000/- முதல் ரூ.25,00,000/- வரை
அதிகபட்ச உச்சவரம்பு 25% முதல் 40% வரை

பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை.

துவக்கம் 2005

TRICHY SHREE VALATHI CHIT FUNDS (P) LTD.
SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,

C-95, மூர்த்தி ஸ்கொயர். முதல் தளம். 5 வது கிராஸ் தில்லைநகர் மெயின் ரோடு, MPM ஸ்டோர்ஸ் மாடியில் திருச்சி - 620 018.

9/1, (4/1) அருணோதயா அபார்ட்மெண்ட். G-1, தரைத்தளம். லோகையா தெரு. சாலிகிராமம், சென்னை - 600 093.

50, தெற்கு மாரட் வீதி, (ஸ்டேட்பேங்க் ஏ.டி.எம் மாடியில்) மதுரை - 625 001.

0431-2760064,80 3580292,7968005. 94439 86143 tvcfpl@gmail.com www.tvcfpl@gmail.com

★ சத்தியமேவ ஜெயதே ★

Advt

# SRI RAJA RAJESWARI NAGAR
# PILLAYARPATTI

**OPP TO PILLAYARPATTI BUS STAND PILLAYARPATTI VILLAGE,** Thiruppathur Talak, Sivagangai Dist

**LAY OUT OF HOUSING PLOTS IN PATTA NO.1281**

S.Nos.542/1,2,3,4,8,9,10,11,12,13, 541/1,2,3,4&5, IN.8.17 Acres

DTCP Approved Ref.No. 506/2019 Dt. 04-09-2019

**Contact No. N. Muthiah 9845706560 M. Chidambaram 9444024604**




UNSOLD UNSIZED PLOTS (Size in Random)

| Plot No. | Sq.Ft. | Cent |
|---|---|---|
| 1 | 2352 | 5.40 |
| 2 | 3700 | 8.49 |
| 3 | 3420 | 7.85 |
| 4 | 3280 | 7.53 |
| 5 | 3654 | 8.39 |
| 6 | 3760 | 8.63 |
| 7 | 3060 | 7.02 |
| 8 | 1545 | 3.55 |
| 9 | 2528 | 5.80 |
| 10 | 1952 | 4.48 |
| 18 | 2030 | 4.66 |
| 19 | 1775 | 4.07 |
| 28 | 1520 | 3.49 |
| 29 | 1480 | 3.40 |
| 30 | 1400 | 3.21 |
| 31 | 1300 | 2.98 |
| 32 | 1200 | 2.75 |
| 33 | 1160 | 2.66 |
| 34 | 1180 | 2.71 |
| 35 | 1220 | 2.80 |
| 36 | 1240 | 2.85 |
| 37 | 2310 | 5.30 |
| 38 | 2780 | 6.38 |
| 39 | 3220 | 7.39 |
| 40 | 3600 | 8.26 |
| 41 | 3780 | 8.68 |
| 42 | 3900 | 8.95 |
| 74 | 1700 | 3.90 |
| 75 | 2407 | 5.53 |
| 100 | 3366 | 7.73 |
| 123 | 3075 | 7.06 |
| UNSOLD UNIFORM SIZED PLOTS | | |
| 13to17 | 2000 | 4.59 |
| 20 | 2000 | 4.59 |
| 63 | 2000 | 4.59 |
| 71 to 73 | 2000 | 4.59 |
| 76 to 78 | 2000 | 4.59 |
| 83 to 88 | 2000 | 4.59 |
| 101 to 122 | 2000 | 4.59 |

Park
Plot No.43 to 47

Pillayarpatti Bus Stand to Sri Rajarajeswari Nagar Plots - 0.5 KMS
Kundrakudi to Pillayarpatti - 3.5 KMS
Pillayarpatti to Thiruppathur -9 KMS
Karaikudi New Bus Stand to Pillayarpatti - 15.5 KMS
Pillayarpatti to Madurai - 73 KMS

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்
சிவகங்கை மண்டலம், சிவகங்கை

# மிராஸ் காபி நேரடி விற்பனை மையம்

## விற்பனை உரிமம் பெற விசாரனை வரவேற்கப்படுகிறது

கோவையைத் தலைமை இடமாகக் கொண்ட மிராஸ் காபியின் முதல் நேரடி விற்பனை மையத்தை, மூத்த வழக்கறிஞர் மற்றும் CBI யின் Former Public Prosecutor திரு. **N.சுந்தரவடிவேலு** அவர்கள், 23-01-2023 அன்று கோயமுத்தூர் R.S.புரத்தில் திறந்து வைத்தார்.

மிராஸ் காபி இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி திரு. **S.சுப்பிரமணியன்,** முதன்மை இயக்குநர் திரு. **சுந்தர் சுப்பிரமணியன், நிதி இயக்குனர்** திருமதி **வள்ளிமயில் சுப்பிரமணியன்** ஆகியோர் முன்னிலை வகித்தனர். முதல் விற்பனையை நிறுவனரின் பேத்தி செல்வி **ஷ்ரேயா விசாலாட்சி** பெற்றுக் கொண்டார்.

இந்த நேரடி விற்பனை மையம் மூலம் வாடிக்கையாளர்களுக்கு மிராஸ் காபியின் அக்ரஹாரம் பிளென்ட், பிளான்டேஷன் பிபி பிளென்ட் மற்றும் மிராஸ் ஸ்பெஷல் பிளென்ட் ஆகிய மூன்று வெவ்வேறு ரக காபி தூள்களும் நேரடியாகவே அரைத்து வழங்கப்படும். மேலும் மிராஸின் சொந்தத் தயாரிப்புகளான மரச்செக்கு எண்ணெய், நெய், வீட்டு முறைப்படி தயார் செய்யப்பட்ட மசாலாப் பொருட்கள் உட்பட 60 வகைப் பொருட்களை இங்கு வாங்க முடியும்.

மேலும் இங்கு மிராஸின் சூடான பில்டர் காபியும் கிடைக்கும். விசேஷங்களுக்கும், ஹோட்டல்களுக்கும் மொத்த விலையில் காபித்தூளும் விற்பனை செய்யப்படும்.

இதுபோன்ற 100 கடைகளை, இந்தியா முழுவதும் 2025 க்குள் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது. ராயல்டி கட்டணம் இல்லாமலும், முதல் 20 நபர்களுக்கு பிரான்சைஸி கட்டணம் இல்லாமலும் குறைந்த முதலீட்டில் அதிக லாபம் கிடைக்கும்படி இந்த விற்பனை மையங்கள் செயல்படும் என நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே திருச்சி, ஸ்ரீரங்கம், சிதம்பரம், புதுக்கோட்டை, உடுமலைப்பேட்டை, வேலூர், பாண்டிச்சேரி மற்றும் கோவையில் முக்கிய இடங்கள் ஆகியவற்றில் பிரான்சைஸீ கொடுக்கப்பட்டுள்ளது. பிற ஊர்களிலும் இந்த விற்பனை மையம் தொடங்கி குறைந்த, பாதுகாப்பான முதலீட்டில், நிறைந்த லாபம் பெற விரும்பும் தொழிலதிபர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்

94875 47852 / 75982 47852 / feedback@mirras.in

விற்பனை உரிமை வழங்குவதில் நகரத்தாருக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்

Advt

## தொழில் தொடங்கலாம் வாங்க 50

# ஸ்டார்ட் அப் உலகம்

சேதுராமன் சாத்தப்பன்

### இந்தியாவும் காசநோயும்

நம் நாட்டில் காசநோய் (டிபி) மூலமே அதிக இறப்பு நிகழ்கிறது. உலக அளவில் காசநோய் பாதிக்கப் பட்டவர்களில் 25 சதவீதத்திற்கும் அதிகமானோர் இந்தியாவில் இருப்பது குறிப்பிடதக்கது. 2030 ஆம் ஆண்டிற்குள் அனைத்து நாடுகளும் காசநோயை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை இலக்கு நிர்ணயித்திருக்கிறது. ஆனால், பிரதமரின் 'காசநோய் இல்லாத இந்தியா' திட்டத்தின் கீழ், வரும் 2025 ஆம் ஆண்டிற்குள் காசநோயை இந்தியாவில் இருந்து முற்றிலுமாக அகற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும், கோவிட் -19 க்குப் பிறகு, கிட்டத்தட்ட ஒரு கோடி மக்கள் உலகளவில் இரண்டாவது மிகக் கொடிய காசநோயால் பாதிக்கப்படுகிறார்கள். உலகளவில் பத்து லட்சத்திற்கும் அதிகமான மக்கள் இந்நோய்க்கு பலியாகிறார்கள். இந்த நோய்க்கான சிகிச்சையின் தரமானது என்றாலும் நீடித்த மற்றும் வலிமிகுந்ததாகவே உள்ளது.

### ஆரோக்யா ஏஐ

ஆரோக்யா ஏஐ (Aarogya AI) ஒரு சாஸ் 'SAAS' (Software As A Service) ஸ்டார்ட் அப் கம்பெனியாகும். இந்த கம்பெனி ஆர்ட்டிபிஷியல் இண்டெலிஜென்ஸை உபயோகப்படுத்தி காசநோய் பாதிக்கப்பட்டவர்களின் பாக்டீரியாவிலிருந்து டி.என்.ஏ வரிசையை பகுப்பாய்வு செய்ய உதவுகிறது. இது காச நோய் நோயாளிகளை எந்த அளவு பாதித்துள்ளது என்றும், எவ்வளவு அதிக சக்திவாய்ந்த மருந்துகளை எடுத்துக் கொள்ளலாம் என மருத்துவர்களுக்கு பரிந்துரைகளையும் செய்கிறது. அதாவது நோயாளிகளின் உடல் தாங்கும் சக்தியை பொருத்து, அதற்கு தகுந்தாற் போல் மருத்துவர்கள் மருந்துகளை பரிந்துரைக்க உதவுகிறது.

மரபணு மற்றும் ஆர்ட்டிபிஷியல் இண்டெலிஜென்ஸ் சக்திகளைப் பயன்படுத்துவதன் மூலம், ஆண்டிமைக்ரோபியல் எதிர்ப்பிற்கான துல்லியமான நோயறிதலைச் செய்கிறது.

### விரிவான மருந்து எதிர்ப்பு பகுப்பாய்வு

AAICare என்ற இவர்களின் ப்ராடக்ட் காசநோய் வந்த நபருக்கு, காசநோய்க்கு பரிந்துரைக்கப்படும் 19 மருந்துகளை உட்கொள்ளுவதால் ஏற்படும் எதிர்ப்பு பிறழ்வுகள், பன்முகத்தன்மை மற்றும் பரம்பரையானதா என்பதையும் முன்னறிவிக்கிறது. நோய்க்கிருமிகளின் பரிணாம வளர்ச்சியைப் புரிந்துகொள்ள ஒரு பையோஜெனெடிக் மரத்தை உருவாக்குகிறது. இதை வைத்து இந்த 19 மருந்துகளில் எந்த மருந்து அந்த நோயாளிக்கு கொடுப்பது என்று மருத்துவர் முடிவு செய்ய உதவுகிறது.

நோயாளிக்கு வேலை செய்யும் மற்றும் செய்யாத மருந்துகளின் பட்டியல் பற்றியும் குறிப்பிடுகிறது. மேலும் சிகிச்சையின் காலத்தை ஆறு மாதங்களுக்கும் கீழாகக் குறைக்கிறது.

### விரைவான மற்றும் பயனுள்ள கண்டறிதல்

இது போன்ற பகுப்பாய்வுகளை செய்ய முன்பெல்லாம் சில வாரங்களும், அதிக செலவுகளும் எடுத்து கொள்ள வேண்டியிருக்கும். ஆனால் இவர்களின் இந்த ப்ராடக்ட் ஆர்ட்டிபிஷியல் இண்டெலிஜென்ஸை பயன்படுத்தி வாரங்களை விட மணிநேரங்களில் கண்டறிய உதவுகிறது.

இந்த கம்பெனி பற்றி மேலும் விபரங்கள் அறிய www.aarogya.ai என்ற இணையதளத்தை சென்று பார்க்கவும்.

## இந்த மாத வழிகாட்டி நாட்டரசன்கோட்டை "பால்வீ" வீரப்பன் (சென்னை)

ஒவ்வொரு மாதமும் வழிகாட்டிகளை இளைஞர் களுக்கு அறிமுகம் செய்வதால் பலருக்கு தொழில் செய்யும் ஆர்வம் வந்திருப்பது நமக்கு வரும் தொலைபேசி அழைப்புகளிலிருந்து தெரிய வருகிறது. இதில் இரண்டு நன்மைகள் இருக்கிறது. ஒன்று திறமை வாய்ந்தவர்கள் நமக்கு

வழிகாட்டியாக கிடைப்பது. இரண்டாவது அந்த வழிகாட்டியை இளைஞர்கள் சரிவர பயன்படுத்திக் கொள்வதால் அவர்கள் தொழிலதிபர்களாக உயர்வது.

இந்த மாதம் நாம் அறிமுகப்படுத்தப் போவது நகரத்தார்களில் மிகவும் வித்தியாசமானவர். நமது பராம்பரிய தொழில்களில் இருந்து மாறுபட்டு வித்தியாசமான தொழில்கள் செய்பவர். அதிகம் படிக்காமல் தனது விடாமுயற்சியினால் ஒரு பெரிய தொழில் சாம்ராஜ்யத்தை உருவாக்கியவர். அண்ணாச்சி வி.ஜி.பி.சந்தோஷம் எப்படி ஒரு தொழில் சாம்ராஜ்யத்தை தனது தவணை முறை திட்டம் மூலமாக தொடங்கினாரோ அப்படி தனது மூளையை மூலதனமாக்கி இன்றைய தினம் பர்னிச்சர், ஹோட்டல் தொழில் என்று விரிவடைந்திருக்கிறார் "பால்வீ" வீரப்பன். பத்தாம் வகுப்பு வரை படித்திருக்கும் இவரின் தொழில் சாதனைகள் வியக்கத்தக்கதாக இருக்கிறது.

இவரை பேட்டி காணும் போது அவர் பேச்சில் இருந்த உற்சாகம் நம்மையும் தொற்றிக் கொண்டது. அவரது ஒவ்வொரு மூச்சிலும் தொழில் தான் வியாபித்து இருக்கிறது. வாருங்கள் கட்டுரைக்குள் போவோம்.

**எப்படி இந்த பர்னீச்சர் தொழிலுக்கு வந்தீர்கள்...**

அப்பாவும், அம்மாவும் எனது சிறிய வயதிலேயே காலமானதால் அதிகம் படிக்க இயலவில்லை. பத்தாம் வகுப்பு படித்தவுடன் பலரைப் போலவே பல கனவுகளுடன் சென்னைக்கு ரயிலேறினேன். அங்கு பாரிஸ் கார்னர் (பாரிமுனை) ஜெ.பாலபாய் & கோ என்ற மருந்துக் கம்பெனியில் வேலை, இதற்கிடையே ரேடியோ மெக்கானிஸம், டைப்பிங் பயிற்சி, பின்னர் ஒரு மருந்துக் கடையில் மேனேஜர் வேலை. மருந்து கடையில் வேலையில் இருந்தாலும் மனமெல்லாம் ஒரு தொழில் தொடங்குவதிலேயே இருந்தது.

இந்த சமயத்தில் இரண்டு வேளை, அதாவது மதியம் 12 மணிக்கும் அப்புறம் இரவு 8 மணிக்கும், தான் சாப்பாடு. காரணம் செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும் அல்லவா?

எம்.எஸ்.உதயமூர்த்தியின் புத்தகங்கள் தான் துணை என்றிருந்தேன். தன்னம்பிக்கை தரும் புத்தகங்கள் அவை. அடுத்து என்ன செய்வது என்ற குழப்பத்தில் இருந்த போதெல்லாம் எம்.எஸ். உதயமூர்த்தியின் நம்பிக்கையான வார்த்தைகள் பலமான அஸ்திவாரத்தை என்னுள் ஏற்படுத்தியது என்றால் மிகையாகாது.

வங்கிப் பணிக்கான வேலை வாய்ப்புகள் அப்போது அதிகம் வரும். அதற்கான அப்ளிகேஷன்களை ஆயிரக்கணக்கில் அடித்து வைத்து கொண்டு விற்க தெரியாமல் இருந்த ஒருவருக்கு, சிறிய பெட்டிக் கடைகள்

மூலம் அவர்களின் கடைகளில் போர்டு வைத்து விற்பனை செய்யும் யுக்தியை நான் தான் முதலில் யோசனை தெரிவித்தேன். அது அவர்களின் அப்ளிகேஷன்களை ஆயிரக்கணக்கில் விற்க உதவியது.

பின்னர் ஹோல்சேல் துணி, சட்டைகள் வியாபாரம். பின்னர் பர்னிச்சர் அதாவது சேர், பீரோ, கட்டில் போன்றவைகளை நடுத்தர மக்களுக்கு கொடுத்து தவணை முறையில் பணம் பெற ஆரம்பித்தேன். இது தான் எனது "பால்வீ" பர்னீச்சருக்கு அடித்தளம்.

**பால்வீ என்றால் என்ன அர்த்தம் என்று கேட்ட போது...**

எனது தாய், தந்தை மற்றும் எனது பெயர் மூன்றையும் இணைத்து பார்வதி, லக்ஷ்மணன், வீரப்பன் (பால்வீ – PALVE) என்பதின் சுருக்கம் என்றார்.

**எப்போது தனியாக கடை தொடங்கினீர்கள்?**

1981ம் வருடம் 150 சதுர அடியில் எனது பர்னீச்சர் கடையை துவங்கினேன். அடுத்த 5 ஆண்டுகளில் சொந்தக் கட்டிடத்தில் 2400 சதுர அடியில் பர்னிச்சருக்கான பிரத்தியேக ஷோரூம் தொடங்கினேன். இன்றைய தினம், அது பல ஆயிரம் சதுர அடியாக விரிவடைந்திருக்கிறது. அதில் தரமான மர ஃபர்னிச்சர், மேசைகள், தொழில் நிறுவனங்களுக்கான இரும்பு ஃபர்னிச்சர் என்று புதுமையாக வியாபாரம் செய்தேன். "பால்வீ" என்ற ஒரு பிராண்டை பர்னிச்சர்களுக்கு உருவாக்கினேன். தமிழ்நாட்டில் பர்னிச்சர்களுக்கு பிரத்தியோக பிராண்ட் கிரியேட் செய்தது நான் தான் என்கிறார். பிராண்ட்டுக்கான பேட்டன்ட் ரைட்ஸ் வாங்கிக் கொண்டேன். பின்னர் பால்வீயின் வளர்ச்சி அபரிதமானது. இன்றைய தினம் அலுவலக பர்னிச்சரில் அதிகம் கவனம் செலுத்துகிறோம். காரணம் நமது

உ சிவமயம் ஸ்ரீராமஜெயம்

**செட்டிநாடு வத்தல்கள் கிடைக்கும்**

எங்களிடம் தேன்குழல் வத்தல், கிள்ளு வத்தல், கரண்டி வத்தல், சின்ன வெங்காய வடகம் (கரிவடகம்), பிரண்ட (முறுக்கு வத்தல்), கத்திரி வத்தல், மாவத்தல், அவரை வத்தல், கேப்பை வத்தல், கேரட் வத்தல், பீட்ரூட் வத்தல், தக்காளி வத்தல், கறிவேப்பிலை வத்தல் ஆகிய சுவைமிகு வத்தல்களும் வேங்கரிசி மாவு, உப்புக்கண்டம், மற்றும் தடுக்கில் பின்னிய நடுவீட்டுக் கோலம் கிடைக்கும்.

தொடர்பிற்கு: லட்சுமி மணிகண்டன், காரைக்குடி

8508392087 / 8778527165 / 8760742590

AMT

பர்னிச்சர் அவர்களுக்கு பிடித்து விட்டால் ரிபீட் ஆர்டர்கள் வருவது தொடரும். தரமான பர்னிச்சர் என்ற வகையில் “பால்வீ” பிராண்ட் பேசப்படுகிறது.

தரத்தில் எதாவது குறையென்றால் உடனடியாக சரி செய்வது அல்லது அந்த பர்னிச்சரை திரும்பப் பெற்றுக் கொள்வது போன்ற வாடிக்கையாளர் சேவைகளை 1980களிலேயே செய்ததால் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை பெருமளவில் பெற முடிந்தது.

**எப்படி ஆன்லைன் போட்டிகளை சமாளிக்கிறீர்கள்?**

ஆன்லைன் பர்னிச்சர் சேல் என்பது ஒன்று, இரண்டு வாங்குபவர்களுக்கான தளம். நாங்கள் மொத்தமாக கம்பெனிகளுக்கு விற்பவர்கள். இதனால் ஆன்லைனை ஒரு பெரிய போட்டியாக நினைக்கவில்லை என்கிறார். மேலும், இன்றைய தினத்திலும் பலரும் பர்னிச்சர்களை பார்த்து வாங்குவதையே விரும்புகிறார்கள் என்கிறார்.

விலை குறைவான ரப்பர் மரத்தினால் வெளிநாடுகளில் செய்யப்பட்டு இறக்குமதி செய்யப்படும் பர்னிச்சர்களுக்கு மத்தியில் இருக்கும் போட்டிகளை எப்படி சமாளிக்கிறீர்கள் என்று கேட்டபோது, “ அவைகளை நாங்களும் விற்கிறோம், ஆனால் அதற்கு எந்தவிதமான கியாரன்ட்டியும் கிடையாது என்போம். எங்களுடைய ப்ராடக்டுகளுக்கு பல வருடங்கள் கியாரண்டி கொடுக்கிறோம். இதனால் எங்களுடைய ப்ராடக்டுகள் போட்டியில் ஜெயிக்கின்றன”, என்றார்.

**உங்களின் ஓட்டல் தொழில் பற்றி கூறுங்களேன் என்று கேட்டபோது...**

ஊட்டியில் ஒரு ஏக்கர் நிலத்தில் 36 ரூம்கள் கொண்ட ஹோட்டலை (பால்வீ சுகவாசம்) நிர்மானித்து அதை திறம்பட நடத்தி வருகிறோம். அதன் விரிவாக்கத்திலும் தற்போது ஈடுபட்டுள்ளோம் என்றார்.

**நமது இளைஞர்களுக்கு கூற விரும்பும் அறிவுரைகள் என்று கேட்டபோது**

ஒரு முறை போன் செய்து சரவணபவன் அண்ணாச்சி என்னை வரச் சொல்லி அப்பாயிண்ட்மெண்ட் கொடுத்து இருந்தார். நான் சரியான நேரத்தில் சென்று காத்துக் கொண்டிருந்தேன். அரை மணி நேரம் கழித்து வந்தவர், “நான் உங்களை அரை மணி நேரம் காக்க வைத்து விட்டேன். மன்னித்துக் கொள்ளுங்கள் என்றார்”. அவருடைய பெருந்தன்மையை எண்ணி வியந்தேன். அதிலிருந்து நேர நிர்வாகத்தை மிகச் சரியாகக் கடைபிடிக்கிறேன். அதை ஒவ்வொரு நகரத்தார் இளைஞரும் கட்டாயம் கடைபிடிக்க வேண்டும்.

பணம் இருந்தால் தான் தொழில் என்பதைவிட கடினமான உழைப்பு இருந்தால் தான் தொழில் என்பதில் நம்பிக்கை இருக்க வேண்டும்.

பிரபஞ்ச சக்தியை நம்ப வேண்டும். சந்தர்ப்ப சூழ்நிலைகளை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**குடும்பம் பற்றி**

அப்பா KL. லட்சுமணன் செட்டியார், நாட்டரசன்கோட்டையைச் சேர்ந்தவர். அம்மா பார்வதி. மனைவி பெயர் சாந்தி.

இரண்டு மகள்கள். மூத்த மகள் பார்வதி ஷீலா. கணவர் பெயர் முத்து விஜய், தற்போது ஆரக்கிள் கம்பெனியில் பணிபுரிந்து வருகிறார். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் ஹரி சுப்பிரமணியன் மற்றும் பவதாரணி.

இரண்டாவது மகள் சுதா கண்ணாத்தாள். கணவர் பெயர் கைலாசநாதன், விப்ரோ கம்பெனியில் பணிபுரிந்து தற்போது தனியாக இன்டீரியர் டிசைன் வேலைகளை எடுத்து பெரிய அளவில் செய்து வருகிறார். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் கௌதம் மற்றும் வீரநாராயணன்.

## வாழ்த்துகிறோம்

கண்டனூரைச் சேர்ந்த மாத்தூர் - உறையூர் பிரிவைச் சார்ந்த முனைவர் எஸ்.நாராயணன் அவர்கள் வேலூர் - VIT பல்கலைக் கழகத்தில் Pro-vice Chancellor - ஆக பணியாற்றி வந்த நிலையில் ஸ்ரீவில்லிபுத்தூர், கலசலிங்கம் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். துணைவேந்தராக பொறுப்பேற்றுள்ள முனைவர் எஸ். நாராயணன் அவர்களுக்கு நமது செட்டிநாடு சார்பாக வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உங்கள் சந்தேகங்களுக்கு எழுதுங்கள்
ஈமெயில் Sethuraman.sathappan@gmail.com,
மொபைல் 98204 51259,
இணையதளம் www.startupandbusinessnews.com

NAT LITE Polycarbonate Sheet
Polycarbonate Sheets

FOSROC
Construction Chemicals

SHERA™
build better, live better
Planks & Boards

MOMENTIVE
performance materials
Silicon Sealants

DR. FIXIT®
WATERPROOFING EXPERT
Water Proofing Materials

Sika®
Epoxy flooring

JK WALL PUTTY
White Cement Based Putty

Jaichittra inc.,
Your Local Supporter With Global Products

NAT LITE Polycarbonate Sheet ... Really Natural

HEAD OFFICE : Contact No: 044 - 4951 5212 / 9444072274 / 9444079974
SHOWROOM : Contact No : 044 4851 9029 / 94440 83402

MAHAGAONVI POLYMER ENERGY
Plot No 135 i1 & i2 , Kolhar Industrial Area. Bidar – 585401 . State : Karnataka

Manufacturers of Alternate Fuels for Cement Manufacturing Industries , Captive & Thermal Power Plants & Metallurgical Industries

DELIVERING ACROSS ALL STATES OF INDIA

Scrap Plastics
Scrap Rubber & Tyre

Process of Thermal Cracking & Thermal Degradation



Polymer Fuel

Carbon Black Powder

We Manufacture :

Liquid Fuel : Polymer Fuel (Alternate Fuel to HSD , LDO & Furnace Oil) .
Solid Fuel : Carbon Black Powder (Alternate Fuel to Coal & Petcoke ) , Dolachar , Rice Husk & Saw Dust.

Contact us on T : +91-9686222511 . Email : jayanth.vaidya@mpenergy.in . Website : www.mpenergy.in

மகன்லால்®
வைரம் & தங்கம்

We Offer Diamonds
Grade by
GIA®

Authorised
Forevermark Jeweller
FOREVERMARK

MAGANLAL MEHTA & CO
Diamond & Gold Jewellery Private Limited

84 YEARS

#51, AVM Building, Kallukatti North, Karaikudi - 630 001

# 27/43, North Usman Road, T.Nagar, Chennai - 600 017

we@maganlalmehta.com www.maganlaldiamonds.com

CUSTOMER CARE
8881115555

# திட்டமிடப்பட்ட நிதி நிர்வாகம்

## நிம்மதியான வாழ்க்கைக்கு வலுவான கட்டுமானம்

டாக்டர் சோம வள்ளியப்பன்

புள்ளி வச்சுதான் கோலம் போடணும். கோலமாவைக் கையில அள்ளி, படம் வரைவது மாதிரி தரையில் தூவக் கூடாது. பணம் தான் கோலமாவு. புள்ளி வைப்பது வாழ்க்கை முழுவதற்குமான பைனான்சியல் பிளானிங். அதுதான் ஆரம்பப் புள்ளி.

**"பைனான்ஷியல் பிளானிங்?"**

"ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்கிறோம். உறவினர்கள் விருந்துக்கு வரப் போகிறார்கள். அதற்காக யோசித்து பிரமாதமாக இல்லாவிட்டாலும். நம்மால் செய்யக் கூடிய அளவு மற்றும் விருந்தினரின் ரசனைக்கு ஏற்ற மெனு தயாரிப்போம் அல்லவா? அந்த மெனு போன்றது தான் பைனான்சியல் பிளானிங்"

**"மெனுவில் என்ன என்ன இருக்க வேண்டும்?"**

எடுத்தவுடன் ஒரு அப்பிடைசர். சூப்

வேலைக்கு சேர்ந்தவுடன் எடுக்க வேண்டியது இன்சூரன்ஸ். இன்சுரன்ஸ் பிரீமியத்தில் சேமிப்பு போன்ற தொடர்பில்லாதவை நீக்கிய பியூர் இன்ஷூரன்ஸ். அதாவது டெர்ம் இன்சூரன்ஸ். மாதச் சம்பளத்தை போன்று குறைந்த பட்சம் 50 மடங்கு தொகைக்கு, 40,000 வருமானம் இருப்பவருக்கு ரூபாய் 20 லட்சத்திற்கு ஆயுள் காப்பீடு.




**கூடவே கொஞ்சம் ஸ்டாட்டர்ட்ஸ்**

நிறுவனத்திலேயே மெடிக்கல் இன்சூரன்ஸ் எடுக்கப்பட்டிருந்தாலும் நிறுவனம் மாறுகிற இடைப்பட்ட காலங்களில் அந்த காபந்து இல்லாமல் போகும் ஆபத்தை தவிர்ப்பதற்காகவும் பின்னால் உடம்பில் உபாதைகள் சேர்ந்த பிறகு கூடுதல் பிரீமியம் கொடுத்து மெடிக்கல் பாலிசி எடுப்பதைத் தவிர்ப்பதற்காகவும், வேலைக்கு சேர்ந்த உடனேயே தலைக்கு குறைந்தபட்சம் ரூபாய் 50 ஆயிரம் வீதம், தனக்கும் தன் குடும்பத்தினருக்கும் ஒரு மெடிக்கல் இன்சூரன்ஸ் எடுத்துவிட வேண்டும்.

**அடுத்தடுத்த ஜட்டங்கள் வரும் வரை கொறிப்பதற்கு கூடுதலாக. வற்றல் அப்பளம். சிப்ஸ்**

மூன்று மாதத்திற்கு ஆகக்கூடிய செலவு தொகை பணத்தை உடனடியாக எடுக்கக் கூடிய விதமாக வங்கியில் வைத்திருப்பது. ஊதியம் இல்லாமல் போகும் ஆபத்து தவிர, மற்ற நேரங்களில் இதில் கை வைக்க கூடாது. கூடுதல் வட்டி கிடைக்கிறது அதிக, வருமானம் பார்க்க முடியும் என்று இந்த பணத்தை வேறு இடத்திற்கு மாற்றக் கூடாது.

**Buffet உணவு மேசையின் Spread-ஐ அழகு கூட்டும் சாலட்கள்...**

வீட்டுப் பெண்களுக்கு ஆபத்துக்கு உதவும், மன திருப்தியும் கொடுக்கும் தங்க நகைகள் அணிவதற்கு மட்டும். முதலீடாக அல்ல.

அடிப்படை உணவு சாதம் அல்லது சப்பாத்தி அல்லது ரொட்டி வாங்கிய பொருளின் மதிப்பு தொடர்ந்து உயரும், எது நேர்ந்தாலும் 'இது என் வீடு' என்று தொடர்ந்து இருக்க உதவும், எவரும் வெளியே போ. காலி செய் என்று சொல்ல முடியாத ஒரு வசிப்பிடம், தொடர்ந்து EMI கட்ட வேண்டிய கட்டாயத்தினால் வலுவாக சேமிக்க ஏது செய்யும், கட்ட வேண்டிய வருமான வரியில் கணிசமான மீதம் செய்து தரும் ஒரு சொந்த பிளாட் அல்லது வீடு. வீட்டுக்கடன் பெற்று வாங்கலாம்.

**வெஜிட்டபிள் சைட்டிஷ்கள்- சப்ஜிகள், அசைவ பதார்த்தங்கள், ரைத்தா**

பெண் பிள்ளைகள் இருப்பவர்கள் போஸ்ட் ஆபீஸ் செல்வ மகள் சேமிப்பு அல்லது ரிசர்வ் வங்கியின் சாவரின் கோல்ட் பாண்ட் திட்டங்களில் சேமிப்பு.

Dr.மணீஸ் பல் மருத்துவமனை

No: 315/24 MAM பில்டிங் பூரணி மருத்துவமனை எதிரில்
(மீனாட்சி பேன் ஹவுஸ் காம்ப்ளக்ஸ் மாடி)
செக்காலை ரோடு - காரைக்குடி
வார நாட்கள் காலை 9.30 முதல் இரவு 9.00 வரை
ஞாயிறு முன் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்

இலவச பல் பரிசோதனை செய்யப்படும்

பல் சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு பெற Dr.மணீஸ் பல் மருத்தவமனைக்கு வருகை தாருங்கள்.

பல் பாதுகாப்பிற்கு காலை மற்றும் இரவு இருவேளையும் பல் துலக்குங்கள்

Dr.S.மணிகண்டன்,BDS., MBA(HM)
9551624126 / 7904079923


குழந்தைகள் படிப்பு எதிர்பாராத தேவைகளுக்கு என்பது போன்ற ஒவ்வொரு நிதி தேவைக்கும் ஒரு தனி ஈக்விட்டி மியூச்சுவல் பண்டு.

வேலைக்கு போகாமல் வியாபாரம் செய்து அல்லது வேறு விதங்களில் வருமானம் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு சேம நல நிதி இல்லை என்ற காரணத்தினால், அவர்கள் செய்ய வேண்டியது பப்ளிக் பிராவிடண்ட் ஃபண்ட் சேமிப்பு PPF. அல்லது நம்பகமான இடங்களில் கட்டக் கூடிய மாதாந்திர சீட்டுகள். இவை தவிர சிலர் பிடிக்கும் எனக் கேட்டு பெறும் உணவுகள்

பரஸ்பர நிதி சீட்டு பெற்றோரிடம் இருந்து கிடைத்த பணம், போனஸ் போன்றவற்றை வைத்து உள்ளூரில் வீட்டுமனைகள் வாங்கலாம்.

டெசர்ட்ஸ் - இனிப்புகள் - ஐஸ்கிரீம்

பணி ஓய்வுக்குப் பிறகு தேவைப்படும் வருமானத்திற்காக இப்போதே செய்ய வேண்டிய NPS போன்ற ஓய்வூதிய திட்டங்களில் சேமிப்பு. ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து கட்டி அதற்காக வருமானவரி விலக்கும் பெற்று இடையில் அந்தப் பணத்தை எதற்கும் எடுக்காமல் சேமித்து, பெருக்கி, பணி ஓய்வுக்குப் பிறகு தொடர் வருமானம் பெறும் வாய்ப்பை உருவாக்கிக் கொள்வது.

ஃபான் - சுப்பாரி - சீரகம்

கூடுதலாக விவரம் தெரிந்தவர்கள் அவர்களாக தேர்வு செய்யும் ப்ளூசிப் பங்குகளில் சிறிய அளவுகளில் நீண்டகால மற்றும் தொடர் முதலீடு. மாதமொரு புளூசிப் பங்கு.

சாப்பாட்டு மெனுவில் எது முதலில் எது அடுத்தது என்று ஒரு வரிசை இருக்கிறதோ அதே போல முதலீடுகளையும் சொல்லியிருக்கிற விதம் செய்தால், நன்மை, பாதுகாப்பு மற்றும் முழுப்பலன். எடுத்தவுடன் ஐஸ்கிரீம் கடைசியில் சூப் என்றால் எப்படியிருக்கும். அப்படி யோசித்து போட்ட மெனுதான் இது. மொத்தத்தில் வருடத்தில் 12 மாதங்களிலும் மழை பெய்யாது என்றாலும், பெய்யும் காலத்தில் சேமித்து வைத்து ஆண்டு முழுக்க பயன்படுத்துவதைப் போல, வாழ்க்கையின் மூன்றாவது பகுதியான பணி ஓய்வுக்குப் பிறகான வருமானம் வராத காலகட்டத்தை சமாளிப்பதற்காக, வாழ்க்கையின் இரண்டாவது பகுதியான சுயமாக சம்பாதிக்கும் காலகட்டத்தில் கிடைக்கும் பணத்தை, அந்த காலகட்டத்திலேயே முழுவதும் செலவழித்து விடாமல், அதில் ஒரு பகுதியை சேமிப்பதும், மேற்சொன்ன விதங்களில் பணத்தை பிரித்து போட்டு முதலீடு செய்வதும் ஒரு கலை மட்டுமல்ல, ஒரு நிம்மதியான வாழ்க்கைக்கான வலுவான கட்டுமானமும் கூட. ■

## மஹா கும்பாபிஷேகம்

புதுக்கோட்டை மாவட்டம், வி. லெட்சுமிபுரத்தில் அருள்பாலித்து வரும் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் பரிவார மூர்த்திகளுக்கு சுபகிருது வருடம், தை மாதம், 27-ஆம் தேதி, (10.02.2023) வெள்ளிக் கிழமை அன்று அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் சிறப்பான முறையில் நடைபெற்றது. இறை அன்பர்கள் திரளாக கலந்து கொண்டு திருவருளும் குருவருளும் பெற்றனர்.

# நாட்டரசன்கோட்டையில் ‘ஆயா அப்பத்தா’ வீட்டில் 70 பேரப்பிள்ளைகள் கோலாகலம்

பிரேமா நாராயணன்

ஒரு காலத்தில் ‘எப்படா ஸ்கூலில் லீவு விடுவாங்க’ன்னு காத்திருந்து, விடுமுறை தொடங்கியதும் பையைத் தூக்கிக் கொண்டு ஆயா, அப்பத்தா வீடுகளுக்குப் புறப்பட்டுவிடுவோம். விடுமுறை நாட்களில் பாதிப் பொழுதுகள் ஆயா வீட்டிலும் மீதிப் பொழுதுகள் அப்பத்தா வீட்டிலும் மகிழ்ச்சிகரமாகக் கழியும். ஆயா வீட்டில் பெரியம்மா, சித்தி மற்றும் அம்மான் பிள்ளைகளுடனும் அப்பத்தா வீடென்றால் சித்தப்பா, பெரியப்பா, அத்தை மக்களுடனும் நாட்கள் களை கட்டும். விடுமுறை முடிவதே தெரியாது. இந்தத் தலைமுறை இழந்து வரும் பல நல்ல விஷயங்களில் இதுவும் ஒன்று.

அனைவரும் அனுபவிக்க வேண்டிய அருமையான இந்த அனுபவங்கள், இப்போதைய தலைமுறை-யினருக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காக நாட்டரசன்கோட்டை ’அன்பாலயா’ அமைப்பினரும் நாட்டரசன்கோட்டை நகரத்தார் நலச்சங்கம் (சென்னை) உறுப்பினர்களும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த நகரத்தார் கலாசார விழிப்புணர்வு முகாம்தான் ‘ஆயா அப்பத்தாள் வீடு’. நாட்டரசன்கோட்டையை ஆயா அல்லது அப்பத்தா ஊராகக் கொண்ட 70 மாணவ மாணவியரை கிறிஸ்துமஸ் விடுமுறையில் ஒருங்கிணைத்து, 5 நாட்கள் அவர்களைத் தங்க வைத்து, நம் செட்டிநாட்டின் விழுமியங்களைக் கற்றுக்கொடுத்து, அவர்களை மகிழ்ச்சிக் கடலில் திளைக்க வைத்திருக்கிறது அன்பாலயா. அந்த முகாமில் பங்கேற்ற நாட்டரசன்கோட்டை பேரப்பிள்ளைகளில் ஒருவர் ராம. மங்கை. சென்னையில் 8ம் வகுப்பு படிக்கிறார். இவருடைய தந்தை சோம.இராமநாதன். தாய் ராம. கண்ணாத்தாள். மங்கையின் ஆயா ஊர் நாட்டரசன்கோட்டை. எனவே இந்த முகாமில் சென்னை-யிலிருந்து ஆர்வத்துடன் வந்து கலந்துகொண்டார்.

இதில் குறிப்பிடவேண்டிய விஷயம், எந்தப் பிள்ளைக்கும் பெற்றோர் உடன் இருக்கக்கூடாது. மொபைல் வைத்துக்கொள்ளக் கூடாது. 5 நாட்களும் அங்கேயே தங்கி, உண்டு, உறங்கி, பல விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். மங்கை போன்ற பல மாணவியர் அப்பா, அம்மாவைப் பிரிந்து தனியாக 5 நாட்கள் தங்கியது அப்போதுதான் முதல் முறை. வித்தியாசமான தன்னுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார் மங்கை.

“டிசம்பர் 23ம் தேதி நாட்டரசன்கோட்டைக்கு அம்மாவுடன் கிளம்பினேன். ‘அன்பாலயா’ நிர்வாகமே சென்னையிலிருந்து போறவங்களுக்காக ஒரு பஸ் ஏற்பாடு செய்திருந்தாங்க. நாட்டரசன்கோட்டையில் ஆயா வீட்டுக்குப் போய்ட்டு, நிகழ்ச்சி நடத்துறதுக்காக அவங்க ஏற்பாடு செய்திருந்த ஒரு பள்ளி அரங்கத்துக்குப் போனோம். 12 வயசிலிருந்து 24 வயசு வரைக்கும் உள்ளவங்க கலந்துக்கிட்டாங்க. எல்லாரும் காலை உணவு சாப்பிட்டதும் பெயர்களைப் பதிவு செய்து

சான்றிதழ் பெறும் ராம.மங்கை

ஐடி கார்டு கொடுத்தாங்க. முதலில் 100 பேர் பெயர் கொடுத்திருந்தாலும் ஆன்லைன் கிளாஸ் போன்ற காரணங்களால் 70 பேர்தான் வந்தாங்க. 23 முதல் 28 வரை அஞ்சு நாளும் காலை, இரவு பஃபே முறையில் சாப்பிட்டோம். வெளியில் போறப்பவும், மதியமும் இலையில் சாப்பாடு. ரொம்ப சுவையா இருந்தது. எங்களை எல்லாம் 5 பேர் கொண்ட குழுவாகப் பிரிச்சு, ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு நதியின் பேரை வச்சு, எங்களுக்கு ஒரு வாலன்டியரையும் லீடராக நியமிச்சாங்க!“

**“இந்த முகாம் உங்களுக்கு பயனுள்ளதா இருந்ததா? என்ன கற்றுக்கொண்டீர்கள்?”**

“ஆயா அப்பத்தா வீடு’ முகாம் நிறைய விதங்களில் ரொம்ப யூஸ்ஃபுல்லா இருந்தது. முதல் விஷயம் நான் இதுவரை அம்மா அப்பாவோ, ஆயா அய்யாவோ அல்லது அப்பத்தா அய்யாவோ இல்லாமல் தனியாகப் போய் எங்கேயும் தங்கினதில்ல. இதுதான் முதல் தடவை. என் சித்தி பொண்ணுங்களும் வந்திருந்தாங்க. முதல் நாள் மட்டும்தான் எல்லாருமே புதுசா இருந்தாங்க. மறுநாளே எல்லாரும் வந்து பேசி, ஒருத்தரை ஒருத்தர் தெரிஞ் சுக்கிட்டு, நல்ல ஃப்ரெண்ட்ஸ் ஆயிட்டோம். அதுக்கப்புறம் அம்மா அப்பாவை விட்டுட்டு இருக்கோம்கிற உணர்வே வரல. “முதல் விஷயமாக வீட்டை விட்டு வெளியே போய் தங்கினால் எப்படி நடந்துக்கணும்னு தெரிஞ்சுக்கிட்டேன். நகரத்தாரின் பெருமைகளைத் தெரிஞ்சுக்கிட்டேன். நம்முடைய 9 கோயில்கள், அதனுடைய பிரிவுகளைப் பத்தி எல்லோருமே தெரிஞ்சுக்கிட்டோம். ஒவ்வொரு நாளும் காலையும் மாலையும் ஒரு உறுதிமொழி எடுத்துக்கிட்டோம். வந்த பேச்சாளர்கள் எல்லோருமே அந்த 9 உறுதிமொழிகளில் ஒரு விஷயத்தைப் பத்தி பேசினாங்க. அதிலிருந்தும் நிறையக் கத்துக்கிட்டோம். பேசிய எல்லோருமே நம்ம பிள்ளைகள், அந்தக் காலம் மாதிரி திரும்ப தொழில் ஆரம்பிக்கணும். வேலைக்குப் போய் சம்பளம் வாங்குவதை விட பிசினஸ்தான் நல்லதுன்னு அமுத்தமா சொன்னாங்க. அங்கே இருந்த நாட்களில் நம்ம முன்னோர்கள் எப்படி இருந்தாங்க, நம்முடைய பழக்கவழக்கங்கள் என்னென்ன, எப்படிப் பேசுவோம், எப்படி சாப்பிடுவோம், சமூகத்தில் நமக்கு எந்த மாதிரி முக்கியத்துவம் இருந்தது. இப்படி நகரத்தார் இனம் பத்திப் பல விஷயங்கள் சொல்லிக் கொடுத்தாங்க. பல பேச்சாளர்களும் முக்கிய பிரமுகர்களும் வந்து பேசினாங்க. நடுநடுவே விளையாட்டுக்கள், வேடிக்கையான போட்டிகள் எல்லாம் இருந்ததால் எங்களுக்கு போர் அடிக்கல.

‘தேவகோட்டை’ ராமநாதன் பேசினது ரொம்ப ஜாலியா இருந்தது. முதல் நாள் எல்லோருக்கும் இருந்த தயக்கத்தை அவர் பேச்சு போக்கிடுச்சு. ராக்கப்பன் அய்யா வீட்டில்தான் மாணவிகள் எல்லாம்


ADITYA DIAGNOSTICS
Research Laboratories

Accredited by NABL MC-4508
Registered with Ministry of Health and Family Welfare
Telangana A State Pollution Control Board

The Leading Center For Onsite Medicals

A leading full-service Diagnostic Center in Andhra Pradesh and Telangana, founded in 2000.

2 fully-equipped labs in Hyderabad
at Kukatpally Housing Board & Erragadda

22 years of expertise in diagnostics
100+ organisations and 8,00,000 patients served

Key People

Dr. A. Saraswathi Devi *(Founder)*
Ph. D. (Biochemistry), 25+ yrs experience
*Previously NIMS & Dr. Reddy's Laboratories*

Dr. Ravi Krishna
SVS, MD, DMRD (Radiology)
30+yrs of experience

Dr. Rajani Gutta
Ph. D. (Biochemistry)
25+yrs of experience

Dr. Ch. Varaprasad
MD (GP)
25+yrs of experience

Services

Pathology & Microbiology: Blood Tests, Urine Tests, Body Fluid Tests
Cardiography: ECG, Treadmill Testing
Radiography & Sonography: Computed Radiography, Ultrasound Scan, Color Doppler
Spirometry & Audiometry: PFT, Hearing

The ADRL Promise: Results You Trust

Accuracy — Stringent quality control as per NABL standards
Accountability — Reliable process: end-to-end machine integration and multiple check-points
Personalisation — Custom packages and direct involvement of management

For Corporate Enquiries
+91 - 90636 20595
aditya@adityalabs.com
www.adityalabs.com

Laboratory Locations:

Erragadda
8-3-165/5/1B/2, Deccan Chambers, Opp Erragadda Bus Stop, Erragadda, Hyderabad, Telangana 500018
+91 40 2381 7362

Kukatpally
No. 256 & 258, SR Towers, Road#4, KPHB Colony, Phase One, Kukatpally, Hyderabad, Telangana 500072
+91 40 4350 0918

“நாட்டரசன்கோட்டையில் இயங்கும் ‘அன்பாலயா’ அறக்கட்டளை, அன்பை அடிப்படையாக வைத்து அவ்வூர் மற்றும் சுற்றியுள்ள ஊர் மக்களுக்கு கல்வி, கலாசாரம், கலை, இயற்கையைப் பேணுதல் போன்ற தளங்களில் பணி செய்வதற்கென தொடங்கப்பட்ட ஓர் அறக்கட்டளை. ஏற்கெனவே இந்த அமைப்பினர் ‘ஆத்மாலயா’ என்ற அமைப்பைத் தொடங்கி முதியோர்களுக்கு உணவு ‘ஆரோக்கியா’ என்ற அமைப்பின் மூலம் மருத்துவ உதவிகளும் செய்து வருகின்றனர். திரு சந்திரசேகர் இவ்வமைப்பின் நிர்வாக அறங்காவலர்.

அன்பாலயா அறக்கட்டளை மற்றும் நாட்டரசன்கோட்டை நகரத்தார் நலச்சங்கம் சென்னை உறுப்பினர்களால் 2022 டிசம்பர் 24 ஆம் தேதி முதல் 28 ஆம் தேதி வரை ஐந்து நாட்கள் “ஆயா அப்பத்தாள் வீடு “ என்ற நகரத்தார் கலாசார விழிப்புணர்வு முகாம் இரண்டாவது முறையாக நாட்டரசன்கோட்டையில் நடைபெற்றது. இந்த முகாம் ஏற்கனவே 2017 ஆம் ஆண்டு நடைபெற்றுள்ளது.

நகரத்தார் இளைஞர்கள் மத்தியில் ஒற்றுமை ஏற்படுத்தவும், இளைஞர்களுக்கும் பெரியவர்களுக்கும் இடையே இணக்கம் ஏற்படவும் ஒரு பெரிய குடும்ப சூழலை உருவாக்கி அனைவரையும் ஐந்து நாட்கள் ஒன்றாக வைத்து, நமது பொற்கால மரபுகள், பெருமைகள், நமது பின்னடைவுகள் மீண்டும் நமது எழுச்சி என்ற சிந்தனையில் நமது நகரத்தார் பெருமக்கள் தங்களது அனுபவமிக்க உரையாடல்களின் மூலம் இளைஞர்களுக்கு விளக்கிச் சொல்லி நமது பாரம்பரியம் காப்பது அவர்கள் பெருமை மற்றும் உரிமை என்பதை உணரவைப்பது என்ற நோக்கத்தின் அடிப்படையில்இந்த முகாம் நடைபெற்றது.” என்கிறார் ‘அன்பாலயா’ அறக்கட்டளையின் முக்கிய அறங்காவலர்களுள் ஒருவரான கண.ராக்கப்பன்.

தங்கினோம். 2வது நாள் ரெண்டு பஸ்ஸில் ஆத்தங்குடி போனோம். அங்கேயிருந்த பெரிய செட்டிநாட்டு மாளிகை பார்த்தோம். நம்ம கலாசாரம் பத்தி சின்ன க்விஸ் வச்சாங்க. செட்டிநாட்டில் நாம உபயோக்கிக்கும் வார்த்தைகளிலும் க்விஸ் இருந்தது. சாம் கண்ணப்பன் அய்யா வீட்டுக்குப் போனோம். அங்கே சில கேம்ஸ் எல்லாம் இருந்தது. கூட்டுக்கறி, மண்டி, பச்சடி, கெட்டிக்குழம்பு மாதிரி நம்ம சமையல் எல்லாம் சொல்லிக் கொடுத்தாங்க. அதிலேயே போட்டிகளும் வச்சாங்க. அந்தாக்ஷரி விளையாடினோம். சந்தோஷமா இருந்தது. 4வது நாள் ஒரு மாந்தோப்புக்குப் போனோம். பம்ப்செட்டில் குளிச்சோம். ஒரு படைப்பு வீட்டுக்குக் கூட்டிட்டுப் போனாங்க. படைப்பு பத்தி தெரிஞ்சுக்கிட்டோம். கல்யாணப் படைப்பு, கோயில் படைப்பு எல்லாம் எப்படிப் படைப்பாங்கன்னு விளக்கினாங்க.. பசங்க எல்லோருமே தலைப்பாகை கட்டிக்கிட்டுத்தான் உள்ளே போய் சாமி கும்பிட்டாங்க. நடுவீட்டுக் கோலம் போடவும் கத்துக்கிட்டோம்.

கடைசி நாள், பெண்கள் எல்லாம் தாவணி, புடவையிலும் பசங்க எல்லாம் வேஷ்டி சட்டையிலும் ரொம்ப கலர்ஃபுல்லா இருந்துச்சு.. ஆனா தோழிகளைப் பிரிஞ்சு வரும்போது ரொம்ப கஷ்டமாக இருந்தது. பங்கேற்ற எல்லோருக்கும் சான்றிதழ் கொடுத்தாங்க. நிறைவு நாளில் DNA triggering பத்தி ஒரு பவர்பாயின்ட் பிரசன்டேஷன் கொடுத்துப் பேசினாங்க.. அப்புறம் கண்ணாத்தாள் கோயில் பக்கத்தில் ஒரு மண்டபத்தில் பிள்ளையார் நோன்புக்கு எல்லோரும் இழை எடுத்துக்கிட்டோம். அன்னைக்கு இரவே எல்லோரும் சென்னைக்கு வர்ற பஸ்ஸில் கிளம்பிட்டோம்.. ரொம்ப ஜாலியா, புது அனுபவமாக இருந்துச்சு.. மொத்தத்தில் எனக்கு ரொம்பவே பிடிச்சிருந்துச்சு!”

**“இது மாதிரி அடிக்கடி நடத்தலாமா? இளம் தலைமுறை உங்கள் அபிப்ராயம் என்ன?”**

“நான்முதலிலேயேசொன்னமாதிரிஇந்த கேம்ப் ரொம்ப யூஸ்ஃபுல்லா இருந்துச்சு.. நம்ம செட்டிநாடு பத்தியும் நகரத்தார்களின் சிறப்புபத்தியும்எங்கரெண்டுஅய்யாக்களும் சொல்லியிருக்காங்க.. இருந்தாலும் நம்ம முன்னோர்கள் எல்லாம் எப்படி இருந்தாங்கன்னு இன்னும் ஆழமாகத் தெரிஞ்சுக்க முடிஞ்சுது.. இன்னொரு விஷயம்.. நம்முடைய செட்டிநாட்டு ஸ்லாங்கில் ஃப்ரீயா எல்லோரோடும் பேச முடிஞ்சுது.. எப்போதும் ஸ்கூல், வீடுன்னு இருக்கிற நாங்க, அந்த கேம்ப்பில் பலருடன் பழக முடிஞ்சது.. நிறைய புது தோழிகள் கிடைச்சாங்க.. வித்தியாசமான அனுபவம் அது. 5 நாள் இல்லாமல் ஒரு வாரம் வச்சிருந்தால் இன்னும் கொஞ்சம் நல்லா இருந்திருக்கும்! நடத்தின அமைப்பினர், வாலன்டியர்ஸ், பெற்றோர் எல்லோருக்கும் என் நன்றி!”

புதுமையான அனுபவம் தந்த பரவசமும் மகிழ்ச்சியும் மங்கையின் வார்த்தைகளில் பொங்கியது. ■

# குறள் பாட்டு

குழந்தைக்கவிஞர் செல்ல கணபதி

அதிகாரம் – 21 தீவினை அச்சம்

201) தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு.

தீவினை யாளர் தீபோல் பற்றிட
தீச்செயல் புரிந்து இறுமாப்பு எய்துவர்
தீவழி கொடுஞ்செயல் செய்ய அஞ்சுவார்
செயல்களில் நேர்மையைத் தினமும் போற்றுவார்
தீதான் மனிதன் புசிக்கச் சமைக்கும்
தீதான் ஆக்கவும் தீதான் அழிக்கவும்
தீதுநே ராமல் தீவினை விலக்குதல்
சிறந்த விழுமியம் வாழும் வழிமுறை.

202) தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

தீயவை செய்வதால் தீமைகள் பெருகும்
தீமைகள் பெருகுதல் தீயினும் கொடியது
தீயவை தீப்போல் அச்சத்திற் குரியது
தீயினை அணைத்தலாய் தீவினை விலக்குவோம்
தீயவை நினைக்கும் எண்ணமே தீச்சுழல்
தீச்சுழல் சுடுமே தீநமை எரிக்குமே
தீயவை செய்திடா நினைப்பினைப் போற்றுவோம்
தீயினை அணைக்கும் நீராய்க் குளிர்வோம்.

204) மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.

மறந்தும் கூடப் பிறர்க்கு துயர்தரும்
வஞ்சகம் செய்யா வழியில் செல்லுவோம்
அறம்எனும் பண்பினை அறவே மறந்து
யாரையும் கெடுத்தால் செய்தவன் கதறுவான்
யார்க்கும் எந்தத் தீங்கும்நே ராமல்
யாரையும் மனதால் நோகடிக் காமல்
நேர்த்தியாய் பிறர்க்கு உதவிகள் செய்தால்
நிலைத்திடும் மகிழ்ச்சி வளம்பெறும் வாழ்க்கை

205) இலன்என்று தீயவை செய்யற்க செய்யின்
இலன்ஆகும் மற்றுப் பெயர்த்து.

துணையில் லாதவன் தனிஆள் என்று
தொல்லைகள் செய்து வருந்திடச் செய்பவன்
துணையில் லாத தனிஆள் ஆகுவான்
சூழும் தொல்லைகள் தானாய்ப் பெருகிடும்
செய்தவன் கேடு செய்தவன் தன்னையே
சேரும் அதனால் கேடு செய்யாதே
செய்தவம் என்பது தீயவை விலக்கல்
செய்கநீ தவத்தை தீயவை விலகவே.

# திருமந்திரச் சுவை

## போக மயக்கம்

பூங்குன்றம் இராமசாமி

அனைத்து உயிரிடத்தும் 'தனது' என்கிற உறைப்பு (பற்று) இருக்கும்.

'வீடு, வாகனம்' போன்ற பொருள்களை 'எனது' 'எனது' என மார்தட்டிச் சொல்கிறோமே..!

அதன் மேலானது, 'என் பிள்ளை!' என்கிற பற்று. அதுவே, அஃதாவது, தன் பிள்ளைமீது தாய் கொண்ட பற்றே இங்குச் சொல்லப்படுகிறது.

இவை அனைத்தும் சிற்றின்ப மயக்கங்கள்; உலகியல் போகங்கள்.

இரண்டாவதாக, உயிர் பிரியும் போது, உடலை விடுத்து உயிர் தனித்துப் பறந்து விடுகிறது அல்லவா? அதனால், 'உயிரின் வேறானது உடல்' என்பதைப் புரிந்து கொள்ளலாம். ஆக, உயிர் வேறு; உடல் வேறு.

அதே போலத் 'தான் வேறு; தன் பிள்ளை வேறு'.

இவற்றை அடித்தளமாகக் கொண்டு திருமூலரின் இப் பாடலைப் பார்ப்போம்.

குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக் கூட்டுஇட்டால்
அயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின்றது போல்
இயக்கில்லை போக்கில்லை ஏன்என்பது இல்லை
மயக்கத்தால் காக்கை வளர்க்கின்ற வாறே

(10.488)

குயில் தன் முட்டையைக் காக்கையின் கூட்டில் வைத்துவிட்டால், அந்தக் காக்கையும் சந்தேகப்படாது அதனை வளர்க்கும். அதுபோலத் 'தாயும் போக மயக்கத்தால் இயக்கின்றியும், போக்கின்றியும் ஏனென்று கேளாதும் கருவில் உள்ள உடலை வளர்க்கிறாள்'.

இயக்கில்லை: வேறு இயக்கம் இல்லை. போக்கின்றி : வேறுவழி இல்லை.

இதில் வாழ்வியல் ஒப்புமை:

அ) குயில் தன் முட்டையைக் காக்கையின் கூட்டில் இடுகிறது. அதுபோல, இறைவன் ஓர் உயிருக்கு அதன் வினைப்படியான உடலை அளித்து, அவ் உயிரை ஒரு தாயின் கருவில் வைக்கிறான். அத்தாய், 'தான் வேறு; இவ் உயிர் வேறு' என்று எண்ணாது அதனை வளர்க்கிறாள். அது தன்பிள்ளை என்கிற 'போக மயக்கத்தாலேயே!'

ஆ) காக்கைக்கு உண்மை தெரிந்ததும் அக் குயிற்குஞ்சைத் துரத்திவிடும். அதுபோல, உயிருக்குத் 'தான் வேறு; உடல் வேறு' என்கிற உண்மை புரிந்ததும் தன் உடல்மீது உள்ள பற்றினை உயிர் உதறிவிடும்.

மதுரை, கே. புதூர் பகுதியில் உள்ள ஸ்ரீ விஜயலெட்சுமி அடுக்ககத்தில் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ மகா கணபதி ஆலய குடமுழுக்கு நன்னீராட்டு விழா 03.02.2023 (தை மாதம் 20-ஆம் தேதி) அன்று நெற்குப்பை தியாகராஜன் அவர்கள் தலைமையில் வெகு விமரிசையாக நடைபெற்றது. அடுக்ககத்தில் உள்ளோரும் பொதுமக்களும் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு இறையருள் பெற்றார்கள். -தகவல்: நாகம்மை தியாகராஜன்

# மந்திரம் - 3

பெரி. முத்துராமன்

**தில்லைநாயகன் அவன் திருவரங்கனும் அவன்**
**எல்லையான புவனமும் ஏக முத்தியும் அவன்**
**பல்லுநாவும் உள்ளபேர் பகுந்துகூறி மகிழுவார்**
**வல்லபங்கள் பேசுவார் வாய்புழுத்து மாய்வரே**

என்பார் பதினெண் சித்தர்களில் ஒருவரான சிவவாக்கியர். மாணிக்கவாசகர் திருவாசகத்தில், ஏகனே அநேகன் என்பார்.

இறைவன் ஒருவனே; அவனை அவரவர் தன்மைக்கு ஏற்ப, வேண்டும் உருவில் புறத்திலும் அகத்திலும் காணலாம். அருளாளர் பலரின் வாக்கும் அனுபவமும்.

இந்த கட்டுரையை நான் எழுதிக் கொண்டிருக்கும் போது சபா அருணாச்சலம் ஐயா அவர்களின் தினசரி சிவ சிந்தனை என் காதில் விழுந்தது.

கிருஷ்ணரையே சதா சர்வ காலமும் ஆராதிக்கும், வட இந்திய கிருஷ்ண பக்தர் ஒருவர், ரமணாஸ்ரம் வந்து, ரமணரைக் கூட தரிசிக்காமல் தங்கி இருந்தார். புறப்படும் நேரத்தில், வெளிநாட்டு பக்தர் ஒருவரின் வற்புறுத்தலில், ரமணரிடம் விடை பெறச் செல்கிறார். அப்போது ரமணர், அவர் கண்களுக்கு கிருஷ்ணராக தெரிய வட இந்திய பக்தர் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். பக்தி வெள்ளத்தில் மிதந்தார். சிவனும் கிருஷ்ணனும் ஒன்றே என்பதாக தம்முடைய சிந்தனையை சபா ஐயா அவர்கள் முடிக்கிறார்கள்.

திருவந்திப்புரம் என்னும் திருவகீந்திரபுரத்தில் பெருமாள் முக்கண்ணனாக, மூன்று கண்களோடு சிவ தத்துவமாகத் தான் விளங்குகிறார்.

ஏறத்தாழ அந்த அடிப்படையில் தான், நாம் இப்போது மந்திரங்களை பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

பெயரிலேயே சிவத்தைக் கொண்டு, ஏக இறைவனை, சிவமாக வழிபட்ட சிவவாக்கியர், மூன்று மந்திரங்களை குறிப்பிடுகின்றார். அவற்றில் ஒன்று ராம மந்திரம். மற்றொன்று ஐந்து எழுத்து. மூன்றாவது, “அ” “உ” “ம” என்ற மூன்றின் ஒலிக் கலப்பான “ஓம்“

நாராயண மந்திரத்தில் இரண்டாம் எழுத்து “ரா”. நமசிவாய என்ற ஐந்து எழுத்து மந்திரத்தில் இரண்டாவது எழுத்து “ம”. இந்த இரண்டு எழுத்துக்களும் சேர்ந்தே “ராம” என்ற மந்திரம் ஆனது என்பாறும் உளர்.

ராம மந்திரத்தை இத்துடன் நிறைவு செய்து, மற்றொரு நாராயண மந்திரமான, “ஓம் நமோ நாராயணாய” பற்றி சற்றே சிந்திப்போம். பின் ஐந்து எழுத்து மந்திரத்தையும், “ஓம்“காரத்தையும் சிந்திப்போம்.

இராமானுஜர் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் 17 முறை விடாமுயற்சியுடன் ஸ்ரீரங்கத்-திலிருந்து 100 கிலோமீட்டர் தொலைவில் இருந்த திருக்கோஷ்டியூருக்கு நடந்து சென்று வைணவக் குரு நம்பி இடம் தெரிந்து கொண்ட மகா மந்திரம், நாராயண மந்திரம்.

இம்மந்திரத்தை உரைக்கும் முன் இராமானுஜரிடம் நம்பி கூறியதாவது: “நான் சொல்லப் போவது மகா மந்திரம். சொல்பவர்க்கு இவ்வுலக வாழ்வில் எல்லா நலன்களையும் தந்து, முடிவில் சொர்க்கத்தை (வைகுண்டத்தை) தரவல்லது. அத்தகைய மகா மந்திரத்தை எங்கள் குடும்பங்களில், நாங்கள் எங்கள் மூத்த பிள்ளைக்கு மட்டுமே உபதேசிப்போம். அத்தகைய மகா மந்திரத்தை இப்போது உனக்கு சொல்லப் போகின்றேன். அதை சொல்வதற்கு முன் மந்திரத்தை யாரிடமும் சொல்ல மாட்டேன் என்று சத்தியம் செய்து தர வேண்டும்”.

இராமானுஜரும் சம்மதித்து, விஷ்ணு முன் சத்தியம் செய்து கொடுத்தார்.

நம்பி மேலும் கூறினார், “சத்தியத்தை மீறினால் நீ மீளா நரகில் கிடந்து உழள்வாய்”

பின் நம்பி, ராமானுஜருக்கு உபதேசித்த மந்திரமே, “ஓம் நமோ நாராயணாய”

மந்திரத்தை தெரிந்து கொண்ட உடனேயே கோயில் கோபுர உச்சியின் மீது இராமானுஜர் ஏறினார். தனது சீடர்களையும், மற்றவர்களையும் கூப்பிட்டு இம்மந்திரத்தை தாம் உரைக்க, மற்றவர்களையும் கூறச் செய்தார். சத்தியம் மீறப்பட்டது.

(வளரும்)

# செட்டிநாட்டுப் பெயர்கள்! தெய்வ பக்தியின் வெளிப்பாடு!!

முனைவர் நா. அழகப்பன், பிஎச்.டி.,
முன்னாள் வரலாற்றுப் பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

**பெயர் வைத்துக் கொண்டவன் பேரன்:**

தாத்தாவின் பெயரைப் பேரனுக்கு சூட்டுகின்ற வழக்கம் தமிழகத்தில் வெகுகாலமாக நிலவி வருகிறது. தாத்தாவின் பெயரைப் பெற்றதாலேயே அவன் "பெயரன்" என அழைக்கப்பட்டான். இந்த "பெயரன்" என்ற சொல்லே காலப்போக்கில் "பேரன்" என மாற்றம் பெற்றிருக்கிறது.

பல்லவ அரசர் முதலாம் நரசிம்மவர்மன், தனது மூத்த மகனுக்கு, தனது தந்தையாரின் பெயராகிய மகேந்திரவர்மன் என்ற பெயரையே வைத்தார். மகேந்திரவர்மனின் பேரனாகிய மகேந்திரவர்மன், பல்லவர் வரலாற்றில் இரண்டாம் மகேந்திரவர்மன் என அழைக்கப்படுகிறார்.

சோழப் பேரரசர் விக்கிரமச் சோழன் தனது மூத்த மகனுக்கு தனது தந்தையாரின் பெயராகிய குலோத்துங்கன் என்ற பெயரையே வைத்தார். குலோத்துங்கனின் பேரனாகிய குலோத்துங்கன், சோழர் வரலாற்றில் இரண்டாம் குலோத்துங்கன் என அழைக்கப்படுகிறார்.

தாத்தாவின் பெயரைப் பேரனுக்கு வைக்கும் வழக்கம், தமிழகத்து மன்னர்களிடம் இருந்தது போலவே நகரத்தார்களிடமும் இருந்து வந்திருக்கிறது. இந்த வழக்கம் தற்போது நகரத்தார்களிடையே கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்கி விட்டதோ என்ற ஐயம் எழுந்துள்ளது. நம் செட்டிநாட்டுப் பெயர்களின் பெருமையையும், உயர்வையும் அறிந்து கொண்டு, அப்பெயர்களையே நம் குழந்தைகளுக்குச் சூட்டுவோமாக!

**ஆங்கிலேயர்கள் பெயர் சூட்டும் முறை:**

ஆங்கிலேயர்களின் பெயர்கள் வீடு (House). வெள்ளை (White), காளை (Bull). நரி (Box) என்று இருக்கும். இந்தப் பெயர்களை எப்படிச் சூட்டுகிறார்கள் தெரியுமா? குழந்தை பிறந்த செய்தியை, அக்குழந்தையின் தந்தைக்கு தெரியப்படுத்துகிறார்கள். அந்த செய்தியைக் கேட்டதும் அக்குழந்தையின் தந்தை, எந்தப் பொருளை அல்லது எந்த நிறத்தை முதன் முதலில் பார்க்கிறாரோ, அந்தப் பொருளின் அல்லது அந்த நிறத்தின் பெயரையே தனது குழந்தைக்குப் பெயராக வைத்து விடுகிறார். இது ஓர் அதிசயமான வழக்கம்தான்!

தாம் படைத்த உயிர்களை சிவனும் பார்வதியும், தாய், தந்தை பாசத்தோடு காக்கின்றனர். ஆகவேதான், சிவனை "அப்பன்" என்றும், பார்வதியை "அம்மை" என்றும் அழைக்கின்றனர். கி.பி.ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த அப்பர் தனது தேவாரப் பதிகத்தில் சிவனையும் பார்வதியையும் "அப்பன் நீ, அம்மை நீ" என்றார். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த மாணிக்கவாசகர் தனது திருவாசகத்தில் சிவபெருமானையும், பார்வதியையும்,

"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே"

என்றார்.

19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வடலூர் வள்ளலாரும் சிவனை "அப்பன்" என்றே தனது திருவருட்பாவில் அழைக்கிறார். அவ்வரிகள் பின்வருமாறு:

"அப்பா நான் வேண்டுதல்
கேட்டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட்கெல்லாம் நான்
அன்பு செயல் வேண்டும்"

இப்பாடல்களிலிருந்து சிவனும், பார்வதியும் முறையே அப்பன், அம்மை என அழைக்கப்பட்டனர் என்பது தெளிவாகிறது.

நகரத்தார் சைவ சமயத்தில் மிக்க ஈடுபாடு கொண்டவர்கள். ஆகவேதான், அவர்கள் தங்கள் புதல்வர்களுக்கு "அப்பன்" என்ற சொல்லை இறுதியாகக் கொண்ட பெயர்களாகிய நாகப்பன், அழகப்பன், முத்துக்கருப்பன், நாச்சியப்பன், பழனியப்பன், முத்தப்பன், கண்ணப்பன் என்ற பெயர்களைச் சூட்டுகின்றனர். புதல்விகளுக்கு "அம்மை" என்ற சொல்லமைந்த நாச்சம்மை, அடைக்கம்மை, மெய்யம்மை, நாகம்மை, வள்ளியம்மை, கண்ணம்மை ஆகிய பெயர்களைச் சூட்டுகின்றனர்.

இப்படிப் பெயர் சூட்டி அழைப்பதால் நகரத்தார்களுக்கு சைவ சமயத்தின் மீதுள்ள பக்தி புலப்படுகிறது. இப்பெயர்கள், நம் பெற்றோர்களின் பெயர்களாகவும் அமைந்துள்ளன. நம் பெற்றோர்களின் பெயர்களை, நம் குழந்தைகளுக்கு வைப்பதன் மூலம் நாம் நம் பெற்றோர்கள் மீதுள்ள அன்பை வெளிப்படுத்துகிறோம். அவர்களுக்கு நன்றி செலுத்துபவர்களாகவும் ஆகிறோம். பிள்ளைகளுக்கு இறைவன், இறைவியின் பெயரை வைத்துக் கூப்பிடுகின்ற போது தெய்வத்தின் நினைவு நம் மனதில் வரும். தெய்வத்தின் பெயரைச் சொன்ன புண்ணியமும் கிடைக்கும்.

நாகரிகம் என்ற பெயரில் தற்போது நகரத்தார்கள் புதுப் புதுப் பெயர்களை தங்களது குழந்தைகளுக்கு வைக்கிறார்கள். சுரேஷ், ரமேஷ், நவீன், அஸ்வீன், அரவிந்த், ஆனந்த் என ஆண் குழந்தைகளுக்கும், உஷா, கவிதா, இராதா, சித்ரா, ஜெயா எனப் பெண் குழந்தைகளுக்கும் பெயர்கள் வைக்கின்றனர். வீட்டிலே கவிதா பள்ளிக்கூடத்திலே 'அடைக்கம்மை' என்றும், வீட்டிலே சுரேஷ் பள்ளிக்கூடத்திலே 'நாச்சியப்பன்' என்றும் பெயர்களை வைத்திருக்கிறார்கள். ஏன் இந்த இரட்டை வேடம்? சைவ சமயம் சார்ந்த நல்ல தமிழ்ப் பெயர்களை வைத்து நமக்குள்ள சைவப் பற்றையும், நமக்கு நம் பெற்றோர்கள் மீதுள்ள பாசத்தையும், நன்றியையும் புலப்படுத்துவோமாக! செட்டிநாட்டுப் பெயர் சொன்னால் போதும், நகரத்தார்களின் தெய்வ பக்தி எளிதில் விளங்கும் என எல்லோரும் சொல்லும் வண்ணம் நம் குழந்தைகளுக்கு பெயர்கள் வைப்போமாக!

## மதகுபட்டி சொக்கலிங்கபுரம் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் நகரச் சிவன் கோவில் திருக்குட நன்னீராட்டு விழா

சிவகங்கை மாவட்டம், மதகுபட்டி சொக்கலிங்கபுரம் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் நகரச் சிவன் கோவில் மற்றும் மாணிக்க விநாயகர் கோவில் திருக்குட நன்னீராட்டு விழா 26.01.2023 அன்று சிறப்பாக நடைபெற்றது. நன்னீராட்டு பெருவிழாவை முன்னிட்டு சிறப்புப் பட்டிமன்றம் நடைபெற்றது. மனிதத்தேனீ ரா. சொக்கலிங்கம் நடுவராகப் பங்கேற்றார். பக்தி நெறியை வளர்ப்பவர்கள் பெண்களே என்ற அணியில் பேராசிரியர் புதுவயல் சிஎஸ். விசாலாட்சி, நகைச்சுவை நாவலர் எஸ். திருநாவுக்கரசு, ஆண்களே என்ற அணியில் புலவர் வை. சங்கரலிங்கம், வழக்கறிஞர் தேவகோட்டை முத்து முத்தையா வாதிட்டனர். பக்தி நெறியைப் பெரிதும் வளர்ப்பவர்கள் பெண்களே என நடுவர் தீர்ப்பு வழங்கினார்.

விழாக்குழுத் தலைவர் எஸ்பி. ராமனாதன் செட்டியார் தலைமை வகித்தார். செயலாளர் ஏஎன். கண்ணப்ப செட்டியார் வரவேற்புரை நிகழ்த்தினார். ஒருங்கிணைப்பாளர் செயற்குழு உறுப்பினர் பிஎல்.சுப்பிரமணியன் முன்னிலை வகித்தார். பொருளாளர் எஸ்பி. ஆறுமுகம், மேனாள் தலைவர் ஆர். திருநாவுக்கரசு செட்டியார், எம்.எஸ்.முத்துராமன், துணைத் தலைவர் ஆர்எம். நாராயணன் உள்ளிட்ட ஏராளமான பெருமக்கள் பங்கேற்றுச் சிறப்பித்தனர். யாகசாலை மற்றும் உள் ஏற்பாடுகள், பொது விருந்து, கலைநிகழ்ச்சிகள் என விரிவான ஏற்பாடுகளை மதகுபட்டி நகரத்தார்கள் சிறப்பாகச் செய்திருந்தனர்.

## வெற்றிக்கு உதவும் 25 'ஆக்சிலேட்டர்' உத்திகள்! 22

# எதையும் எதிர்கொள்!

இராம்குமார் சிங்காரம்

"எப்பப் பார்த்தாலும் பிரச்னை, பிரச்னை, பிரச்னை தான் சார். பிரச்னை இல்லாத ஒரு இடம் இருந்தா சொல்லுங்க"

"நான் எதைத் தொட்டாலும் பிரச்னை தான் சார் வருது. நல்லது செய்யணும்னு முடிவு எடுத்தால் கூட அதுவும் பிரச்னையில் போய் முடியுது"

"போன ஜென்மத்தில நான் செஞ்ச பாவம்னு நினைக்கிறேன். எதைத் தொட்டாலும் பிரச்னைல தான் போய் நிக்குது."

இப்படி எல்லாம் புலம்புபவரா நீங்கள்? அப்படியானால், வெற்றி பெறுவதில் இருந்து விலகிப் போய்க் கொண்டிருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

வெற்றியாளர்கள் பிரச்னைகளைக் கண்டு அஞ்சுவதில்லை. விலகி நிற்பதுமில்லை. பிரச்னை இல்லாத வாழ்க்கை வேண்டும் என்று விரும்புவதும் இல்லை.

பிரச்னை இல்லாத மனிதன் இல்லை. பிரச்னை இல்லாத தொழிலும் இல்லை. பிரச்னை இல்லாத வாழ்க்கையும் இல்லை என்பது அவர்களுக்குத் தெரியும். பிரச்னை வந்து விட்ட பிறகு, செல்போனை அணைத்து விட்டு எங்காவது 'எஸ்கேப்' ஆகி விடலாம் என்றெல்லாம் வெற்றியாளர்கள் ஒரு போதும் நினைப்பதில்லை. அவர்கள் பின்பற்றுகிற ஒரே தத்துவம் "எதிர்கொள்" என்பதுதான்.

மிகப்பெரிய ஆளுமைகளான மகாத்மா காந்தி தொடங்கி, வெற்றி பெற்ற தொழில் முனைவர்கள் எல்லோரும் பிரச்னைகளை நேரடியாக எதிர் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் வாழ்க்கையில் மேலே உயரும் போது உங்களுடைய டேபிளுக்கு பிரச்னைகள் மட்டுமே வந்து கொண்டிருக்கும். உங்களால் எவ்வளவு பிரச்னைகளைத் தீர்க்க முடிகிறதோ, அவ்வளவு உயரத்திற்கு நீங்கள் வாழ்க்கையில் செல்ல முடியும்.

பிரச்னைகளைக் கண்டு அஞ்சுபவர்களுக்கு வாழ்க்கையில் உயர்வதற்கான வாய்ப்பே இல்லை. பிரச்னை என்பது உங்களைத் துரத்தும் நாய் மாதிரி. நீங்கள் ஓடினால்தான் அது உங்களைத் துரத்தும். மாறாக, நீங்கள் நின்று திரும்பிப் பார்த்தால் நாய் ஓடத் தொடங்கும்.

நீங்கள் பிரச்னைக்குரிய இடத்திற்கு நேரில் சென்று, அவர்களின் பிரச்னைகளைக் காது கொடுத்துக் கேட்டாலே, அங்கே உள்ளவர்கள் அமைதியாகி விடுவார்கள். பாதி பிரச்னை தீர்ந்து விடும். பிறகு அதை முறையாக அணுகும் போது மீதி பிரச்னையையும் தீர்த்து விடலாம்.

பிரச்னை என்று வருகிறபோது அதற்கு மூன்று தீர்வுகள் தான் உண்டு. ஒன்று, பிரச்னையை நீங்கள் உடனடியாக எதிர்கொண்டு தீர்வு காண்பது. இதற்கு கூடுதல் பணம் செலவாகலாம். நேரம் விரயமாகலாம். ஆனால், தேவையற்ற இழப்புகள், பாதிப்புகள் தவிர்க்கப்படும். உதாரணத்திற்கு, வாடிக்கையாளர் சேவையில் தவறு நடந்து விட்டது. அவர் கத்துகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவரை சமாதானப்படுத்தி, தக்கவைத்துக் கொள்ள, உடனடியாக அவரிடம் வருத்தம் தெரிவித்து, தவறைச் சரி செய்து, அந்தச் சேவைக்கான கட்டணத்தை ரத்து செய்து விடலாம்.

இரண்டாவது, பிரச்னையின் ஆழம் அல்லது பிரச்னையைக் கையாளும் விதம் நமக்குத் தெரியவில்லை என்றால் அதற்குரிய நிபுணர்களை அழைத்து அவர்கள் கையில் கொடுத்து அவர்களுக்கான சேவைக் கட்டணத்தை கொடுத்து விடுவது. எடுத்துக்காட்டாக, அலுவலகத்தில் ஒரு தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுவிட்டது என்றால், அதற்குரியவர்களிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைப்பதே சரியாகும்.

மூன்றாவதாக, பிரச்னையை சற்று தள்ளிப் போடுவது. அதற்குரிய நேரம் வரும் வரை அதை கவனித்துக் கொண்டே இருந்து உரிய நேரத்தில் அதைத் தீர்ப்பது. உதாரணத்திற்கு, வங்கியில் நீங்கள் கடன் கேட்டு செல்கிறீர்கள். கடன் தரவில்லை. கொஞ்சம் பொறுத்துக் கொள்ளச் சொல்கிறார்கள். நீங்கள் பல வங்கிகளுக்கும் ஏறி இறங்குகிறீர்கள். எல்லா இடத்திலும் இப்படியே பதில் வருகிறது. வங்கிகளுக்கே நிதிப் பிரச்னை இருக்கிறது. சூழல் சரியில்லை என்றால் சற்று ஆறப் போட்டு, பிறகு சில நாட்கள் கழித்து இந்தப் பணியைத் தொடங்க வேண்டும்.

பிரச்னைகளின் போது அதிலிருந்து சில நன்மைகளும் கூட உங்களுக்குத தோன்றலாம். சில நல்ல மனிதர்களின் தொடர்புகள் உங்களுக்குக் கிடைக்கலாம்.

எனக்குத் தெரிந்த ஒரு வாடிக்கையாளரோடு ஒரு சமயம் சின்ன மனஸ்தாபம் ஏற்பட்டது. நான் சற்று கோபமாகப் பேசிவிட்டு வந்து விட்டேன். ஒரு நாள் கழித்து என் தவறு எனக்குப் புரிந்தது. உடனே அவரை நேரில் சந்தித்து, என் தவறுக்கு வருத்தம் தெரிவித்தேன். அவர் நெகிழ்ந்து போய் என்னுடைய மிக நெருங்கிய நண்பராக மாறி விட்டார். அதிலிருந்து அவர் எனக்கு முன்பைவிட அதிக வர்த்தகத்தைக் கொடுக்கத் தொடங்கினார். இப்படி பிரச்னைகள் சில சமயம் நல்ல வாய்ப்புகளாக மாறுவதும் உண்டு.

அதற்காக நீங்கள் பிரச்னைகளைத் தேடி ஓட வேண்டும் என்ற அவசியமில்லை. அது வருகிற போது நீங்கள் ஓடிவிடாமல் எதிர்கொள்ளுங்கள்.

எந்தப் பிரச்னையையும் முதல் முறை எதிர்கொள்கிற போது தான் பயம் ஏற்படும். அது போன்ற சமயங்களில் 'கடைசியில் என்ன ஆகும்' என்று சிந்தித்துப் பார்த்து அதற்கு மனதளவில் தயாராகி விட்டீர்களேயானால், உங்களுக்கு மன தைரியம் வந்துவிடும். பிறகு நீங்கள் அந்தப் பிரச்னையைக் கண்டு அஞ்சமாட்டீர்கள். 'வரட்டும். பார்த்துக் கொள்ளலாம்' என்ற தைரியத்தோடு பிரச்னையை எதிர்கொள்வீர்கள்.

மேலும், நாளை இதே மாதிரி இன்னொரு பிரச்னை வரும். அதை இன்னும் எளிதாகக் கையாண்டு விடுவீர்கள்.

எனவே பிரச்னைகள் வருகிறபோது ஓடவும் செய்யாதீர்கள்; ஒளியவும் செய்யாதீர்கள்; மாறாக எதிர்கொள்ளுங்கள். வெற்றி நிச்சயம் கிட்டும்.

(உத்திகள் தொடரும்)

தமிழ் பயண இலக்கிய முன்னோடி அறிஞர் சோமலெ அவர்களின் நூல்களை நாட்டுடமையாக்கி அவர் குடும்பத்தினருக்கு ரூபாய் பத்து லட்சம் விருதினை தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 21.12.2022 அன்று வழங்கினார். தமிழ்வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு, தலைமைச் செயலர் திரு.இறையன்பு ஆகியோர் கலந்து கொண்டனர். உலக நாடுகள், இமயம் முதல் குமரி வரை, தமிழக மாவட்டங்கள் என 104 நூல்களை 1947 முதல் 1986 வரை தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி தமிழ் பயண இலக்கியத்துறைக்கு அடித்தளமிட்ட சோமலெ அவர்களை சிறப்பிப்பதில் தமிழ் வளர்ச்சித்துறை பெருமையடைகிறது என அமைச்சர் தங்கம் தென்னரசு செய்திக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

மதுரை மாவட்டம் கொடுக்கம்பட்டி பகுதியிலும், சிவகங்கை மாவட்டம் நெற்குப்பை பகுதியிலும் எழுத்தாளர் என்ற செல்வாக்கை பயன்படுத்தி கல்வி மற்றும் சமுதயாப் பணிகளுக்கு வழி வகுத்தவர் சோமலெ அவர்களின் நூல்களை நாட்டுடமையாக்குவது நம் பகுதிக்கு பெருமையென கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

## கர்நாடக நகரத்தார் சங்க செய்திகள்

▶▶ கர்நாடக நகரத்தார் சங்கத்தினரால் பிள்ளையார் நோன்பு நிகழ்ச்சி 28-12-2022 அன்று பெங்களூர் ஜெயநகரில் நடைபெற்றது. நகரத்தார் பெருமக்கள் 785 பேர் இழை எடுத்துக் கொண்டார்கள். சங்கத்தின் மேனாள் தலைவர் திரு.ஏஎல். முத்தையா செட்டியார் அவர்கள் இந்நாள் தலைவர் திரு. முவீ. பெத்தபெருமாள், கேஎல். வள்ளியப்பன், நீல்கிரிஸ் இராம. லெட்சுமணன், கேஆர். கண்ணன் ஆகியோர் இழை எடுத்துக் கொடுத்தார்கள். அனைவருக்கும் இரவு விருந்து வழங்கப்பட்டது.

▶▶ கர்நாடக நகரத்தார் சங்கத்தினரால் இந்த ஆண்டு ராஜராஜேஸ்வரி அம்பாளுக்கு பால்குடம் எடுக்கும் நிகழ்ச்சி 18-01-2023 பெங்களூர் விஸ்வேஸ்வரபுரம் கோட்டா வெங்கட்ரமண சுவாமி ஆலயத்தில் நடைபெற்றது. 25 பேர் பால்குடம் எடுக்க 150 பேர் ராஜராஜேஸ்வரி ஆலயத்திற்கு பாதயாத்திரையாக வந்தனர். அம்பாளுக்கு அபிஷேகம் நடைபெற்றது. சங்கத்தின் மூத்த உறுப்பினர்கள் கேஎல். வள்ளியப்பன், கேப்டன் ராமனாதன் முதலியோர்களுக்கு ஆலயத்தினரால் மரியாதை செய்யப்பட்டது. சங்கத்தின் பொருளாளர் எம். சிதம்பரம் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் இஸ்ரோ வள்ளியப்பன், ஏடி. கருப்பஞ் செட்டி, அரிமளம் செல்லப்பன், ஆத்தங்குடி பிஆர். குமார், ஆத்தங்குடி முருகப்பன், தேவகோட்டை கணேசன், சொக்கனேந்தல் சுப்பு ஆகியோர் அனைத்து ஏற்பாடுகளையும் கவனித்துக் கொண்டார்கள். மதிய விருந்து அனைவருக்கும் வழங்கப்பட்டது.

# நகரத்தார் சிகரத்தார்

87

காரைக்குடி நாராயணன்

முருகப்பன் வந்தும் வராதுமாக ஃபேனைப் போட்டுக் கொண்டு அங்கு இருந்த தனி சோபாவில் உட்கார்ந்தான். காளிமுத்துவைக் கூப்பிட்டுக் காபி கொண்டு வரச் சொன்னான். அவன் எந்த மரியாதையையும் யாரிடமும் எதிர்பார்ப்பதில்லை. அவனுக்கு அவன் காரியம் நடந்தால் சரி என்று இருப்பான் என்று செட்டிநாடு முழுக்கத் தெரியும். காளிமுத்து கொண்டு வந்த காபியைச் சுடச் சுட நெருப்புக் கோழியைப் போல ஊற்றிக் கொண்டான்.

ஆச்சி கேட்டார்.

முருகப்பா. எங்க சூரக்குடி மீனாட்சி அம்மன் கோயில் காளாஞ்சி எங்கேடா?

என் ஸ்கூட்டர்லே இருக்கு. காளாஞ்சி தானே. எங்கேயும் போயிடாது.

என்னடா இவ்வளவு சாதாரணமாச் சொல்றே. காளாஞ்சிங்குறது கடையிலே விக்குற கடலை மிட்டாய் இல்லை. அது தேங்காய், பழம், வெத்திலை, பாக்கு மட்டுமில்லே. அது துளசி, அருகம்புல் மாதிரி பிராத்தனைச் செல்வம். அதுல இந்திரன், சுக்கிரன், லட்சுமி, சரசுவதி, மகாவிஷ்ணு எல்லாரும் ஒன்னா இருக்குறதா ஒரு ஐதீகம்.

செட்டியார் ஆச்சிக்குக் கைகாட்டி விட்டுப் பேசினார்.

முருகப்பா. சீதை இலங்கையில ராவணன்ட்ட சிறை இருந்த போது ராமன் அனுமனை அங்கே அனுப்பினாரு. அனுமனைப் பாத்த சீதை அங்கே இருந்த வெத்திலையைப் பறிச்சு அவன் தலை-யில வச்சு ஆசீர்வாதம் பண்ணுனா. அதனாலதான் அனுமனுக்கு வெத்திலையால மாலை போடுறோம்.

அய்யா நீங்க சொல்றது கரெக்டாப் புரியுது.

முருகப்பன் சமயம் பார்த்து ஜால்ரா அடித்தான். அவனுக்கு ஜால்ரா கை வந்த கலை. ஆச்சிக்குக் கோபம் வந்தது.

நான்தான் அவனோட பேசிக்கிட்டிருக்கேன்ல. நீங்க ஏன் மத்தியில பேசுறீங்க. உங்களுக்கு ஒன்னும் தெரியாது. முருகப்பா உங்க அய்யா லட்சுமணன் செட்டியார் குடும்பத்தில சிவகங்கை சமஸ்தானத்தோட பரிபாலனம் பண்ணுன கோயில். எங்க அய்யா சிலை மீனாட்சி அம்மனுக்கு எதிரேயும், எங்க லட்சுமி அப்பத்தா பாவை விளக்கும் இருக்கு. நீ பாக்கலே.

முருகப்பன் பேசாமல் இருந்தான். சிகப்பி ஆச்சிக்கு நியாயம் தவறி நடந்தாலோ, பேசினாலோ மிகவும் கோபம் வரும் என்று அவனுக்கு மட்டுமல்ல அந்த ஊருக்கே தெரியும்.

எங்க குடும்பம் பேணிக் காத்த தலம் இன்னைக்கு ஒருத்தருக்கொருத்தர் ஒற்றுமை இல்லாம ஒற்றைப் பனைமரமாக் கெடக்குது. முரு.லெ. கிருஷ்ணன் செட்டியாரை கிருட்டினமகின்னு மகாவித்வான் சொல்றாரு. அந்தக் காலத்தில அரசர்களைத்தான் மகின்னு சொல்றது. செட்டிநாட்டுச்சக்தி பீடங்களில் ஒன்னுன்னு இதைப் பத்தி தமிழாகரர், இராமசாமி தமிழ்க் கல்லூரி முன்னாள் முதல்வர் எழுதுறாரு. இந்த வன்னியன் சூரக்குடியைப் பத்தி செட்டிநாடும் தமிழும்-ங்குற நூல்லே தமிழ் ஆய்வாளர் சோம.லெ. சொல்லுறாரு. 650 ஆண்டுகளுக்கு முன்னாலே விசாலத்தேவன்ங்குற குறுநில மன்னன் இந்தத் தலத்தை உருவாக்குனாரு. 250 ஆண்டுகளாப் பராமரிச்சுக்கிட்டு வந்தது எங்க முரு.லெ. குடும்பம்டா.வரலாறு தெரியாம வாயைக் கொடுத்து வம்புல மாட்டிக்கக் கூடாது.

முருகப்பன் பேச ஆரம்பித்தான்.

அப்பத்தா. நானும் உங்களை மாதிரி பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் டிரஸ்டி குடும்பம்தான்.

அந்தப் பெருமையைக் காப்பாத்தத்தான் இத்தனை பேசுனேன்.

சிலர் பேசுற மாதிரி தலைகால் புரியாமப் பேசக் கூடாது. கோயில் பங்காளிகள்ட்ட குழப்பத்தை உண்டாக்கக் கூடாது. என்னை மன்னிச்சுக்குங்க அப்பத்தா. சூரக்குடி மீனாட்சி கோயில்ல வேற என்னென்ன தெய்வங்கள் இருக்கு.

ஏங்குறேன். முருகப்பன் கேக்குறான். நான் சொல்லட்டுமா?

நம்ம குடும்பப் பெருமையை யார் சொன்னா என்ன சொல்லுங்க.

செட்டியார் சொல்ல ஆரம்பித்தார்.

முருகப்பா இங்கே சங்கர விநாயகர், ஒற்றைக்கால் மண்டப விநாயகர், சாட்சி விநாயகர், கண் நிறைந்த பெருமாள், சூரமா காளி அம்பாள், அங்காள பரமேஸ்வரி, பூர்ண புஷ்களை ஸமேத சாஸ்தா,

கோட்டைக்கரைக் காளி, கருப்பர் இப்படித் தெய்வங்களுக்குத் தனித்தனியே ஆலயங்கள் இருக்கு. கிட்டத்தட்ட இது மதுரை மீனாட்சி அம்மன் கோயில் மாதிரித்தான். இங்கே கால் மாறித் தாண்டவமாடிய வெள்ளியம்பல நடராஜரும், மொட்டைக் கோபுர முனீஸ்வரரும், பொற்றாமரைக் குளமும், பஞ்சலிங்க பிரதிஷ்டையும் இருக்கு. இங்குள்ள மூர்த்தியை திருமால், சூரியன் சூரன்ங்குற அசுரன் எல்லாரும் கும்பிட்டதால இது வன்னியன் சூரக்குடின்னு பேர் வந்துச்சு. காரைக்குடி-யிலேருந்து திருமயம் போற நெடுஞ்சாலை வழியிலே அந்தக் கோபுரம் நல்லாத் தெரியும்.

ஆமா, அய்யா.

முருகப்பன் மாட்டிக் கொண்டு விழிப்பதை ராஜ்மோகன் ரசித்தார்.

செட்டியார் கடைசியாக ஒரு அறிவுரையுடன் பேச்சை முடித்தார்.

முருகப்பா. நகரத்தார்கள் எதை வேணும்னாலும் விட்டுக் கொடுக்கலாம். குலப்பெருமையை விட்டுக் கொடுக்கக் கூடாது. புரியுதா.

முருகப்பன் ஆளை விட்டால் போதும் என்று வெளியே ஸ்கூட்டரில் இருந்த காளாஞ்சியை எடுத்து வந்து கும்பிட்டு ஆச்சியிடம் கொடுத்தான். ராஜ்மோகன் ஆச்சியிடம் கேட்டார்.

ஆச்சி. சூரக்குடி கோயில் மாதிரியே உங்க நகரத்தார்களோட தனிக்கோயில்கள் எத்தனையோ பராமரிக்காம இருக்குமே அதை எல்லாம் மறுபடியும் பராமரிக்க வைக்க முடியாதா?

தம்பி. அது அந்த அந்தக் குடும்பத்தோட தற்காலிக நெலைமையைப் பொறுத்தது.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த செட்டியார் ஒரு யோசனை சொன்னார்.

இதைப் பத்தி விவரமா ஒரு கடிதத்தை நகரத்தார் குரு பீடங்களுக்கும், அறப்பணிக் கழகங்களுக்கும் எழுதலாம்னு நெனைக்குறேன்.

ஆச்சி. செட்டியாரைப் பாத்து உங்களுக்கு ஒன்னும் தெரியாது பேசாம இருங்கன்னு சொல்லுவீங்களே. பாருங்க அவரு யோசனையை.

என்னைக் கல்யாணம் பண்ணுன எழுபது வருஷத்துல எங்க செட்டியாரு உருப்படியான ஒரு யோசனை இன்னைக்குத்தான் சொல்லி இருக்காங்க.

சரிங்குறேன். பீரோவுக்குள்ள இருக்குற நகரத்தார் விவரக் களஞ்சியத்தை எடுத்துக்கிட்டு வந்து விலாசங்களைப் படி. நான் லெட்டர் எழுதுறேன்.

ஆச்சி அதை எடுத்து வந்து அதிலிருந்த விலாசங்களைப் படித்தார்.

1) கோவிலூர் மடாலயம், கோவிலூர் - 630 031, வழி - மானகிரி, சிவகங்கை மாவட்டம், போன் : 04565 236846

2) ஸ்ரீ இரவீந்திர சுவாமிகள், பாதரக்குடி ஆதீனம், பாதரக்குடி - 630 307, வழி - குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம், போன் : 04565 - 236185

3) ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள், நகரத்தார் பெண்கள் குரு, துலாவூர் ஆதீனம், துலாவூர், கொரட்டி - 630 206, வழி - குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம்.

4) இராமசாமி விசாலாட்சி அறநிலை, விசாலம் சிட்பண்ட்ஸ், உ.அ. தெரு, பள்ளத்தூர் - 630 107

5) ஏ.எம்.எம். சாரிட்டிஸ் அறநிலை, சிங்கப்பூர் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக்கழகம், 451, செக்காலை ரோடு, காரைக்குடி - 630 001, போன்: 04565 - 234179

6) தைப்பிங் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம், ஐந்தாம் எண். சாலை, வலையபட்டி - 622 411

7) நகரத்தார் ஐக்கிய சங்கம், 88, பவளக்காரத் தெரு, சென்னை - 600 001. போன் : 044 - 25268155

8) பத்துபகாட் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம், மெய்யப்பன் அம்பலம் தெரு, காரைக்குடி - 630 001..

9) பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோயில் நகரத்தார் அறநிலை, பிள்ளையார்பட்டி - 630 207

10) பினாங்கு நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம், 450, செக்காலை ரோடு, காரைக்குடி - 630 001, போன்: 04565 - 234179

11) பேரா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம், 450, செக்காலை ரோடு, காரைக்குடி - 630 001

12) மூவார் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம், 15, மார்த்தாண்டபுரம் முதல் வீதி, புதுக்கோட்டை - 622 001.

13) வயிரவன் கோயில் நகரத்தார்கள் சங்கம், வயிரவன்பட்டி - 630 315

14) ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகம், 3, சிவன் கோயில் மேற்கு வடம்போக்கித் தெரு, காரைக்குடி - 630 001.

15) திருச்சி நகரத்தார் சங்கம், 2, ஒத்தமால் தெரு, திருச்சி - 620 002.

16) சிரம்பான் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் அறப்பணி கழகம், கருதா ஊருணி வடக்கு, தேவகோட்டை - 630 302

17) கோவிலூர் மடலாயம், நிர்வாக அலுவலகம், 73, ஜவஹர் வீதி, நியூ டவுன், காரைக்குடி - 630 001, போன் : 04565 - 237134, 238068

18) THE SECRETARY, POST BOX NO.27658. SHARJAH. UNITED ARAB EMIRATES

ஆச்சி சொல்லச் சொல்ல செட்டியார் விலாசங்களை எழுதிக் கொண்டார்.

*(தொடரும்)*

## நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு 19

# அய்யப்பொழில் நாச்சியார்

மா.இளங்கோ, குழிபிறை
9842260955

### அய்யப்பொழில் நாச்சியார்

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நகரத்தார்களின் வாழ்க்கை முறைகள் பெருமை நிறையப் பெற்றதாக இருந்தது. செட்டிநாட்டுப் பகுதி மட்டுமல்லாமல் சோழர்கள், பாண்டியர்கள் ஆட்சி செய்த பகுதிகளிலும் வளமுடன் வாழ்ந்திருக்கிறார்கள். இதற்கான சான்றுகள் ஒன்றிரண்டு அல்ல ஏராளமாகக் கிடைக்கின்றன.

இந்தத் தொடர் எழுதத் தொடங்கிய பிறகு எனக்குப் பல புதிய சான்றுகள் கிடைத்தன. நான் தேடிப் பெற்ற அரிய சான்றுகளும் உண்டு. அவ்வகையான சான்றுகள் கிடைத்த இடங்கள் எவை தெரியுமா? பெரும்பாலும் இடிந்த கோயில்கள் தாம். மலையடிவாரங்களும் உண்டு. ஆள் பேர் இல்லாத கோயில்களும் உண்டு. சில சான்றுகள் சிலரிடம் இருந்தன. அவற்றைப் பதிவு செய்யவும் புகைப்படம் எடுக்கவும் மறுத்தவர்கள் இருக்கிறார்கள். அவற்றை உடனடியாக குப்பையில் எறிந்த பெருமக்களும் உள்ளனர்.

நகரத்தார்கள் கோயில்களைப் போற்றினர். அதற்கு ஒரு காரணமும் இருக்கிறது. நகரத்தார்கள் கோயில்கள் மூலமாகச் சமூகப் பணிகளைச் செய்வதை ஒரு வழியாகக் கடைப்பிடித்துள்ளனர். கோயில்கள் இறை நம்பிக்கை என்பதையும் தாண்டி சமூகத் தேவைகளையும் நிறைவு செய்திருக்கின்றன. அவர்கள் தம் நடவடிக்கைகளைக் கல்வெட்டுகளாகப் பதிந்து வைத்தனர். எனவே நகரத்தார்களின் சமூகப் பழக்கவழக்கங்கள், பண்பாடு போன்றவற்றை நாம் கல்வெட்டுகளின் மூலமாகத்தான் அறிகிறோம்.

இத்தொடரில் வரும் பெயர்கள் கல்வெட்டுக் குறிப்புகள் சிலவற்றை இதுவரையில் பலரும் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள். படிக்கும் பொழுது அப்பெயர்கள் மனதில் பதிய மறுக்கலாம். ஆண்டுகளும் அப்படியே. அவர்களிடம் நான் வேண்டுவது இதுதான், சற்று மனம் செலுத்திப் படித்தால் நகரத்தார்கள் வரலாற்றின் மேன்மையின் இனிமையைச் சுவைக்கலாம்.

கி.பி.990 இராசராசச் சோழன் காலத்துக் கல்வெட்டு ஒன்று வாலிகண்டபுரம் வாலீஸ்வரர் கோயிலில் உள்ளது. கோயிலுக்கு நகரத்தார்கள் வழங்கிய பெரியமணி, தூபக்கால் உள்ளிட்ட பல பொருட்கள் பற்றியக் குறிப்புகள் உள்ளன. நன்கொடை வழங்கியவர்கள் மணிக்கிராமத்து வியாபாரிகள், கேரளாந்தபுரத்து நகரத்தார்கள், சங்கரபாடி நகரத்தார்கள் (எண்ணெய் வணிகர்கள்) ஆகியோர்கள் (ஆவணம் 20, 2009, இல. தியாகராசன், அரியலூர்) கோயில் விளக்கு எரிக்க பொன் (தங்கம்) வழங்கினர் நகரத்தார்கள் என்ற பதிவைக் கொண்டுள்ளது இக்கல்வெட்டு. இதில் மணிகிராமத்து வியாபாரிகள் என்ற வரி நாட்டுக்கோட்டை நகரத்தார்களைச் சுட்டிக் காட்டுகிறது.

990-ஆம் ஆண்டைச் சார்ந்த ஒரு கல்வெட்டு நார்த்தாமலைத் திருமலைக்கடம்பர் கோயிலில் உள்ளது. (பு.ச.க. எண். 112) 'தெலிங்கு குலகாலபுரத்து நகரத்தார்' என்ற சொற்கள் பயிலப் பெற்று வருகிறது. நார்த்தாமலையின் பழைய பெயர் தெலிங்கு குலகாலபுரமாகும். செட்டிக்குன்றன் என்பவர் நன்கொடையாகக் கொடுத்த திருமஞ்சனக் குடம், நிலம் பற்றிய பதிவுகள் உள்ளன. இக்கல்வெட்டில் வரும் நகரத்தார் என்ற சொல் இன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் வாழ்ந்து வரும் பல்வேறு நகரத்தார் சமூகங்களையும் குறிப்பிடலாம்.

### அய்யப்பொழில் நாச்சியார் - கி.பி. 995

நாச்சம்மை, நாச்சியப்பன், நாச்சாள் போன்ற பெயர்களுக்கான காரணங்களை ஒரு முன்னோட்டமாக ஏற்கனவே கொடுக்கப்பட்டிருந்தது. மேம்போக்காக எந்தக் காரணமும் தெரியாமல், இன்று போல பிறர் பேச்சைக் கேட்டு பொருள் தெரியாமல், தங்கள் பிள்ளைகளுக்குச் சூட்டப்பெற்ற பெயர்கள் அல்ல அவை. நகரத்தார்கள் நாச்சியார் என்று இறைவிக்குச் சூட்டப்பெற்ற பெயரையே தம் பிள்ளைகளுக்கும் சூட்டினர்

கொப்பனாபட்டியில் இருந்து பாலகுறிச்சி சாலையில் உள்ள ஊர் நகரப்பட்டி ஆகும். நகரப்பட்டியும் நகரத்தார்களின் பழைய வாழ்விடங்களில் ஒன்றாகும் . நகரப்பட்டிக்கு அருகில் உள்ள கிராமம் 'கள்ளம்பட்டி' ஆகும். இங்குள்ள சிவன் கோயில் மதியீசர் கோயில்

# வள்ளிமலை நகரத்தார் வழிபாட்டு மன்றம்

வரும் சித்திரைத் திங்கள் முதல் நாளன்று வேலூர் மாவட்டத்தில் இராணிப்பேட்டைக்கு அருகில் உள்ள வள்ளிமலையில் நகரத்தார் வழிபாட்டு மன்றத்தின் வெள்ளி விழா சிறப்பாக நடைபெற இருக்கிறது. படி விழா, மலை மேல் உள்ள முருகருக்கு அபிஷேகம், தனிச்சன்னதி கொண்ட வள்ளியம்மை திருக்கோயிலில் அபிஷேக அலங்காரம், அன்னக்கொடை, மங்கலப் பொருள்கள் ஏலம் விடுதல் முதலியன நடைபெற உள்ளது. அன்று சிறப்புச் சொற்பொழிவிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விழாவில் கலந்து கொள்ள விரும்புவோர் திரு.எஸ். இராமநாதன், 97901 28567 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும். அன்னதானம் மற்றும் நன்கொடை அனுப்ப வங்கி விபரம் : CT.தியாகராஜன் KVB, Ranipet A/c. No : 1764155000006193 IFSC Code : KVBL0001764

– பேரா.ஆறு. அழகப்பன், ஒருங்கிணைப்பாளர்

எனக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறது. முதலாம் இராசராசச் சோழனின் 10-ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் இங்குள்ளன (கி.பி. 995).

இக்கோயிலில் ஓர் அம்மன் சிலை நிறுவப்படுகிறது. இறைவியின் பெயர் 'அய்யப்பொழில் நாச்சியார்' ஆகும். பிடாரி என்றும் இத்தெய்வம் அழைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பிடாரி என்ற சொல் பிற்காலங்களில் கொடுந்தெய்வம் என்ற பொருள் தரும் வகையில் கற்பிக்கப்பட்டு விட்டது. 'பிடாரி அய்யப்பொழில் நாச்சியாரை திருப்பிரதிட்டை செய்து' – என்ற வரி கல்வெட்டுகளில் குறிக்கப்படுகிறது. அய்யப்பொழில் என்பது ஊர்ப்பெயர் அல்லது இடத்தின் பெயராக இருக்கலாம். இந்த இடம் எங்கே இருக்கிறது என்பதை உறுதிபடக்கூற முடியவில்லை. நகரத்தார் உள்ளிட்ட வணிகக்குடிகள் அனைவருமே 'அய்யப்பொழில் நாச்சியார்' என்றும் 'அய்யப்பொழில் பரமேசுவரிக்கு' என்றும் குறிப்பிட்டே கல்வெட்டுகளை வெட்டியுள்ளனர். முனசந்தைக் கல்வெட்டு கி.பி.853-ம் ஆண்டைச் சேர்ந்தது. ஏறத்தாழ 150 ஆண்டு கால இடைவெளியில் இக்கல்வெட்டு காணப்படுகிறது. இந்த 150 ஆண்டு கால இடைவெளியில் கோயில் கட்டுமானங்கள் வளர்ந்திருப்பதைப் பார்க்க முடிகிறது. நகரத்தார்களின் அறச்செயல்களும், சமூக செயல்பாடுகளும் பெரிதும் அதிகரித்திருக்கிறது. அன்றைய சூழ்நிலையில் இத்தகைய வளர்ச்சி என்பது வியக்கத்தக்கதே. அதற்குக் காரணம் செல்வநிலை உயர்ந்திருக்கிறது. போர்கள் மக்கள் வாழ்க்கையைப் பாதிக்கவில்லை. வேளாண்மையும் நல்ல முறையில் நடந்திருக்க வேண்டும். மற்ற சமூகத்தினரை அரவணைத்துச் சென்றதும் ஒரு காரணமாகும்.

இந்த பிடாரி அம்மனின் சிலை கள்ளம்பட்டி கிராமத்தில் உள்ள வயல் நடுவில் உள்ள சின்னஞ்சிறு ஓட்டுக்கூடத்தில் தற்போது வைத்து வணங்கப்படுகிறது. அருகில் அய்யனார் சிற்பங்களும் உள்ளன. நாச்சியப்பன், நாச்சம்மை, நாச்சாள் என்ற பெயர்களைக் கேட்டால் அதன் பின்னணியில் நகரத்தார்களின் ஆயிரம் ஆண்டுப் பெருமை குடிகொண்டுள்ளது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

அய்யப்பொழில் நாச்சியார் என்ற பெயர் குறிப்பிடப்படும் கல்வெட்டுகளில் கள்ளம்பட்டிக் கல்வெட்டே மிகப் பழமையானது. 1000 ஆண்டுகளுக்கு முன்னர் இப்பகுதியில் நகரத்தார்கள் மிகுந்த வலிவோடும், புரவலர்களாகவும் இருந்திருக்கின்றனர் என்பதற்கான மிகத் தொன்மையான சான்று இதுவேயாகும். (பு.ச.க.எண். 134, முதலாம் இராஜராஜத்தேவர், யாண்டு 10 – 995) இதே கோயிலில் உள்ள கல்வெட்டு நகரத்தார் துணையோடு கோயிலுக்குத் திருவமுது படிக்காக வழங்கிய நன்கொடைகள் பற்றியப் பதிவுகள் உள்ளன. (பு.ச.க. எண். 148 குலோத்துங்கச் சோழன், யாண்டு 13).

## கள்ளம்பட்டியில் வணிகச் சின்னங்கள்

கள்ளம்பட்டி மதியீசர் கோயிலுக்கு அருகில் இது வரையில் பதிவு செய்யப்படாத கல்வெட்டு ஒன்றைக் கண்டுபிடிக்க நேர்ந்தது. நகரத்தார்கள் கல்வெட்டுகளில் மட்டுமே காணக்கூடிய சின்னங்கள் அக்கல்வெட்டில் காணப்பட்டன. பிடாரி அம்மனின் திருவுருவம், மதியீசர் கோயில் கல்வெட்டு மற்றும் வணிகச் சின்னங்கள் அனைத்தும் நகரத்தார்களையே சுட்டுகின்றன. எனவே கள்ளம்பட்டி நகரத்தார்களின் ஒரு முக்கியமான ஊராக இருந்திருக்கிறது.

## சமுத்திராபட்டியும் நகரத்தார்களும்

கி.பி.1050-ஐச் சார்ந்த மற்றொரு கல்வெட்டும் சமுத்திராபட்டியில் கிடைத்தது. (பேராசிரியர்கள்; எ.சுப்பராயலு, ஆர்.வெங்கட்ராமன், கோ.விஜய வேணுகோபால், ஆவணம் 2, 1992). விக்கிரம சோழபாண்டியன் ஆட்சியாண்டு 26 எனக் குறிப்பிடப்பட்ட இக்கல்வெட்டு 106 வரிகளைக் கொண்ட தனிக்கல்லாக உள்ளது. இன்றும் சமுத்திராபட்டி 'பழனித் தைப்பூச வழிநடைப் பயணத்தில்' ஒரு முகாமையான இடத்தில் இருப்பதை அனைவரும் அறிவர். நகரத்தார் வரலாற்றின் ஒப்பற்ற சான்றான இக்கல்வெட்டு தற்போது மதுரை திருமலை நாயக்கர் மகால் அருங்காட்சியகத்தில் வைத்துப் பாதுகாக்கப்படுகிறது,

தென்னாடு, இலங்கை, தென்கிழக்கு ஆசியா ஆகிய நாடுகளில் வணிகம் செய்தவர்கள் ஐநூற்றுவர் வணிகக் குழுவினர். இக்குழுவினர் தொடர்பான கல்வெட்டுகள் பல கிடைத்தாலும், கிடைத்தவற்றுள் மிகப் பழமையானதும், மிகுதியான புகழ்ச் சொற்களைக் கொண்டதும் சமுத்திராபட்டிக் கல்வெட்டே என்று ஆவணம் இதழ் கருதுகிறது.

இக்கல்வெட்டில் வணிகக் குழுக்கள் தொடர்பான செய்திகள் உள்ளன. 'அய்யப்பொழில் பரமேசுவரிக்கு மக்களாகிய' என்று தொடங்கும் வரிகள் வணிகக் குழுக்களுக்கு அடையாளம் தருகிறது. பலர் கூடி எடுத்த ஒரு முடிவை அக்கல்வெட்டு தெரிவிக்கிறது. ஐநூற்றுவர் குழுவின் ஒரு பிரிவான 'அழகிய பாண்டிய பெருநிரவி' குழுவினர் 'பனியாநாடு' என்ற பகுதியை 'நானாதேசி எறிவீரபட்டணம்' என்ற பெயரில் புதிய வீரதளத்தை உருவாக்கிய செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. பெருநிரவி, எறிவீரபட்டனம் போன்ற சொற்களின் விளக்கங்களைப் பின்னர் பார்க்க இருக்கிறோம். எனவே இப்பொழுது பெயர்களை மட்டும் தெரிந்து கொள்வோம்.

நகரத்தார் தொடர்பான வணிகக் குழுக் கல்வெட்டில் காணப்பெறும் சொற்கள் இக்கல்வெட்டிலும் பயன்படுத்தப் பட்டுள்ளன. அந்தச் சொற்கள் யாவன வாசுதேவன், கண்டழி, அய்யப்பொழில் பரமேசுவரிக்கு மக்களாகிய, 18 பட்டனம், 32 வேளாபுரம், 54 கடிகைத்தாவளம் (இக்கல்வெட்டில் மட்டும் 54 கடிகைத்தாவளம் என வருகிறது. ஏனைய கல்வட்டுகளில் 64 என்றே குறிப்பிடப்படுகிறது) செட்டி, செட்டி புத்திரன், நான்கு திசை பதினெண்பூமி நானாதேசித் திசையாயிரத்து ஐநூற்றுவர், நாட்டுச்செட்டி, திசைச்செட்டி, நானாதேசி எறிவீரபட்டிணம், அய்யப் பொழில், ஐநூற்றுவர் ஆகியனவாகும்.

•கன்னடக் கல்வெட்டுகளில் காணப்படுகின்ற 'காமுண்டஸ்வாமி' என்ற சொல் இக்கல்வெட்டிலும் காணப்படுகிறது.

•நாட்டுச்செட்டி என்ற சொல்லும், திசைச் செட்டி என்ற சொல்லும் அடுத்தடுத்து வருவதால் இரண்டு செட்டிகளும் வெவ்வேறானவர்கள் எனக் கருத வேண்டியுள்ளது. மிக விரிவான கல்வெட்டு இது என்ற போதிலும் இந்தச் செய்திகள் போதுமானவை எனக் கருதுகிறேன். பழந்தமிழகத்தின் பெரும் சிறப்புக் கொண்ட கல்வெட்டுகள் பல. அவற்றுள் பல நகரத்தார்களை மட்டுமே சுட்டுகின்றன. சமுத்திராபட்டிக் கல்வெட்டு அதில் முக்கியமானது. –

சமுத்திராபட்டியில் குடிகொண்டது தமிழ்க்கடவுள் முருகன் மட்டுமல்லன். நகரத்தார்களின் பண்பாடும் தான்.

(வரலாறு வளரும்)

# அம்பத்தூருக்கு அருகில் முதியோர் ஓய்வு இல்லம்

சென்னை அம்பத்தூருக்கு அருகில் அயப்பாக்கத்தில், நமது நகரத்தார்கள் வயது முதிர்ந்த காலத்தில் தங்கி ஓய்வெடுக்க வசதியாக நகரத்தார் ஹெரிடேஜ் டிரஸ்ட் சார்பாக "அருள் வனம்" என்கிற பெயரில் ஓய்வில்லம் ஒன்றை தொடங்குகிறோம்.

இயற்கை எழில் கொஞ்சும் சூழலில் நல்ல காற்றோட்டத்துடன் கூடிய பசுமையான தோட்டத்துடன் அமையப்பெற்ற கட்டடத்தில் இந்த இல்லம் செயல்பட்டு வருகிறது.

இந்த ஓய்வில்லத்தை நகரத்தார் ஆச்சி / செட்டியார் இருபாலரும், 60 அகவையைக் கடந்தவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். அவரவர் வேலையை அவரவர்களே செய்து கொள்ளும் நபர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். 15 பேர் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவர். முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்கிற அடிப்படையில் தற்போது பதிவு நடைபெற்று வருகிறது.

மேலும் இந்த ஓய்வில்லத்திற்கு சமையல் பாத்திரங்கள், மாதந்தோறும் சமைப்பதற்குரிய மளிகை சாமான்கள், கட்டில், நாற்காலி போன்ற உபகரணங்கள் வழங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளுங்கள். வசதி குறைந்தவருக்கு மாதக்கட்டணத்தில் ஒரு பகுதியைச் செலுத்தியும் ஆதரிக்கலாம்.

இந்த சேவைப் பணியில் இணைந்து செயல்பட விரும்புவோர் எங்களை அழைக்கலாம்.

தொடர்புக்கு:
அரசு அழகப்பன், (கோட்டையூர்)
Cell: 94441 31213 / 86676 25696

# பறவைகள் பலவிதம்

சிறுகூடல்பட்டி முத்துக்கருப்பன்

**பறந்துகொண்டே இருப்பேன்:**

பசிஃபிக் கடற்பகுதியில் வாழும் ஆல்பட்ராஸ் பறவைகளுக்கு மிக நீளமான, வலிமை நிறைந்த சிறகுகள் இருக்கின்றன. நம்மில் சிலருக்கு நடந்து கொண்டே இருப்பதென்றால் மிகவும் பிடிக்கும் இல்லையா? அதைப் போல் ஆல்பட்ராஸ் பறவைகளுக்கு வானில் பறந்து கொண்டே இருப்பதென்றால் மிகவும் பிடிக்கும். கடற்பரப்பின் மேல், மீன்களைக் கொத்திச் சாப்பிட்டுக் கொண்டே இருநூறு மைல்கள் கூடப் பறந்து திரிய

முடியும். அப்படிப் பறக்கும் போது விரித்த சிறகுகளை அசைக்காமல் காற்றில் மிதந்து செல்லக் கூடக் கற்றுக் கொண்டிருக்கின்றன. அவ்வப்போது பறந்த படியே ஒரு நிமிடம் தூங்கிக் கொள்ளவும் அவற்றால் முடியும்.

**குடும்பம் நடத்த ஒருகூடு:**

ஒரு பெண் பறவை தான் தேர்ந்தெடுத்துக் கொண்ட ஆண் பறவையோடு இணை சேர்ந்தபின், இரண்டும் பொறுப்புள்ள அப்பா-அம்மாவாக இருப்பதற்கு மிகவும் அக்கறை காட்டுகின்றன. முதலில் ஆண்பறவை தன் கலைத் திறமையையும், பொறியியல் திறமையையும் காட்டிக் கூடு கட்டுகிறது. கூடுகள் பலவிதம். டெர்ண் என்ற கடற்பறவை கடற்கரையில் மண்ணை லேசாகப் பருவி எடுத்துக் கட்டும் எளிமையான சிறிய கூடுமுதல், கலைநுணுக்கம் வாய்ந்த தூக்கணாங் குருவிக் கூடுவரை எத்தனை வகையான கூடுகள்! பறவை இனத்தில் நூற்றுக்கு அறுபது பறவைகள், கோப்பை வடிவிலேயே எளிமையாகக் கூடு கட்டி விடுகின்றன. க்ரெப் என்ற வாத்துகளின் இனம், ஓடை நீரில் குச்சிகளையும், நீர்த் தாவரங்களையும் கொண்டு சிறிய தெப்பம்போல் கட்டி அதில் தன் கூட்டினை மிதக்க விடுகிறது. நீண்டு வளைந்து கூர்மையாக இருக்கும் அலகினை உடைய ஹார்ன்பில் என்னும் பறவை மரத்தில் உள்ள பொந்துகளையே கூடுகளாக்கி தன் முட்டைகளை இட விரும்புகின்றன. ஆண் பறவை ஈர மண்ணையும், குச்சிகளையும் கொண்டு, அந்த மரப்பொந்தில், சிறியவழி மட்டும் வைத்து பாதுகாப்பாக மூடி விடுகிறது. ஆண்பறவை பூச்சிகள், பழங்கள் போன்ற உணவுப் பொருட்களைக் கொண்டு வந்தால், பெண்பறவை கழுத்தை மட்டும் வெளியே நீட்டி அதை வாங்கிக் கொள்கிறது.

வட அமெரிக்காவில் ஸ்விஃப்ட் என்னும் பறவை கூடு கட்டத் தேர்ந்தெடுக்கும் இடம் நம் கற்பனைக்கும் அப்பாற்பட்டது. ஓர் அருவியின் பின்புலத்தில் உள்ள செங்குத்தான பாறையில் காணப்படும் வெடிப்புகளைத் தன் குஞ்சுகளுக்குப் பாதுகாப்பான இடமாகத் தேர்ந்தெடுத்து அங்கே கூடு கட்டிக் குஞ்சு பொரிக்கும். விந்தையாக இருக்கிறதா?

சிலவகைக் குருவிகள், பாம்புகள் உரித்துப்போட்ட சட்டைகளைக் கூடு கட்டப் பயன்படுத்தி இருக்கின்றன. வேறு சில பறவைகள் நாயின் உரோமத்தையும், சிகரெட் முனைகளையும் வைத்துக் கூடுகள் கட்டி இருக்கின்றன. அவை சிகரெட் முனையிலுள்ள நிகோடின் ஒட்டுண்ணிகளை விரட்டிவிடும் என்று அறிந்துள்ளதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

முட்கள் நிறைந்த மரங்களையும், எறும்புகள் மொய்க்கும் மரங்களையும் தன் குஞ்சுகளுக்கு எதிரிகளிடம் இருந்து பாதுகாப்புக் கிடைக்கும் என்று கருதித் தேர்ந்தெடுக்கும் பறவைகளும் உண்டு.

உலகத்தின் இன்றைய அமைப்பு, உயிரினங்களின் வாழ்க்கை முறை இவையெல்லாம் இயற்கையில் ஏற்பட்ட பல நிகழ்வுகளால் விளைந்த மாற்றங்களின் தொகுப்பு. வெப்பம், வெளிச்சம், நீர், நிலம், ஈர்ப்பு விசை, மின் விசை போன்ற பல ஆற்றல்களின் எதிர் வினையால் இந்த மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. எத்தனை மாற்றங்கள் நிகழ்ந்தாலும், எல்லா உயிரினங்களுக்கும் பொதுவான கடமை ஒன்றை இயற்கை விதித்திருக்கிறது. அது என்னவென்றால், “நீ இந்த உலகத்தில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்தாய் என்பதற்கு அடையாளமாக உன் இனத்தைப் பெருகச் செய்ய வேண்டும்.”

பறவைகள் இனத்திற்கும் இயற்கை விதித்திருக்கும் நியதி அதுதான். ஆனால் பறவைகளின் வாழ்க்கையைப் பற்றிய செய்திகளைப் படிக்கும் போது ஒன்று தெளிவாகத் தெரிகிறது. இந்தக் கடமையை ஆற்றுவதில், பறவைகள் மனிதனைவிடப் பண்பட்ட, கட்டுப்பாடுள்ள விதிகளைக் கடைப்பிடிக்கின்றன. அதற்கென்று உள்ள பருவம் – குயில்களுக்கு வசந்த காலம் என்பதைப் போல – வரும் போது ஒவ்வொரு பறவையும் தனக்கென்று ஓர் இணையைத் தேடிக் கொண்டு, இரண்டும் சேர்ந்து கூடு கட்டி, முட்டை இட்டு, குஞ்சுகள் பொரித்து, அந்தக் குஞ்சுகள் தாங்களே இரை தேடிக் கொள்ளும் காலம் வரை, அவற்றிற்குப் பாசத்தோடு உணவு ஊட்டுகின்றன. குஞ்சுகளுக்குத்தைரியம்பிறக்கும்போது தாங்களே வானில் சிறகடித்துப் பறந்து புதிய வாழ்க்கையைத் தேடிப் புறப்பட்டு விடுகின்றன. ஆண் பறவையும், பெண் பறவையும் தங்கள் கடமையைப் பூர்த்தி செய்த திருப்தியுடன், பிரிந்து போய் விடுகின்றன. அடுத்த பருவம் வரும் போது, மீண்டும் இணை தேடல், கூடுகள், முட்டைகள், குஞ்சுகள், இரை தேடல் என்று, தங்கள் வாழ்க்கையைத் திரும்பத் திரும்பப் புதுப்பித்துக் கொண்டு, அமைதியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவைகளின் அனுபவத்தில் அவை கற்றுக் கொண்ட வாழ்க்கை முறை அதுதான். ஒருவனுக்கு ஒருத்தி, பாரம்பரியப் பெருமை என்ற தத்துவங்களையெல்லாம் அவைகளுக்குக் கற்றுக் கொடுக்க யாருமில்லை. ஆனால் மனிதர்களைப் போல் அவை ஒழுக்கம் தவற நினைப்பதில்லை, பிறன் மனை கவர்வதில்லை. இன்னொரு செய்தி, இயற்கையில் விளையும் காய்களும், கனிகளும், மரங்களும், செடிகளும் எல்லா உயிரினங்களுக்கும் உரியவை என்பதைப் பறவைகள் நம்புகின்றன. தனக்கு மட்டும் என்று தேவைக்கு மேல் திரட்டி வைத்துக் கொள்ள அவை நினைப்பதில்லை. வாழும் காலம் வரை கூடி வாழ நினைக்கின்றனவே தவிர, ஒன்றை ஒன்று சார்ந்து வாழ எந்தப் பறவையும் நினைப்பதில்லை.

கவியரசர் கண்ணதாசன் பறவைகளின் இந்த மன நிலையைத் தன் கவிதையில் இப்படிச் சித்தரித்திருக்கிறார்:

"பெட்டைக் கோழிக்குக் கட்டுச் சேவலைக் கட்டி வைத்தவன் யாரடா – அவை
எட்டுக்குஞ்சுகள் பெற்றெடுத்தபின் சோறுபோட்டவன் யாரடா
வளர்ந்த குஞ்சுகள் பிரிந்த போதிலும் வருந்தவில்லையே தாயடா
மனித ஜாதியில் துயரம் யாவுமே மனதினால் வந்த நோயடா!"


ELEX India Pvt. Ltd.,
Plot No.A-97, Road No.18, Wagle Industrial Estate
Thane – 400 604
Tel.Nos.: 91-22-2580 6623 / 2580 6624
Email: info@elexindia.co.in
Website: www.elexindia.co.in

ELEX

Electrostatic Precipitators
Electrostatic Tar Precipitators
Bag Filters & RABH
Hybrid Filters
Upgradation and Retrofit of ESP


Cooler ESP

ETP
(Electrostatic Tar Precipitator)

RABH
(Reverse Air Bag House)

Hybrid Filter for Cement Mill



## வரலாறு சொல்லும் மடல்கள் 15

# வாழ்த்தாக வந்த வரலாற்றுமடல்

கிருங்கை சேதுபதி 94431 90440

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதி னாயிரம் நாட்டல்
பின்னர் உள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறி வித்தல்"

கல்வி தொடர்பான மகாகவி பாரதியாரின் இந்தக் கவிதை வரிகளை மேற்கோள் காட்டாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால், இத்தகு அறப்பணிகளைத் தமது உயிர்ப் பணியாகக் கொண்டு தலைமுறை தவறாமல் செய்து கொண்டிருப்பவர்கள் மன்னர் பின்னோரான நகரத்தார்கள். ஊர்கள் தோறும் அன்ன சத்திரம் நாட்டுதலும், உலக அளவில் ஆலயங்கள் நாட்டுதலும், இன்னும் என்னென்ன தரும காரியங்கள் இருக்கின்றனவோ அவையனைத்தையும் தொடங்கிச் செய்வதோடு தொடர்ந்து தடையின்றி நடைபெறவும் ஏற்பாடு செய்து தம் பெயர் விளங்கி ஒளிரும்படியாகச் செய்கிறவர்கள் என்று புகழ் பெற்றவர்கள். அதே நேரத்தில் சரசுவதி தேவி கொலுவீற்றிருக்கும் கல்வி நிலையங்களையும்அவர்கள்தோற்றுவித்திருக்கிறார்கள்.

இந்தப் பாடலைப் பாடிய பாரதியாரின் நல்லாசி களோடு, சரசுவதி தேவியின் திருப்பெயரிலேயே, அந்தப் பெயரிலேயே செட்டிநாட்டுப் புதுவயலில் நிர்மாணித்தவர்கள் இளைஞர் மூவர். கானாடுகாத்தானுக்கு இரண்டாம் முறையாக, பாரதி வந்த போது நேரில் சந்தித்து ஆசி பெற்றும், அவர்தம் உரையால் உந்துதல் பெற்றும் வந்த கையோடு தன் சொந்த ஊரான புதுவயலில் ஸ்ரீ சரசுவதி சங்கத்தை, மகாகவி பாரதியார் மறைந்த மறு ஆண்டில், துந்துபி ஆண்டு, ஆடி மாதம், ஒன்பதாம் நாள் (24.7.1922) அன்று தோற்றுவித்தார்கள்.

அச்சங்கத்தின் அறுபதாம் ஆண்டுவிழாப் போதில், அந்த நிகழ்வை நினைவு கூர்ந்து, அதன் தலைவரும் தோன்றக் காரணர்களுள் ஒருவருமான, பெரி. சித. இராமாசாமி செட்டியார் எழுதுகிறார். "சங்கம் தோன்றிய அந்த நாளை நினைக்கும் போது மிகவும் பெருமையாக இருக்கிறது. இந்நகர் அ.மு.வீர.கட்டிட கேட்டில் உயர்திரு சா.சிதம்பரம் செட்டியார் அவர்களும், திரு. அ.பெரியகருப்பன் செட்டியார் அவர்களும், நானும் ஆகிய மூவரும் சேர்ந்து, அந்த நன்னாளில் சங்கத்தினைத் தொடங்கி, தொடக்க விழாவினை நடத்தினோம். அந்நாளில் ஊரெல்லாம் இளைஞர் சங்கம் என்ற பெயருடன் பல சங்கங்கள் இருக்க, நாங்கள் மட்டும்தான் கல்விக்கரசி சரசுவதியின் பெயரில் ஒரு சங்கத்தை துவங்கினோம். அந்த ஆரம்ப விழாவிற்குத் தலைமை தாங்கிய பெருந்தகை எங்கள் வழிபாட்டுக்குரிய கோட்டையூர், திரு. அ.ராம.அ. கருப்பன் செட்டியார் அவர்கள் (ஏ.கே.செட்டியார், குமரி மலர் ஆசிரியர்) அவர்களின் கைராசிதான் இன்று சங்கம் பெற்றிருக்கும் வளர்ச்சி என்றால் மிகையாகா."

இதே தொடக்க நிகழ்வை நினைவு கூர்ந்து, ஏ.கே. செட்டியார், இச்சங்கத்தின் பொன் விழா ஆண்டில் பின்வருமாறு எழுதுகிறார்.

"பத்து அல்லது பதினோரு வயதுள்ள சுமார் ஐந்தாறு பள்ளிச் சிறுவர்கள் போதிய கல்வி அறிவோ அல்லது வசதியோ இல்லாமல், உற்சாகம் ஒன்றையே மூலதனமாகக் கொண்டு தொடங்கியது இச்சங்கம். அதிர்ஷ்டவசமாக, சங்கம் தொடங்கிய சில ஆண்டுகளுக்குப் பின் கல்வித் தொண்டிலும் சங்கத்தினர் ஆர்வம் காட்டி சரசுவதி வித்தியாசாலையைத் தொடங்கினர்,

இன்றையப் புதுவயலின் முன்னேற்றத்திற்கு இவ்வித்தியாசாலைதான் ஆணிவேர் என்று கூறலாம். சங்கத்தினர் வித்தியாசாலையைத் தொடங்காமலிருந்திருந்தால் அச்சமயத்தில் தோன்றிய எண்ணற்ற சங்கங்களைப் போல இதுவும் மறைந்திருக்கும்."

உண்மைதான் என்பதற்கு எத்தனையோ சான்றுகள் இருக்கின்றன. இருந்தாலும், சீரிய நோக்கமும் சிறந்த செயல்பாடும்தான், இந்தச் சங்கத்தை இன்றைக்கு நூற்றாண்டு விழாவை நோக்கிக் கொண்டு வந்திருக்கிறது.

இச் சங்கம், தனது பத்தாவது வயதில், (1933-ஆம் ஆண்டில்) ஸ்ரீசரசுவதி வித்தியாசாலையைத் தோற்று வித்தது. பின்னர், நடுநிலைப்பள்ளியாக வளர்ந்து, 1982-ஆம் ஆண்டில், ஸ்ரீசரசுவதி வித்யாசாலை பெண்கள் உயர்நிலைப்பள்ளியாகி, இப்போது மேனிலைப் பள்ளியாகச் செயல்பட்டு வருகிறது. சரசுவதி சங்கத்தின் கல்வி நிறுவனங்களாக, 90 வயதுடைய ஸ்ரீசரசுவதி வித்யாசாலைத் தொடக்கப் பள்ளியும் ஸ்ரீசரசுவதி வித்தியாசாலை மேனிலைப் பள்ளியும் இப்போது சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

தொடரும்...

# நமது செட்டிநாடு சந்தா படிவம்

நமது செட்டிநாடு

திரு/திருமதி.....

முகவரி.....

.....

கோவில்.....பிரிவு.....சொந்த ஊர்.....

கைபேசி..... தொலைபேசி..... ▸▸ இமெயில் .....

▸▸ புதிய சந்தா ☐ / சந்தா புதுப்பித்தல் ☐ / Ref No.....

செலுத்திய சந்தா ரூபாய் ஓராண்டு 300/- இரண்டு ஆண்டு 500/- ஐந்து ஆண்டு 1250/-

☐ மணியார்டர் ☐ காசோலை ☐ RTGS ☐ GOOGLE PAY மூலம் செலுத்தி விவரம் தெரிவிக்கவும்.

வங்கி...../ எண்...../ நாள்.....

அனுப்ப வேண்டிய முகவரி: "நமது செட்டிநாடு" (மாத இதழ்), ராணி சீதை அரங்கம், 3வது தளம், 603, அண்ணா சாலை, சென்னை 600 006. தொ.பே.எண்: 04442951888

வெளிநாடு சந்தா விவரம்: சிங்கப்பூர், மலேசியா ஆண்டிற்கு SG $ 40/ பிற நாடுகள் ஆண்டிற்கு US $50/

## Cheque to be drawn in favour of

Chettinad Print Media P Ltd,
A/C No: 6412480441
Indian Bank, Thousand Lights Branch,
Chennai - 600 006. IFSC : IDIB000T020,

Or

Chettinad Print Media P Ltd.
A/C No:57500000199320
HDFC Bank, R.K.Salai Branch,
Chennai - 600 004, IFSC : HDFC0001097

டிடி/காசோலை அனுப்ப அஞ்சல் துறையின் துரித அஞ்சல் (Speed Post) சேவையைப் பயன்படுத்துங்கள்


VIKRAAM ENTERPRISES

- Feldsper
- Laterite
- Limestone
- China Clay
- Fly Ash
- Iron ore
- Alternate Fuels

G.Krishnamoorthy
169, 6th Street Extension, Gandhipuram, Coimbatore - 641 012
E.Mail Vikraamanterprise@gamil.com, Krishnamoorthy_g@live.com
Cell: 98429 86960

Namadhu Chettinad Published and Printed by N.Avadaiappan on behalf of M/S Chettinad Print Media (P) Ltd., Printed at DOT LINE DATA, New No.3, Old No.2, 21st Avenue, Ashok Nagar, Chennai - 600 083 and Published from Chettinad Print Media (P) Ltd., Rani Seethai Hall Building, 603, Anna Salai, Chennai - 600 006. Editor : N.Avadaiappan

அறிந்து கொள்வோம் - 13

# NAGARATHAR CHAMBER OF COMMERCE (NCC)

The single largest exclusive entrepreneurship forum for Nagarathars around the world.

NAGARATHAR™ CHAMBER OF COMMERCE
SAIL TO PROSPER

## MEET OUR MEMBERS

A series to showcase the diverse members in the forum

**MEYYAPPAN SHANMUGAM**
Kandramanickam
**SHARPLINE GROUP OF COMPANIES, MUMBAI.**
**MANUFACTURING MACHINES AND COMPONENTS FOR AEROSPACE , DEFENSE, OIL &GAS, HEAVY ENGG, ETC**
9820664025

**A KASI MEYYAPPAN**
Virachilai
**A KASI MEYYAPPAN, B.Com.,F.C.A**
**CHARTERED ACCOUNTANT**
044 - 23722433, 24801696

**RAMANATHAN SP**
Nerkuppai
**CHETTINAD SNACKS / FINANCIAL CONSULTANT / ONLINE TRADING ( NSE / NFO / MCX )**
9841270813 / 9445816276

**M.SRINIVASAN**
Poolankurchi
**MM ENGINEERS AND AGENCIES**
**Auto mobile and induatries**
9840810076

**M. AR. MUTHU**
Pon.Puduppatti
**Nivedaa Devices, Arun Systems & Communications**
**IT products Sales and Service.**
**Electrical goods, Electronic Items Sales**
9840091532

**SARAVANAN L**
Melaisivapuri
**LSSM & CO**
**CHARTERED ACCOUNTANTS**
9952921007

**Join us now. Be a part of our journey...**
admin@nagaratharcoc.com | **+91 63806 60796**
**www.nagaratharchamberofcommerce.com**

CONNECT
CREATE
COLLABORATE

Namadhu Chettinad Tamil Monthly Regd. as Newspaper with RNI No.TNTAM / 2015 / 63956 Postal Registration No.TN/CH(C)583/2022-2024
Licensed to post without prepayment under WPP No.TN/PMG(CCR)/WPP-542/2022-2024 and published on first week of every month.
Posted at Egmore. RMS PATRIKA Channel Posted on 15-21 February - 2023

Chettinad
Hospital & Research
Institute

Won Award in
CII TN's MedClave Center of
EXCELLENCE
HONOURS '22
for the Speciality
DIAGNOSTIC CENTER - LABORATORY

CII
Confederation of
Indian Industry

www.care.edu.in